டிசம்பர் 2019

@NewsRotary /RotaryNewsIndia

ரோட்டரி நியூஸ்

Rotary

Vol.2, Issue 7 | Annual Subscription ` 420

திருவனந்தபுரம் மாளிகையில் RIPN சேகர் மேத்தா மற்றும் ராஷி

RIPN சேகர் மேத்தா மற்றும் ராஷி திருவனந்தபுரம் ராஜக் குடும்பத்தைச் சேர்ந்த கௌரி அஸ்வதி மற்றும் கௌரி பூயம் அவர்களுடன். PDG ஜான் டேனியல், அவர் மனைவி மீரா மற்றும் Rtn விஜயலஷ்மி நாயர் அவர்களும் உள்ளனர்.

கௌரி பூயம், ராஷி, RIPN மேத்தா மற்றும் கௌரி அஸ்வதி.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

உள்ளே

12 தற்கொலை என்பது, உதவியை வேண்டுகிற ஒரு கூக்குரல்
இந்த அமைதியான கொலையாளியை ஒரு போர் வேகத்தில் நாம் சந்திக்க வேண்டிய நேரம் இது.

22 ரோட்டரியில் குழு இயக்கவியல் சிறப்பாக வேலைசெய்கிறது: சேகர் மேத்தா
RIPN சேகர் மேத்தாவுக்கு பல மாவட்டங்களிலில் வாழ்த்து விழாக்கள்.

28 போலியோவின் கடைசி மைலுக்காக, $2.6 பில்லியனை வழங்குவதாக உறுதி கூறுகிறார்கள் உலகத் தலைவர்கள்
அபுதாபியில், உலகத் தலைவர்கள் போலியோவை ஒழிப்பதற்கான உறுதிமொழியை மீண்டும் எடுத்துக் கொண்டனர்.

32 பெரிய பெட்டிகளில் குடியேறிகளைக் UKக்குக் கடத்துதல்: 25 ஆண்டுகளுக்கு முந்தைய நினைவுகள்
சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைபவர்கள் மற்றும் அந்தச் செயலுக்கு துணை போகும் இடைத்தரகர்களை பேட்டிக் காண்பதற்காக இரண்டு பத்திரிகையாளர்கள் புகலிடம் வேண்டுபவர்கள் போல் நடித்தனர்.

50 கொல்கத்தாவில் 100 ஆண்டுகளாகத் தொடரும் நன்மைகள்
RC கல்கத்தா உறுப்பினர்கள் தங்கள் நினைவலைகளை பின் நோக்கி செலுத்துகின்றர்.

60 மாதவிலக்குபற்றிய ஓர் உரையாடல்
பல மாவட்டங்கள் பங்கேற்ற கருத்தரங்கில் பள்ளி மாணவிகளுக்கு சிறந்த மாதவிடாய் சுகாதார மேலாண்மை பற்றிக் கற்றுக் கொடுப்பதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சி.

64 சிறப்புக் குழந்தைகளுக்கான ஆண்டு விழாவைத் தொடர்ந்து 19 ஆண்டுகளாக நடத்திவரும் ரோட்டராக்ட் சங்கம்
ரோட்டராக்டர்கள் தொடர்ந்து மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு தங்கள் திறமையை வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்கி வருகின்றனர்.

அட்டைப்படத்தில்: அன்பையும் ஆறுதலையும் தேடுகிறோம்.

படங்கள்: கேப்ரியல் ஐசக்.

சிறந்த அட்டைப்படக் கட்டுரை, நல்ல கட்டுரைகள்

RIPN சேகர் மேத்தாவின் அட்டைப்படக் கட்டுரை படிப்பதற்கு சிறப்பாக இருந்தது. மேலும், அட்டைப் புகைப்படம் மற்றும் பிற பக்கங்கள் மிகவும் சுவாரஸ்யமாக உள்ளன. உங்கள் தலையங்கம் நம் சமூகத்தில் ஊனமுற்றோர் எதிர் கொள்ளும் பிரச்சினையை சரியாக எடுத்துக் காட்டுகிறது. மொத்தத்தில், நவம்பர் இதழில் படிப்பதற்கு நிறைய சிறந்த கட்டுரைகள் உள்ளன.

ஆர் கே பூப்னா
RC பேலூர் — RID 3291

படிப்பதற்கு சுவையான விஷயங் களுடன், இன்னும் மேம்பட்ட வடிவமைப்பு மற்றும் டிசைனுடன் சமீபத்திய ஆண்டுகளில் ரோட்டரி நியூஸ் மிக அதிக அளவில் மாற்றம் கண்டுள்ளதை பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். தேர்வுக் குழு RIயின் புதிய தலைவரை தேர்வு செய்யும் போது, தற்போதைய RI ஜனாதிபதி RIயின் தலைமையகமான ஈவேன்ஸ்டனில் இருக்க கூடாது, என்ற கருத்தாக்கம் குறிப்பிடத்தக்கது. RIPN சேகர் மேத்தாவின் விரிவான நேர்காணல், ரோட்டரிக்கான அவரது கருத்துக்கள் மற்றும் திட்டங்கள், ஒரு சிறந்த ரோட்டரி தலைவராக அவரது குணங்களை சுட்டிக்காட்ட உதவுகிறது. அறங்காவலர் தலைவர் கேரி ஹுவாங்கின் செய்தியை தாங்கிய கட்டுரை வாழ்க்கைமுறை மருத்துவம் மற்றும் பிற கட்டுரைகள் படித்து அனுபவிக்க ஆர்வ மூட்டுவதாய் இருந்தன.

R தாயுமனவன், RC கடலூர் மிட் டவுன் — RID 2981

எங்கள் RIPN சேகர் மேத்தா மற்றும் ராஷி மேத்தா ஆகியோரின் கவர்ச்சி கரமான அட்டைப் படத்தைக் கொண்ட நவம்பர் இதழைப் படிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

ரோட்டரியில் இதுவரை அவர் மேற்கொண்ட பயணம் மற்றும் அவரது எதிர்காலத் திட்டங்களை விவரிக்கும் வகையில் அமைந்துள்ள ரோட்டரிக்கு நோபல் பரிசு கிடைக்க வேண்டும் என்பதில் நாங்கள் எங்கள் தலைவருடன் ஒன்றிணைந்து இருக்கிறோம்.

சுவாதி சிங் மற்றும் ரஞ்சித் சிங் தாக்கூர், RC ஜெம்ஸ் நிஜாமாபாத் — RID 3150

டின்னர் இன் த டார்க் என்ற கட்டுரை சண்டிகரின் RC ஷிவாலிக் திட்டம் ரோட்டரியன்கள் மற்றும் இந்த சமூகத்தில் உள்ளவர்கள் பார்வை குறைபாடு உள்ளவர்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ள வைப்பதாகும். கிளப்புக்கு பாராட்டுகள்.

இதேபோன்ற ஒரு நிகழ்ச்சியை சமீபத்தில் ஒரு உள்ளூர் கல்லூரியில் நடத்தினோம். அது பியானோ கலைஞர் அனில் சீனிவாச னும் அவரது இசைக்குழுவும் வழங்கிய வித்தியாசமான இசை நிகழ்ச்சி ஆகும்; அரங்கம் நிறைந்த பார்வையாளர்கள் ஒரு மணி நேரம் காரிருளில் அமர வைத்து பார்வை குறைபாடு உள்ளவர்களின் உலகை புரிந்து கொள்ள மற்றும் உணர வைக்கப் பட்டார்கள். ஆனால் அதே நேரத்தில், அவர்கள் கிளாசிக்கல் பாடல்களின் மெல்லிய கலவையை அனுபவித்தனர்.

இந்த திட்டம் சென்னையில் 60 பார்வைக் குறைபாடுள்ள பெண்களுக்கு வீடு கட்ட நிதி திரட்ட உதவியது . இது ஒரு மறக்கமுடியாத சந்தர்ப்பமாக இருந்தது, காரணம் இருளில்

TRFவிற்கு தாராளமாக வழங்குவோம்

நவம்பர் இதழில் தலையங்க கட்டுரை மிகச் சரியானது, அதாவது ஒரு மனிதரிடம் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற தீ அணையாது எரிந்து கொண்டிருந்தால் அவர்களுடைய உடல் குறைபாடு கள் கூட அவர்களுடைய பாதையில் குறுக்கே நிற்க முடியாது. போலியோவினால் பாதிக்கப்பட்டு மீண்ட குஹூ தாஸ் மற்றும் மூளை பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட குறைபாடுகள் உள்ளவர்களுக்கு உதவும் தன்னார்வலரான ஜீஜா கோஷ் இருவருக்கும் பாராட்டுகள்.

RI இயக்குனர்கள் Dr பாரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி ஆகியோர் TRF பங்களிப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர், இது சேவை திட்டங்களை செய்வதில் கிளப்புகளுக்கு பெரிதும் பயனளிக்கும். TRF ஒன்று மட்டுமே எங்கள் பங்களிப்புகள் உலகம் முழுவதிலும் உள்ள ஏழை மற்றும் உடல் நலம் குன்றியவர்களை சென்றடைய உதவும்.

ராஜ் குமார் கபூர்
RC ரூப்நகர் — RID 3080

RC பரேலி சவுத், RID 3110, CSR நிதியை அதன் திட்டத்தின் மூலம் அக்கம்பக்கமுள்ள கிராமங்களில் வெட்டவெளியில் மலம் கழிக்கும் பிரச்சினைக்கு தீர்வு காண பயன்படுத்தி அதன் வழியே அந்த நிதியை பயன்படுத்துவதற்கு ஒரு சிறந்த முன்மாதிரியை அமைந்துக் காட்டினார்.

CSR செயல்பாட்டிற்கு ரோட்டரி ஒரு நல்ல தளமாகும். இந்த மாதிரி திட்டம் கார்ப்பரேட்டுகளிடமிருந்து வரும் CSR நிதியைப் பயன்படுத்த சிறந்த வழியைக் காட்டுகிறது. சமுதாயத்திற்கான தேவை அடிப்படையிலான திட்டத்தை நிறைவேற்றிய கிளப் தலைவர்களுக்கும் BL அக்ரோ ஆயில்ஸின் நிர்வாக இயக்குனருக்கும் வாழ்த்துக்கள்.

சின்மயா மஹாபத்ரா, RC புவனேஸ்வர் ஹெரிட்டேஜ் — RID 3262

கல்வியறிவை மேம்படுத்துதல்

2025க்குள் இந்தியாவை கல்வியறிவுள்ள நாடாக்குவோம் என்ற கட்டுரை சிறப்பு.

இருப்பவர்களின் வாழ்க்கையைப் பற்றி எங்களை சிந்திக்க வைத்தது.

R சீனிவாசன், RC மதுரை மிட் டவுன் — RID 3000

சிறந்த அட்டைப் புகைப் படத்திற்காக ரஷீதா பகத்துக்கு எனது சிறப்பு பாராட்டு, அவர்களின் இயலாமையால் தோல்வி அடையாமல் இருத்தல் என்ற நன்கு எழுதப்பட்ட தலையங்கம் மற்றும் அறங் காவலர் தலைவர் கட்டுரை RID 3201 இல் சேவை திட்டங் களை ஆய்வு செய்கிறது.

டேனியல் சிட்டிலாப்பில்லி RC கல்லூர் — RID 3201

நல்ல தலைவர்கள் மற்றும் பெரிய கனவு காணும் இரண்டு அசாதாரண மனிதர்களை நான் கண்டிருக்கிறேன். ஒன்று, நம் பிரதமர் நரேந்திர மோடி, இரண்டு எங்கள் RIPN சேகர் மேத்தா.

நவம்பர் இதழ் சேகரிப்பாளரின் இதழாகும். அவரது எண்ணங்கள், வேலை, தொழில், சவால்கள், நம்பிக்கைகள் மற்றும் யோசனை களை மையமாகக் கொண்ட ஆர்ஜபிஎன்னைப் பற்றி எழுதியுள்ள விஷயங்கள் ஆச்சரியமாக இருக்கிறது. ரோட்டரியின் கிரீடத்தில் இந்தியா கோஹினூர் என்றும், RIக்கு அமைதிக்கான நோபல் பரிசு பெறுவது குறித்த அவரது பார்வை உண்மையில் பாராட்டத்தக்கது என்றும் மேத்தா சரியாகக் கூறியுள்ளார்.

சில வாரங்களுக்கு முன்பு, நான் அவரை பவானிபூர் சமண கோவிலில் சந்தித்தேன். ஆரத்தி முடிந்த பிறகு அவர் அங்கிருந்த மக்களுடன் உரையாடிய போது ரோட்டரியின் சித்தாந்தமான ஒருவரின் மதம் அல்லது பிராந்தியம் ஆகியவற்றில் கவனம் செலுத்தாமல் அங்கிருந்தவர்களின் ஜாதி, மதம் பற்றி சிந்திக்காமல் பேசினார். ரஷீதா பகத் தனது கட்டுரையில் முன்னிலைப்படுத்தியிருப்பது நீங்கள் ரோட்டேரியன் என்றால் உங்கள் பின்னணி பற்றி கவலைப்படாமல் நீங்கள் வரவேற்கப்படுகிறீர்கள் என்பதே எங்கள் நம்பகத்தன்மையாகும்.

பியூஷ் தோஷி RC பேலூர் — RID 3291

இப்பணியை நாம் நிறைவேற்ற முடிந்தால் உண்மையில் ரோட்டரியின் பரிசாக இருக்கும். ஏனெனில், கல்வியறிவு என்பது சமூகத்தில் பல்வேறு குறிக்கோள்களை அடைவதற்கான வழிமுறையாகும். RIPN ஷேகர் மெத்தாவின் அயராத முயற்சி களுக்கு நான் வாழ்த்துகிறேன்.

Dr புரோசென்ஜித் கோஷ் RC கிரீன் லேண்ட் சில்சார் — RID 3240

மிகச் சிறப்பான தலையங்கம்

கல்வியின் முக்கியத்துவம் குறித்து ஆசிரியர் ரஷீதா பகத்தின் உணர்வுகளை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். அடிப்படை கல்வியறிவு கூட கனவாகவே உள்ள கோடிக் கணக்கான குழந்தைகள் உள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

RC மைசூர் வெஸ்டின் செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான முன்னோடிப் பணியினைப் பற்றிய அட்டைப் படக்கட்டுரை கடந்த 30 ஆண்டுகளில் இந்த சிறப்புக் குழந்தைகளை அணுகுவதில் கிளப்பின் முயற்சிகளை விரிவாக விளக்குகிறது.

S முனியாண்டி, RC திண்டுக்கல் கோட்டை — RID 3000

கல்வியால் மட்டுமே பல்வேறு துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும், மேலும் இந்தியாவை உலகின் மிக சக்திவாய்ந்த நாடாக மாற்ற முடியும் என்ற ஆசிரியர் தலையங்கத்தில் உள்ள சிந்தனையுடன் நான் முழுமையாக உடன்படுகிறேன். ரோட்டரி தலைவர்கள் 2025 க்குள் மொத்த கல்வியறிவைக் கனவு காண்கையில், ரோட்டரியால் மட்டுமே இந்தியாவில் ஏழை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முடியும்.

அருண் குமார் தாஷ் RC பரிபாதா — RID 3262

உங்கள் தலையங்கத்தில் கல்வி குறித்த உங்கள் எண்ணங்கள் மற்றும் ஒரு சாமானிய மனிதன் அறிவுக்கு எப்படி தவிக்கிறான் என்பதும் அது கல்வியில் மட்டுமே பெற முடியும் என்ற விஷயம் என்னை ஈர்த்தது. நமது முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார், அதனால்தான் அவர் இந்தியா முழுவதும் இதுபோன்ற தரமான கல்வி நிறுவனங்களை அமைத்தார். இன்று கல்வி என்பது ஒரு வணிகமாகும், அது அவர்களுக்கு தொந்தரவு அளிக்காத வரை மக்கள் அதுபற்றி கவலைப்படவில்லை.

தில்லியில், தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையில் அனைவருக்கும் கல்விக்கு சரியான உந்துதல் வழங்கப்பட்டுள்ளது. நான் நீங்கள் அவருடனும் அவருடைய உதவியாளர் மனிஷ் சிசோடியாவுடனும் ஒரு ஆழமான பேட்டி எடுக்க பரிந்துரை செய்கிறேன். இதுவரையில் கல்லவித்துறையில் அவர்கள் செய்த சாதனையை பற்றி கேட்டு அதை ரோட்டரி நியூஸில் வெளியிடவும்.

ராபர்ட் பிராங்க்ளின் ரெகோ RC பாஜ்பே — RID 3181

பிழை திருத்தம்

PDG வினய் குல்கர்னி போலியோ நிதிக்கு ரூ.50,000 பங்களித்ததாக மேத்தாவின் கனவு நோபல் பரிசு (நவம்பர் 19) என்ற கட்டுரையில் கவனக்குறைவாக தெரிவிக்கப்பட்டது. அது RILMக்கு அவர் அளித்த தொகை ரூ.500,000 ஆகும்.

பிழைக்கு வருத்தம் தெரிவிக்கப்படுகிறது.

உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம்.
ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org;rushbhagat@gmail.com

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org*.

கன்வென்ஷனுக்கு வாருங்கள்

பாசமிகு ரோட்டரி குடும்பத்தினர்களே...

ரோட்டரி பன்னாட்டு மாநாடொன்றில் கலந்துகொள்வதற்கு இணையாக வேறெந்த அனுபவமும் இல்லை. ரோட்டரியின் உண்மையான உணர்வை உங்கள் குடும்பத்தினர், மற்றும் சக ரோட்டரியன்களுடன் ஹோனலூலுவில் ஜூன் 6 முதல் 10வரை கண்டறியுங்கள். ரோட்டரி குடும்பம் முழுவதும் கொண்டாடுவதற்கு, ஒன்றாகப் பணிபுரிவதற்கு, இணைப்புகளை உருவாக்கிக்கொள்வதற்கு மிகச்சிறந்த இடம் அது.

ஹவாய்ப் பயணங்களை அனுபவிக்கிற மக்கள் இரண்டு வகை: அந்தத் தீவுகளுக்கு இதுவரை செல்லாதவர்கள், தனித்துவமான, மிகச்சிறந்த அனுபவங்களைப் பெறப்போகிறவர்கள் ஒருவகை; ஹவாய் கணங்கள் ஏற்கெனவே தங்கள் நினைவுகளில் பதிந்துபோனவர்கள், இன்னும் சில புதிய நினைவுகளை உருவாக்க ஏங்குகிறவர்கள் இன்னொரு வகை.

எப்படி ரோட்டரி என்பது ரோட்டரியன்களுக்கு ஒரு வாழ்க்கைமுறையாக இருக்கிறதோ, அப்படி ஹவாய் மக்களுக்கு அலோஹா ஒரு வாழ்க்கைமுறையாக இருக்கிறது: ஒத்திசைந்து வாழ்வது, பொறுமையாக இருப்பது, அனைவரையும் மதிப்புடன் நடத்துவது, உங்கள் குடும்பம் அல்லது ‘ஒஹானா-வுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வது.

ஹவாய்ப் பண்பாடு மற்றும் மதிய உணவுப் படகுப் பயணம். இந்த இரண்டு மணிநேரப் பயணத்தில், வைரத் தீவு, வைகிகி மற்றும் கஹாலா தங்கக் கடற்கரையின் சில மிகச்சிறந்த காட்சிகளைக் காணலாம். இந்தப் படகில் நீங்கள் உகுலெலெ இசைக்கக் கற்றுக்கொள்ளலாம், ஹூலா நடனத்தில் பங்கேற்களாம், உங்களுடைய சொந்த ஹவாய் மலர் லெய்-ஐ உருவாக்கலாம்.

தீவின் பலவிதமான உபசரிப்பு நிகழ்வுகளை முழுமையாக அனுபவிக்கும் வாய்ப்பும் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் மிகச்சிறந்த சேவைத் திட்டங்களைக் காணலாம், ஹவாயிலுள்ள இரண்டு பழைமையான மீன்குளங்களும் இவற்றில் உண்டு. அழகான அலா மௌனா கடற்கரைப் பூங்காவில் சூரிய உதயத்தின்போது ஓர் அமைதி நடைப்பயணமும் நடைபெறும். புகழ்பெற்ற வைரத் தலைப் பள்ளத்திற்கருகில் இந்த 3-மைல் நடைக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளுடனான ரோட்டரியின் வரலாற்று இணைப்புகளைக் கொண்டாடும் ஒரு நேரமாகவும் நம்முடைய 2020 மாநாடு அமையும். ஐக்கிய நாடுகள் சாசனம் கையெழுத்திடப்பட்டு வரும் ஜூன் 2020உடன் 75 ஆண்டுகளாகின்றன. மாநாடு தொடங்குவதற்கு முந்தைய நாள், ரோட்டரியும் UNம் 2019–20ன் நம்முடைய ஐந்தாவது இணை நிகழ்வை நடத்தும். இது சுற்றுச்சூழல் நீடிப்பில் கவனம் செலுத்தும்.

இத்துடன், ரோட்டரி வரலாற்றிலேயே மிகப் பசுமையான மாநாட்டுக்கு நாம் திட்டமிடுகிறோம்;

ரோட்டரி உலகை இணைக்கிறது என்பதற்கான மிகச்சிறந்த சான்றை ரோட்டரி மாநாட்டில் காணலாம். உங்கள் குடும்பத்தினரை அழைத்துவாருங்கள், அனைத்துக் குடும்பத்தினரும் ஒருவரையொருவர் சந்திப்பதற்காக. ஹோனலூலுவில் சந்திப்போம்!

மார்க் டேனியல் மலோனி
RI தலைவர்

"அழகு" பற்றிய பொய்யான நம்பிக்கையொன்றை நொறுக்குவோம்...

செவ்வியல் படைப்புகளை வாசிப்பதும், திரும்ப வாசிப்பதும் எனக்குத் தொடர்ந்த மகிழ்ச்சியைத் தருகிற விஷயங்கள். எனக்குப் பிடித்த நூல்களில் சில, தாம்ஸ் ஹார்டியின் தி மேயர் ஆஃப் காஸ்டெர்ப்ரிட்ஜ், ஜேன் ஆஸ்டெனினின் ப்ரைட் அன்ட் ப்ரிஜுடிஸ், ஜார்ஜ் எலியாட்டின் தி மில் ஆன் தி ஃப்ளாஸ், ஹார்பர் லீ-யின் டு கில் எ மாக்கிங் பேர்ட், கலீத் ஹொஸ்ஸெய்னியின் தி கைட் ரன்னர், இவற்றுடன், எமிலி ப்ரொன்டெ எழுதிய மிகச்சிறப்பான, கையில் எடுத்தால் கீழே வைக்க இயலாத புதினமாகிய வுதெரிங் ஹைட்ஸ்.

இப்போதெல்லாம், கருப்பினப் பெண் எழுத்தாளர்கள் எழுதிய அறிவார்ந்த உரைநடைகளை நான் விரும்பி வாசிக்கிறேன் சிமமன்டா ந்கோஜி அடிச்சியின் கொடுமை நிறைத்த, விருது பெற்ற ஹாஃப் ஆஃப் எ எல்லோ சன், அலீஸ் வாக்கருடைய செவ்வியல் படைப்பான தி கலர் பர்ப்பிள் மற்றும் நோபல் பரிசு பெற்ற டோனி மாரிசனுடைய மறக்க இயலாத செவ்வியல் படைப்பான தி ப்ளூயெஸ்ட் ஐ.

தி ப்ளூயெஸ்ட் ஐ-யின் சமீபத்திய பதிப்பொன்றில் ஆசிரியர் ஒரு சுவையான விஷயத்தைச் சொல்கிறார். அவருடைய இந்தப் புத்தகத்தின் தலைப்பு, தொடக்கப்பள்ளியில் அவருடைய சிறுவயதுத் தோழி ஒருவர் அவரிடம் சொன்ன ஒரு விஷயத்தை அடிப்படையாகக் கொண்டதாம்.

தான் நீல விழிகளுக்காக ஏங்கியதாக அந்தத் தோழி அவரிடம் ஒப்புக்கொண்டிருந்தார்.

நீலக் கண்களைக் கொண்ட ஒரு கருப்பினப் பெண்ணைப்பற்றிய சிந்தனையும் காட்சியுமே மோரிசனை வன்முறையாகத் துரத்தியது. தன்னிடம் இருப்பதைக் கொண்டு இந்தப் பெண் ஏன் மகிழ்ச்சியடையவில்லை என்கிற வியப்பை உண்டாக்கியது, தன்னுடைய வெளித் தோற்றத்தில் அவர் இப்படியொரு வேறுபட்ட மாற்றத்தை ஏன் விரும்பவேண்டும், அது உண்மையில் அவரைக் கொடூரமாகத் தோன்றச்செய்யாதா என்பதுபோன்ற கேள்விகளைக் கிளறிவிட்டது.

இன்றைக்கும், இந்தியாவின் பல பகுதிகளில் ஒரு பெண்ணின் அழகானது ஒரு வெளுத்த தோல் நிறத்துக்குச் சமமாகப் பேசப்படுகிறது. சிவப்பழகு க்ரீம்கள், மக்கள் அவற்றுக்குத் தருகிற ஆதரவு, கடந்த சில ஆண்டுகளாக ஆண்களும் இதை ஆதரிக்கத் தொடங்கியிருப்பது ஆகியவை, வெள்ளைத் தோலை விரும்பும் இந்தியக் கிறுக்குக்கு ஒரு சான்றாகும்.

இந்திய ஆண், அல்லது, அவனுடைய ஒட்டுமொத்தக் குடும்பமும் ஒரு வெளுத்த மணப்பெண்ணுக்காக ஏங்குகிறார்கள். இதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டுமென்றால், நம்முடைய மணமகள் தேவை விளம்பரங்களைப் பார்த்தாலே போதும்.

இந்தியப் பெண்கள் ஆரோக்கியமான, பளபளப்பான பழுப்புத் தோலை வரமாகப் பெற்றவர்கள். ஆனால், "அழகு" என்கிற கேள்விக்குரிய துறையில் அவர்கள் குறைபட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

அழகுபற்றிய இந்தத் தவறான நம்பிக்கை, பெண்களுடைய பாதுகாப்பில்லா உணர்வின்மீது சென்று அமர்ந்துகொள்கிறது.

இதனால், அந்தப் பெண்கள் தங்களைத் தாங்களே நிராகரித்துக்கொள்கிறார்கள். பெண்கள் என்ற முறையில், தாய்மார்களாக, மனைவியராக, சகோதரியராக, மகள்களாக, அத்தைகளாக, இன்னும் பல உறவுகளாக இயங்கிவருகிற நாம், நம்முடைய குடும்ப வாழ்க்கைகளில் ஒன்றுகூடுவோம், "வெள்ளையாக இருப்பதுதான் அழகு" என்கிற இந்த முட்டாள்தனமான பொதுமைப் படுத்தலை உறுதியாகவும் கட்டாயமாகவும் மறுப்போம்.

பழுப்பான/கருப்பான தோலும் வியக்கவைக்கும் அளவுக்கு அழகாக இருக்கலாம் என்று சொல்கிற அதே நேரத்தில், ஒரு பெண்ணின் ஆளுமையைத் தீர்மானிப்பது அவருடைய தோற்றம்மட்டுமில்லை என்பதையும் நாம் உறுதிப்படுத்துவோம், வலியுறுத்துவோம்.

ஒரு பெண்ணுடைய அறிவும், அவருடைய புத்திக்கூர்மையும், அவருடைய கண்களில் இருக்கும் மின்னலும், அவருடைய மனத்தில் இருக்கும் இரக்கமும் பெண்களை மிகச் சிறப்பாக ஆக்கும் மற்ற நூறு குணங்களும்தான் அவருடைய உண்மையான ஆளுமை. இதை உரக்கச் சொல்வோம்.



ரஷீதா பகத்

RI இயக்குனர்

நேருக்கு நேர்

நல்ல உடல்நலம் மற்றும் நல்ல சிந்தனை ஆகியவை நமது மதிப்பு மிக்க உடைமைகள், அதில் நல்ல ஆரோக்கியம் மிக முக்கியமானது. உடல்நலம் நன்றாக இருந்தால் மட்டுமே, மற்ற அனைத்தும் நம்முடன் இருக்கும். ஒரு நல்ல ஆரோக்கியமான உடல் மனதை மட்டுமல்ல, மற்ற எல்லாவற்றையும் நன்றாக வைத்திருக்கிறது. ஆனால் நாம் வாழ்க்கையின் ஓட்டத்தில் நம்முடைய உடல்நலத்தின் மீது, உடல்நிலை சரியில்லாமல் போகும் வரை கவனம் செலுத்துவதில்லை, பின்னர் நாம் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகளை தேடி ஓடுகிறோம். இது போதாதென்று இத்துடன்-தொற்று அல்லாத நோய்கள் என்று அழைக்கப்படும் NCD நோய்கள் வேறு நம் வாழ்க்கை முறையை மேலும் சுமையாக்குகிறது. இந்தியாவில் ஏற்படும் 60% இறப்புகளுக்கு ஒரு NCD தொற்றுநோயே பொறுப்பாகிறது. இன்று பெரிய கொலையாளி மோசமான உணவாகும். கலோரிகள் நிறைந்திருப்பதோடு உப்பு, எண்ணெய் மற்றும் சர்க்கரை அதிகமான உணவு! இதோடு உடற்பயிற்சியின்மை மற்றும் மன அழுத்த வாழ்க்கை முறை சேர்ந்து கொள்கிறது.

"ஒரு அவுன்ஸ் தடுப்பு ஒரு பவுண்டு குணப்படுத்துதலுக்கு நிகரான மதிப்புள்ளது''. எனவே நாம் நேர்மறை சுகாதாரம் அதாவது பிராஜெக்ட் பாஸிட்டிவ் ஹெல்த்-NCDக்ளை நிறுத்துவது என்ற திட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம். மூன்று முனை அணுகுமுறை தேவை:

- NCDகளை முன்கூட்டியே கண்டறிதல்- உங்கள் BP, சர்க்கரை, எடை அளவுகளை அறிந்து கொள்ளுங்கள் .
- வாழ்க்கை முறை மாற்றங்களை ஊக்குவித்தல்-ஒரு தேக்கரண்டி குறைவு , நான்கு அடிகள் முன்னே என்ற பிரச்சாரம்.
- NCDகளின் அபாயங்கள் குறித்த விழிப்புணர்வை உருவாக்குதல்- ஒரு சமூக ஊடக பிரச்சாரத்தைத் தொடங்குதல். பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

உலக இதய தினமான செப்டம்பர் 29 மற்றும் நவம்பர் 14-உலக நீரிழிவு தினத்தில், இந்தியா முழுவதும் ரோட்டரி கிளப்புகள் மற்றும் ரோட்டேரியன்கள் நூற்றுக்கணக்கான முகாம்கள், பேரணிகள், தெரு நாடகங்கள், மற்றும் பட்டறைகளை நடத்தி ஆயிரக்கணக்கான குடிமக்களுக்கு விழிப்புணர்வை உருவாக்கி நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் இறங்கியது.

RID 3141 (மகாராஷ்டிரா) ஃபேர் ஃபேக்ஸ் ஃ பௌன்டேஷனுடன் இணைந்து டாயலிசிஸ் இயந்திரங்கள்அமைக்க உதவுகிறது. இது போல மற்ற மாவட்டங்களும் CSR உதவியுடன் மருத்துவ வசதிகளை மேம்படுத்தலாம்.



Dr பரத் பாண்ட்யா
RI இயக்குனர், 2019–21

Governors Council

RI Dist 2981	DG N Manimaran
RI Dist 2982	DG Natesan A K
RI Dist 3000	DG Dr A Zameer Pasha
RI Dist 3011	DG Suresh Bhasin
RI Dist 3012	DG Deepak Gupta
RI Dist 3020	DG M Veerabhadra Reddy
RI Dist 3030	DG Rajendra Madhukar Bhamre
RI Dist 3040	DG Dhiran Datta
RI Dist 3053	DG Harish Kumar Gaur
RI Dist 3054	DG Bina Ashish Desai
RI Dist 3060	DG Anish Shah
RI Dist 3070	DG Sunil Nagpal
RI Dist 3080	DG Jitendra Dhingra
RI Dist 3090	DG Rajeev Garg
RI Dist 3100	DG Hari Gupta
RI Dist 3110	DG Kishor Katru
RI Dist 3120	DG Sanjay Agrawal
RI Dist 3131	DG Ravee Dhotre
RI Dist 3132	DG Suhas Laxmanrao Vaidya
RI Dist 3141	DG Harjit Singh Talwar
RI Dist 3142	DG Dr Mohan Chandavarkar
RI Dist 3150	DG Pandi Sivannarayana Rao
RI Dist 3160	DG Nayan S Patil
RI Dist 3170	DG Dr Girish R Masurkar
RI Dist 3181	DG Joseph Mathew
RI Dist 3182	DG Ramesh B N
RI Dist 3190	DG Dr Sameer Hariani
RI Dist 3201	DG R Madhav Chandran
RI Dist 3202	DG A Karthikeyan
RI Dist 3211	DG Shirish Kesavan
RI Dist 3212	DG S Sheik Saleem
RI Dist 3231	DG Sridar Balaraman
RI Dist 3232	DG G Chandramohan
RI Dist 3240	DG Dr Debasish Das
RI Dist 3250	DG Gopal Khemka
RI Dist 3261	DG Ranjeet S Saini
RI Dist 3262	DG Debasish Mishra
RI Dist 3291	DG Ajay Agarwal

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

களின் செய்திகள்

ஆரோக்கியம் அனைவரின் உரிமை

நல்ல உடல்நலம் பேணுதல் என்பது அனைவரின் உரிமை என்று நாங்கள் நம்புகிறோம். இன்னும் உலகில் 400 மில்லியன் மக்களுக்கு அடிப்படை சுகாதார சேவையை பெற முடியாத நிலை இருக்கிறது.

அதிக மருத்துவ செலவு காரணமாக ஒவ்வொரு ஆண்டும் 100 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வறுமையில் தள்ளப்படுகிறார்கள், அதனால் தான் நோய்க்கு சிகிச்சையளிப்பதும் தடுப்பதும் மிகவும் முக்கியமானதாகிறது. உலகின் வளர்ச்சியடையாத பகுதிகளில் குறைந்த விலை மற்றும் இலவச சுகாதாரத்துக்கான அணுகலை மேம்படுத்தும் நோக்கத்தை ரோட்டரியினர் கொண்டுள்ளனர். போலியோ, HIV/எய்ட்ஸ், மற்றும் மலேரியா போன்ற முக்கிய நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு சமுதாயத்திற்கு படிப்பினை வழங்குவதோடு அவர்களையும் இந்தச் செயலில் ஈடுபடுத்துகிறோம். சுகாதாரப் பாதுகாப்பு குறைபாடுகளுடன் போராடும் வசதி குறைந்த சமூகங்களில் இம்மாதிரி நோய்கள் தாக்கும்போது, தற்காலிக கிளினிக்குகள், இரத்த தான மையங்கள் மற்றும் பயிற்சி வசதிகளை நாங்கள் அமைத்துள்ளோம். மருத்துவர்கள், நோயாளிகள் மற்றும் அரசாங்கங்கள் ஒன்றிணைந்து செயல்பட அனுமதிக்கும் உள்கட்டமைப்பை நாங்கள் வடிவமைத்து உருவாக்குகிறோம்.

ரோட்டரியின் முதல் முன்னுரிமை போலியோவை ஒழிப்பதாக உள்ளது, எங்கள் உறுப்பினர்கள் அதிக பொறுப்புகள் எடுத்து மலேரியா, HIV/எய்ட்ஸ், போன்ற நோய்கள் ஆகியவற்றோடு சிறுநீரக செயலிழப்பில் உதவ டயாலிசிஸ் சேவைகள், இதய நோய்கள், அல்சைமர், பல இடங்களில் திசுக்கள் செயலிழந்து போகுதல், நீரிழிவு, போன்ற நோய்களுக்கு தேவையான மருத்துவத்திலும் கூடுதல் கவனம் செலுத்துகிறோம்.

குணப்படுத்துவதை விட நோயே வராமல் தடுப்பதே சிறந்தது என்ற பழைய மொழி இன்றைக்கும் அர்த்தம் உள்ளதாகிறது. இதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, RI இயக்குநர் பாரத் பாண்ட்யாவும் நானும் ஒரு புதிய முயற்சியைத் தொடங்கினோம்-நேர்மறை ஆரோக்கிய திட்டம் (Project Positive Health). இந்தத் திட்டத்தின் கீழ் எங்கள் நோக்கம் மக்களை இந்த எளிமையான வழியை பின்பற்றி என்சிடிக்களை நிறுத்துவதாகும். ஒவ்வொரு ரோட்டரி கிளப்பையும் உடல்நல பரிசோதனை கூடங்களை நடத்தும்படியும் இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

ஆரோக்கியம் என்பது செல்வம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

கமல் சங்வி
RI இயக்குனர், 2019–21

Board of Permanent Trustees & Executive Committee

PRIP Rajendra K Saboo	RI Dist 3080
PRIP Kalyan Banerjee	RI Dist 3060
RIPN Shekhar Mehta	RI Dist 3291
PRID Panduranga Setty	RI Dist 3190
PRID Sushil Gupta	RI Dist 3011
PRID Ashok Mahajan	RI Dist 3141
PRID Yash Pal Das	RI Dist 3080
PRID P T Prabhakar	RI Dist 3232
PRID Dr Manoj D Desai	RI Dist 3060
PRID C Basker	RI Dist 3000
TRF Trustee Gulam A Vahanvaty	RI Dist 3141
RID Dr Bharat Pandya	RI Dist 3141
RID Kamal Sanghvi	RI Dist 3250

Executive Committee Members (2019–20)

DG Deepak Gupta Chair – Governors Council	RI Dist 3012
DG Nayan Patil Secretary – Governors Council	RI Dist 3160
DG Dhiran Datta Secretary – Executive Committee	RI Dist 3040
DG Ajay Agarwal Treasurer – Executive Committee	RI Dist 3291
DG Rajendra Madhukar Bhamre Member – Advisory Committee	RI Dist 3030

ROTARY NEWS / ROTARY SAMACHAR

Editor
Rasheeda Bhagat

Senior Assistant Editor
Jaishree Padmanabhan

ROTARY NEWS / ROTARY SAMACHAR

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

District Wise TRF Contributions as on October 2019

(in US Dollars)

District Number	APF	PolioPlus	Other Restricted	Endowment Fund	Total Contributions	EREY Donors (in numbers)	EREY %
India							
2981	7,975	454	0	29	8,458	23	0.51
2982	16,646	9,829	161,362	0	187,838	61	2.02
3000	16,643	0	3,703	0	20,345	18	0.35
3011	10,683	985	21,684	0	33,351	49	1.38
3012	159,935	5,615	32,452	0	198,002	113	3.05
3020	9,998	13,361	0	12,029	35,388	27	0.72
3030	3,439	7	1,423	0	4,869	5	0.10
3040	5,399	45	5,471	0	10,915	7	0.34
3053	24,960	32	331	0	25,322	60	2.07
3054	1,420	107	35,809	0	37,336	6	0.11
3060	11,165	6,014	8,750	11,578	37,507	172	4.25
3070	18,791	325	6,943	0	26,059	68	2.21
3080	31,006	4,110	12,875	1,013	49,004	69	2.01
3090	5,684	0	0	0	5,684	20	1.01
3100	21,110	0	0	0	21,110	61	3.21
3110	5,351	1,609	0	0	6,960	11	0.28
3120	19,184	141	0	0	19,325	62	1.84
3131	61,125	519	88,829	43,000	193,473	245	4.67
3132	2,930	292	9,253	15,000	27,474	7	0.19
3141	165,363	6,628	195,333	41,392	408,716	446	8.13
3142	61,447	274	0	0	61,721	164	5.07
3150	34,006	6,178	11,667	97,931	149,782	290	8.13
3160	1,946	29	0	0	1,975	11	0.41
3170	17,358	701	(4,006)	0	14,053	88	1.57
3181	86,152	3,249	0	0	89,401	132	3.70
3182	18,712	7,324	1,777	0	27,813	82	2.62
3190	56,933	6,084	29,360	0	92,377	371	7.78
3201	23,332	2,522	72,778	0	98,632	48	0.89
3202	32,341	24,956	2,035	1,000	60,332	29	0.59
3211	1,442	42	46,879	290	48,653	8	0.18
3212	18,888	3,805	1,050	0	23,743	37	0.92
3231	1,547	56	3,083	0	4,686	25	0.68
3232	17,147	24,238	73,542	7,500	122,427	77	1.47
3240	15,395	31,441	33,004	0	79,840	88	2.90
3250	11,892	0	(85)	0	11,807	17	0.44
3261	2,805	0	30,770	0	33,575	2	0.08
3262	14,111	1,514	5,507	0	21,132	29	0.87
3291	25,417	527	27,970	0	53,914	45	1.27
India Total	**1,039,677**	**163,011**	**919,548**	**230,762**	**2,352,998**	**3,073**	**2.11**
3220 **Sri Lanka**	32,937	3,900	7,371	0	44,207	41	2.10
3271 **Pakistan**	2,000	1,019	20	0	3,039	4	0.30
3272 **Pakistan**	2,292	600	300	0	3,192	14	0.85
3281 **Bangladesh**	37,669	1,000	67,500	4,000	110,169	79	1.39
3282 **Bangladesh**	18,413	2,806	0	1,000	22,219	17	0.36
3292 **Nepal**	122,385	12,293	191,013	0	325,691	142	3.05
South Asia Total	**1,255,372**	**184,628**	**1,185,751**	**235,762**	**2,861,514**	**3,370**	**2.03**
World Total	**30,465,995**	**7,865,440**	**5,384,504**	**9,457,851**	**53,173,790**		

Source: RI South Asia Office

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.

KshetraGuru® PROPERTY

SwarnaGuru® GOLD

FDGuru® FIXED DEPOSIT

VyaparGuru® STOCK BROKING

ShuruGuru™ IPO

YojanaGuru® GOVERNMENT BONDS

NidhiGuru™ MUTUAL FUND

AmulyaGuru™ PRECIOUS STONES

Nivesh Guru Advisors Private Limited
68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021

+91 22 2288 0808 | info@niveshguru.in | www.niveshguru.in

தற்கொலை என்பது, உதவியை வேண்டுகிற ஒரு கூக்குரல்

ஜெய்ஸ்ரீ

அமைதியான ஞாயிற்றுக்கிழமைக் காலை. பக்கத்து வீட்டில் சினம் கொண்ட தந்தை ஒருவருடைய கத்தல் அந்த அமைதியை அழித்துவிட்டது. அவர் தன்னுடைய பத்து வயது மகளிடம் இவ்வாறு கத்திக்கொண்டிருந்தார், போய்ச் செத்துவிடு. இந்தக் கட்டடத்தின் உச்சியிலிருந்து குதித்துவிடு.

அவர் அடிக்கடி இப்படிச் சொல்வதுண்டு. இதைக் கேட்கும்போதெல்லாம் நான் அதிர்ந்து போவேன். ஆனால், அவருடைய அழகிய குழந்தை ஒருமுறை அமைதியாக இப்படிச் சொன்னபோது, அந்த அதிர்ச்சி இன்னும் அதிகரித்தது: என்றைக்காவது ஒருநாள், நான் அதைச் செய்துவிடுவேன்.''

மறுநாள் காலை, ஒரு செய்தித்தாளின் தலைப்புச்செய்தி இப்படி அலறியது: மதிப் பெண்கள் குறைந்ததால் மனச்சோர்வடைந்த 19 வயது IIT மெட்ராஸ் மாணவர் தற்கொலை செய்துகொண்டார்.

ஐந்தில் ஓர் இந்தியர் தன்னுடைய வாழ்நாளில் மனச்சோர்வால் அவதிப்படுவார் என்கிறது 2015ல் நடைபெற்ற WHO ஆய்வொன்று. இதில் வெறும் 10–12 சதவிகிதத்தினர் தான் மருத்துவ உதவியை நாடுகிறார்கள். இந்தியாவில் மரணத் தைத் தூண்டும் காரணிகளில், இதய நோய்கள் மற்றும் நீரிழிவுக்குப்பிறகு, மூன்றாவது இடத்தில் உள்ளது தற்கொலை.

தற்கொலை என்பது, பல கலையுணர்வு கொண்ட பணிவாழ்க்கைகளின் நிறைவில் வருகிற முற்றுப்புள்ளியாக உள்ளது என்கிறார் டாக்டர் லட்சுமி விஜயகுமார். தற்கொலை விஷயங்களில் சிறப்புக் கவனம் செலுத்தும் வல்லுனரான இவர், லண்டன் மற்றும் எடின்பர்க் ராயல் காலேஜ் ஆஃப் சைக் யாட்ரிஸ்ட்ஸில் இரண்டு மதிப்புறு ஆய்வுப் பொறுப்புகளை வகிப்பவர்.

இதற்கான காரணங்கள் பலவிதமாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, பெற்றோருடன், நண்பர்களுடன் அல்லது சக ஊழியர்கள், சம வயதினருடனான தனிப்பட்ட உறவுகளில் ஏற்படும் முரண்கள். இவை 15–29 வயதுள்ள இளைஞர்களிடம் மிகுந்த மனத்துயரை உண்டாக்குகின்றன.

அதேபோல், கல்விப் பிரச்னைகள் அல்லது உறவு அழுத்தம் போன்றவையும் இதற்குக் காரணங்களாகின்றன. இன்னொரு காரணம், எதையும் கச்சிதமாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம். இதுவும் மக்களை எதிர்மறையாகப் பாதிக்கிறது; அழுத்தம் தருகிறது; தற்கொலை எண்ணத்தை உண்டாக்குகிறது.

பெரியவர்களைப் பொறுத்தவரை, பெரும்பாலும் பொருளாதாரப் பிரச்னைகள் தான் இதற்குக் காரணமாகின்றன.''

மனச்சோர்வின் தீவிரத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாமைதான் தற்கொலைக்கான ஒரு முக்கியக் காரணம் என்கிறார் SCARF உதவித் தலைவர் மற்றும் தலைமைப்பொறுப்பாளர் டாக்டர் ஆர் தாரா.

மனச்சோர்வின் சில தனித்துவமான அடையாளங்கள், தனக்கு யாராலும், எதனாலும் உதவ இயலாது என்ற எண்ணம், நம்பிக்கையின்மை. தங்களுக்கு எந்த ஆதரவும் இல்லை என்று உணர்கிறவர்கள் தற்கொலையால் ஈர்க்கப்படக்கூடும்.

பல நேரங்களில், மாணவர்கள் ஒரு தேர்வில் தோல்வியடையும்போது, தான் விரும்பும் பாடப்பிரிவு அவர்களுக்குக் கிடைக்காதபோது நிகழும் அனிச்சை எதிர்வினையாக இது அமைகிறது. சில நேரங்களில், ஒரு குழந்தைக்குத் தந்தை ஓர் ஐஃபோனோ உயர் தர மோட்டார்பைக்கோ வாங்கித்தராதது போன்ற அற்பக் காரணங்களாலும் இது நிகழ்கிறது.

இன்றைய இளைஞர்கள் உடனடி மனநிறைவை விரும்புகிறார்கள். அவர்களுக்குக் காத்திருக்கும் பொறுமை இல்லை; பெற்றோரின் பார்வைக்கோணத்தைப் புரிந்துகொள்ளும் பொறுமை இல்லை என்று தொடர்ந்து சொல்கிறார் அவர்.

அதே வயதிலிருக்கும் பிறருடைய அழுத்தத்தால் இது நிகழ்வதில்லை என்று குறிப்பிடும் அவர், மாறாக, அவர்களுடைய சொந்த அழுத்தம்தான் இதற்குக் காரணமாகிறது

என்கிறார். என்னிடம் ஓர் ஐஃபோன் உள்ளது, நீயும் ஓர் ஐஃபோனை வாங்கு என்று சக இளைஞர்கள் அவர்களிடம் சொல்வதில்லை. இவர்களாகதான் அதை நினைக்கிறார்கள்: அவரிடம் ஓர் ஐஃபோன் உள்ளது. ஆகவே, என்னிடமும் ஓர் ஐஃபோன் இருக்கவேண்டும்.

அடித்தட்டு மக்களிடம் குடும்ப வன்முறை, அதீத மதுப் பயன்பாடு ஆகியவை தற்கொலையைத் தூண்டலாம். குறிப்பாக, இதுபோன்ற பிரச்னைகளின் சுமைகளைத் தாங்க இயலாத பெண்கள் தற்கொலையை நாடுகிறார்கள். வரதட்சணை மரணங்கள் கொலைகளாகவோ தற்கொலைகளாகவோ இருக்கலாம்.

தற்கொலை செய்துகொள்கிற இந்தியர்களில் பெண்களைவிட ஆண்கள்தான் அதிகம் என்கிறார் டாக்டர் லட்சுமி. ஆனால், ஆண்களில் தற்கொலை செய்துகொள்கிறவர்கள் பெரும்பாலும் வயதானவர்கள் (70 வயது அல்லது அதற்குமேல்).

பெண்களில் 18–29 வயதானவர்கள் தான் அதிகம் தற்கொலை செய்து கொள்கிறார்கள். 30க்குப்பிறகு, தற்கொலை விகிதங்கள் பாதியாகக் குறைந்துவிடுகின்றன. மேற்கத்திய நாடுகளில் ஆண்கள், பெண்கள் தற்கொலை விகிதம் 3:1ஆக உள்ளது.

உளவியல்

பெற்றோருடைய அதிக எதிர்பார்ப்புகள், ஆசிரியர்களுடைய அவமதிக்கும் கண்டிப்புகள், புளித்துப் போன ஓர் உறவு போன்றவை இளைஞர்கள் மனத்தில் தற்கொலை எண்ணங்களைத் தூண்டுகின்றன. குறிப்பாக, அவர்களுடைய ஆதரவு அமைப்பு வலுவற்றிருந்தால் இது அதிகமாக நிகழ்கிறது.

திருமணமான பெரும்பாலான பெண்கள் 30 வயதுக்குள் ஒரு குழந்தையைப் பெற்றுவிடுகிறார்கள். அவர்கள் சந்திக்கும் பிரச்னைகளைச் சமாளிப்பதற்கு இந்தப் பிணைப்பு உதவுகிறது. ஆனால், பின்னர் அந்தக் குழந்தைகள் திருமணத்தாலோ படிப்பு, வேலை காரணமாகவோ வீட்டிலிருந்து வெளியேறும்போது, அவர்கள் தங்களுடைய உடல்நலனையும் நிதி நிலைமையையும் தனியாகச் சமாளிக்கவேண்டியிருக்கிறது.

பவேஷ் பட்டேல்

இளம் மனங்களில் தற்கொலை எண்ணங்களை ஊன்றுவதில் தொலைக்காட்சித் தொடர்கள், திரைப்படங்களும் ஒரு பங்கு வகிக்கின்றன என்கிறார் டாக்டர் தாரா. ஒருவர் தன்னுடைய வாழ்க்கையை முடித்துக்கொள்வது எளிதுதான் என்பதுபோல் சில திரைப்படங்கள் காட்சிப்படுத்துகின்றன. இதை அவர்கள் உண்மை என்று நினைத்துவிடுகிறார்கள். தூக்கில் தொங்குவது அல்லது கூரை உச்சியிலிருந்து குதிப்பது அல்லது புகைவண்டிக்குமுன்னால் குதிப்பது அல்லது தன்னைத்தானே கொளுத்திக்கொள்வதில் இருக்கும் வலியைப்பற்றி அவர்களுக்கு எதுவும் தெரிந்திருப்பதில்லை.

கார்ட்டூன் படங்கள்கூட இளைஞர்கள் மனத்தில் தற்கொலை எண்ணங்களைத் தூண்டலாம். காரணம், 7 அல்லது 8 வயதுள்ள குழந்தைகள்கூட, "நான் இறக்க விரும்புகிறேன்" என்பதுபோன்ற வசனங்களைக் கேட்க நேர்கிறது.

இதற்குமுன்னால், 14 வயதைவிடக் குறைவான வயதுள்ள குழந்தைகள் தற்கொலை செய்துகொள்வது மிக மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால், சமீபகாலத்தில் 10–14 வயதுள்ள குழந்தைகள்கூடத் தற்கொலை செய்து கொள்வதைக் காண்கிறோம் என்கிறார் டாக்டர் லட்சுமி.

அந்த வயதில் தற்கொலைக்கு முயன்ற குழந்தைகளுக்கு நீங்கள் சிகிச்சையளித்திருக்கிறீர்களா என்று நான் அவரைக் கேட்கிறேன். சிகிச்சையளித்திருக்கிறேன் என்று வருத்தத்துடன் பதிலளிக்கிறார் அவர்.

எடுத்துக்காட்டாக, ஓர் அறிவாளிக் குழந்தை; அந்தக் குழந்தையில் பெற்றோர் குழந்தைக்கு மிகவும் ஆதரவாக இருந்தார்கள். கல்வி விஷயத்திலோ மற்றவற்றிலோ அவரை எந்தவிதத்திலும் கட்டாயப் படுத்தவில்லை. ஆனால், மற்ற எல்லாரும் அவர் மிகச்சிறப்பாகச் செயல்படவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்;

இதனால், அந்தக் குழந்தை திகைத்துப்போனார்; அச்சத்தில் வீழ்ந்தார்; அவர்களுடைய எதிர்பார்ப்பைத் தன்னால் நிறைவுசெய்ய இயலாவிட்டால், தான் அவர்களை ஏமாற்றிவிடுவோம் என்று உணர்ந்தார்.''

ஒருமுறை, அவர் ஒரு வகுப்புத் தேர்வில் முதல் மதிப்பெண் வாங்கினார். உடனே, அவருடைய ஆசிரியர், நீ நிச்சயமாக மாநில அளவில் நல்ல மதிப்பெண்

வாங்குவாய் என்று சொன்னார்.

இதைக் கேட்ட அந்தக் குழந்தை அழுத்தத்துக்கு ஆளானார். நான் அறிவாளியாக இருக்கலாம்; ஆனால், உங்கள் அனைவருடைய எதிர்பார்ப்புகளை என்னால் நிறைவுசெய்ய இயலுமா என்று எனக்குத் தெரியவில்லை என்று ஒரு தற்கொலைக் குறிப்பை எழுதிவைத்தார். அதன்பிறகு, வெறும் 10 வயதில் அவர் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்துவிட்டார்! அவர் சாரணர் இயக்கத்தில் இருந்ததால், அதற்கு எந்தவிதமான முடிச்சுப் போடவேண்டும் என்று அவருக்குச் சரியாகத் தெரிந்திருந்தது. இங்கு, தோல்வியைப்பற்றிய அவருடைய சொந்த அச்சத் தின் விளைவாக, தற்கொலை நிகழ்ந்தது.

இன்னொரு குழந்தை, அவருக்கு டைஃபாய்ட் காய்ச்சல் வந்திருந்தது. அவரால் தன்னுடைய தேர்வுக்குச் சரியாகப் படிக்க இயலவில்லை. ஆகவே, இன்னொரு மாணவரைப் பார்த்துக் காப்பியடித்தார். இதைப் பள்ளி நிர்வாகத்தினர் பார்த்துவிட்டார்கள். குழந்தையைப் பிடித்துவிட்டார்கள். அந்தக் குழந்தையின் பெற்றோரை மறுநாள் பள்ளிக்கு வருமாறு அழைத்தார்கள். அன்று மாலை, பள்ளிக் கட்டடத்தின் உச்சியிலிருந்து கீழே விழுந்து அந்தக் குழந்தை இறந்து விட்டார்.

நாணம் அல்லது அவமதிப்பைக் கொண்டு வருகிற எதுவும், இளைஞர்கள் மத்தியில் தற்கொலையைத் தூண்டும் முக்கியக் காரணமாகிறது. அவர்கள் இன்னும் தங்களுடைய அடையாள உணர்வை உருவாக்கிக்கொள்ளவில்லை; அழுத்தத்தைக் கையாளும் முதிர்ச்சி அவர்களுக்கு இல்லை.

இளைஞர்கள் மத்தியில் தற்கொலை என்பது ஓர் உடனடி எதிர்வினையாகும். அவர்களால் இயன்றால், அவர்கள் இதைப்பற்றிச் சிந்திக்கக்கூட மாட்டார்கள் என்று தொடர்ந்து சொல்கிறார் அவர்.

மேற்கத்திய நாடுகளில் தற்கொலை என்பது துப்பாக்கியால் அல்லது போதைப்பொருட்களை அளவுக்கதிகமாக உட்கொள்வதால் நிகழ்கிறது என்று விளக்குகிறார் டாக்டர் தாரா. ஆனால், இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், மக்கள் தூக்குப் போட்டுக்கொள்வது அல்லது தங்களைத்தாங்களே எரித்துக்கொள்வதன்மூலம் பெண்கள் தங்களுடைய உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள். இதில், தங்களைத்தாங்களே எரித்துக்கொள்வது என்பது மேற்கத்திய நாடுகளில் சிறிதும் கேள்விப்படாத ஒன்று.

இதற்கான காரணங்கள் பெருமளவு ஒரேமாதிரியானவைதாம். ஒரே வேறுபாடு, அங்கு சிறிதளவு அதிகத் தனிமை உள்ளது. சமூகத் தனிமைப்படுத்தப்படுதல் மற்றும் குறைவான சமூக ஆதரவு ஆகியவை அங்கு அதிகம் காணப்படுகின்றன. இந்தியாவில் இவை ஒரு பெரிய காரணமாக இருப்பதில்லை. ஆனால், இங்கும் அது மெதுவாகப் பரவிவருகிறது.

நாம் எல்லாரும் குடும்பங்களுடன் வாழ்கிறோம். நாம் நம்முடைய சமூக வலைப்பின்னல்களைப் பயன்படுத்திக்கொள்ளா விட்டால், அது ஒரு பிரச்னையாகிறது, மனச் சோர்வுக்கு வழிவகுக்கிறது.

இந்தியாவில் ப்ளூ வேல் சவால் என்பது பெரும்பாலும் ஊடகங்களால் பெரிதாக்கப்பட்ட ஒரு விஷயமாகதான் இருந்தது. அந்த விளையாட்டு தொடர்பான எந்த நிகழ்வையும் நாங்கள் பார்க்கவில்லை என்கிறார்.

1980களில் IIT மெட்ராஸில் ஓர் ஆலோசகராக இருந்த டாக்டர் தாரா, IITல் நுழையக் கூடிய அறிவாளிக் குழந்தைகள் இந்த அளவு பரிதாபகரமாகத் தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொள்வது ஏன் என்ற கேள்விக்கான பதிலை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறார்.

இங்கு சமூக மற்றும் பொருளாதார வேறுபாடு உள்ளது; குறிப்பாக, தொலைதூரத்திலிருந்து அல்லது கிராமப்புறங்களிலிருந்து வந்தவர்கள் இந்தச் சமமின்மையை அதிகம் சந்திக்கிறார்கள். இப்படிப்பட்ட மாணவர்களுக்கு, மிகவும் வேறு பட்ட ஒரு சூழலுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொள்வது கடினமாகிறது.

இங்கு ஆங்கிலம்தான் அதிகம் பேசப்படுகிறது. இந்தச் சூழல் மற்றும் தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள தொழில்முறைப் படிப்பின் தேவைகளுக்கேற்பத் தங்களை மாற்றிக்கொள்ள இயலாமல் அவர்கள் சிரமப்படுகிறார்கள்.

அநேகமாக, IITல் PhD ஆய்வு என்பது எப்படிப் பட்டது என்று அவர்களுக்குத் தெரிந்திருப்பதில்லை; அதன் அழுத்தங்களை அவர்களால் சமாளிக்க இயலுவதில்லை; இந்த அமைப்புகளில் ஆலோச கர்கள் இருந்தபோதும், எங்கு

கேப்ரியல் ஜகக்

ஸ்னேகா உதவித் தொலைபேசிச் சேவை

Dr லட்சுமி தொடங்கிய "ஸ்னேகா தற்கொலையைத் தடுப்பதற்கான உதவித் தொலைபேசி எண்", 1986 முதல் தன்னார்வலர் குழுவொன்றின் உதவியுடன் 24 மணிநேரத் தொலைபேசி ஆதரவை வழங்கிவருகிறது. தொடக்க கால உதவித் தொலைபேசி எண்களில் ஒன்றான இந்தச் சேவை, நகரில் தற்கொலையைத் தடுக்க முக்கியப் பணியாற்றிவந்துள்ளது.

UKல் சமாரிட்டன்களுடைய பணியைக் கண்ட இந்த மனநல மருத்துவர், அதன்பிறகு இந்த உதவித் தொலைபேசி எண்ணை நிறுவினார். தற்கொலை நாட்டம் கொண்ட மக்களுடன் பேசுவதற்கு இந்தச் சேவை தன்னார்வலர்களைப் பயன்படுத்துகிறது.

வியன்னாவில் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் தற்கொலைபற்றிய ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக நான் சென்றிருந்தேன். அப்போது, தற்கொலையைத் தடுப்பதற்காக மக்கள் என்னென்னவிதமான பணிகளையெல்லாம் செய்திருக் கிறார்கள் என்பதைக் கண்டு வியந்தேன். இது 33 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த விஷயம்; அப்போது, நம் நாட்டில் தற்கொலையைத் தடுக்க எந்தவிதமான வசதியும் இருக்கவில்லை.''

நான் முன்வைத்த யோசனை செயல்படும் என்று பலரும் நம்பவில்லை. நான் தற்கொலை செய்துகொள்ள விரும்புகிறேன் என்று உங்களிடம் வந்து யாரும் பேசமாட்டார்கள் என்று மக்கள் சொன்னார்கள். இன்னும் சிலர், வெறுமனே தன்னார்வலர்களைமட்டும் வைத்துக் கொண்டு ஓர் அமைப்பை உங்களால் எப்படி நடத்த இயலும் என்றார்கள். எனினும், நான் என்னுடைய திட்டத்தைச் செயல்படுத்தினேன். 1986ல் ஸ்னேகா-வை நிறுவினேன்.''

இந்த உதவித் தொலைபேசி எண் வருடத்தில் 365 நாட்களும் செயல்படுகிறது.

தொடக்கத்தில், பிரச்னையுள்ள வர்கள் இந்த அலுவலகத்துக்கே வந்து தங்களுடைய பிரச்னைகளைப் பேசி கொண்டிருந்தார்கள். அதன்பிறகு, இந்த வசதி தொலைபேசிச் சேவை யாக மாறிவிட்டது. இப்போது, பல இளைஞர்கள் மின்னஞ்சல் அனுப்புவதை விரும்புகிறார்கள்.

ஒவ்வொரு நாளும், ஸ்னேகாவுக்குச் சராசரியாக 60 அழைப்புகள் வருகின்றன; இவற்றில் 80 சதவிகித அழைப்புகள் தீவிரத் தற்கொலை எண்ணம் கொண்ட மக்கள் அல்லது தற்கொலை நிகழ்வின் நடுவில் உள்ள மக்களிடமிருந்து வருகின்றன: "நான் 4 மாத்திரைகளைச் சாப்பிட்டு விட்டேன். என் கையில் இன்னும் 10 மாத்திரைகள் உள்ளன. அல்லது, நான் என்னுடைய அடுக்ககக் கட்டடத் தின் உச்சியில் நின்று கொண்டிருக் கிறேன்..." இப்போதெல்லாம் எங்களுக்கு வரும் அழைப்புகள் இந்தவிதமாக அமைகின்றன என்கிறார் மருத்துவர்.

இந்தச் சூழ்நிலைகளை அவர் எப்படிச் சமாளிக்கிறார்?

எந்தவொரு மனிதருக்கும் அடிப்படையான தேவை, ஏற்றுக் கொள்ளப்படுதல்தான். அவர் என்ன செய்திருந்தாலும் சரி, பிறர் தன்னை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர் விரும்புவார்.

பிச்சைக்காரர் ஒருவர் ஸ்னேகாவுக்கு வந்தார், "தயவுசெய்து எனக்குக் கொஞ்சம் பணம் கொடுங்கள். நான் சாப்பிட விரும்புகிறேன்" என்றார். எங்களுடைய தன்னார்வலர்களில் ஒருவர் அவரை அமரவைத்து, நாங்கள் செய்யும் பணியைப்பற்றி அவருக்கு விளக்கினார்.

நிறைவாக, அவர் எழுந்து நின்று சொன்னார், தயவுசெய்து எனக்கு எந்தப் பணமும் தராதீர்கள், அம்மா. என்னை ஒருவர் ஒரு நாற்காலியில் அமரவைத்து, என்னை ஒரு மனிதப் பிறவியைப்போல் நடத்தியது இதுதான் முதல்முறை. அது தான் ஒரு நபரை முழுமையாக ஏற்றுக்கொள்ளுதல்.

அடுத்த விஷயம், வேண்டிய போது சட்டென்று கிடைத்தல். நாங்கள் 24x7 செயல்படுகிறோம்; எங்களிடம் அரசியல், மதச் சார்பு கிடையாது.

மூன்றாவது விஷயம், முழுமையாக ரகசியம் காத்தல். எங்களிடம் முழு நம்பிக்கையோடு தெரிவிக்கப்பட்ட எந்த விஷயத்தையும் நாங்கள் யாரிடமும் எந்தச் சூழ்நிலையிலும் பகிர்ந்து கொள்ளமாட்டோம்.

மிக முக்கியமான விஷயம், பச்சாத்தாபம்தான். பிரச்னையைச் சந்திப்பவரைப் புரிந்துகொள்வது; அவருக்குள் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்வது; அவர்களுடைய சூழலில் அவர்களுடன் இருப்பது.

மிகுந்த தற்கொலை எண்ணம் கொண்ட ஒருவர், தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற தீர்மானத்தை எடுப்பதற்கு முந்தைய கடைசி இணைப்பாக நாங்கள் இருக்கலாம். அந்த இணைப்பு எங்களுக்கு மிகவும் மதிப்புமிக்கது என்கிறார் டாக்டர் லட்சுமி.

இங்குள்ள தன்னார்வலர்கள் பயிற்சி பெற்றவர்கள், கடினமான வடிகட்டலின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படு கிறவர்கள்.

அவர்களுக்கு 40 மணிநேரம் பயிற்சியளிக்கப்படுகிறது; பின்னர், ஆறு மாதங்கள் தகுதிகாண் நிலையில் பணியாற்றுகிறார்கள்.

ஒவ்வொரு தன்னார்வலரும் வாரத்துக்கு நான்கு மணிநேரம் பணியாற்றுகிறார். இங்கு பணியாற்றும் தன்னார்வலர்கள் எந்தப் பாதிப்புக்கும் ஆளாகாதபடி கவனமாகப் பார்த்துக் கொள்கிறார்கள். ஏனெனில், அழுகைக் கதைகளைக் கேட்பது மகிழ்ச்சியாக இருக்காது.

பாதிக்கப்பட்டோர் குறைந்தது ஒருமணிநேரத்துக்குப் பேசுகிறார்கள்; இந்தியாமுழுவதிலுமிருந்தும், துபாய், அபு தாபிபோன்ற வெளிநாடு களிலிருந்தும்கூட அழைப்புகள் வருகின்றன. அவர்கள் ஸ்கைப் அல்லது வேறொரு சமூக ஊடக முறையில் அழைக்கிறார்கள். தேவைப்பட்டால், இப்படி அழைக்கிறவர்களைத் தன்னார்வலர்கள் ஒரு தொழில்முறை மன நலப்பராமரிப்பு நிபுணரிடம் அனுப்புகிறார்கள்.

சென்று உதவி கேட்பது என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. பல நேரங்களில், அவர்களுடைய சாத்தியத்துக்கும், அந்தப் படிப்பில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதற்கும் இடையிலுள்ள வேறுபாடுதான் பிரச்னைக்குக் காரணமாகிறது.''

தற்கொலை எண்ணம் கொண்டோருக்கு ஆலோசனை வழங்குவதன் முதல் படி, அவருக்காக அவருடன் இருக்கவேண்டும். அவருடைய பிரச்னையை நம்மால் தீர்க்க இயலாவிட்டாலும் பரவாயில்லை, அவரோடு இருப்பதே மிக முக்கியமான முன்னேற்றம்.

எடுத்துக்காட்டாக, ஒருவருடைய கணவர் மதுப்பழக்கத்துக்கு அடிமையாகியிருக்கலாம். அந்தப் பிரச்னையை நம்மால் தீர்க்க இயலாமல் போகலாம். அதேசமயம், பிரச்னையை எப்படிக் கையாள்வது என்பதற்கு நாம் வழிகாட்டலாம்; அவசரப்பட்டு மோசமான செயல் எதிலும் ஈடுபடாதபடி அவர்களை வேறு வழியில் அழைத்துச் செல்லலாம்.''

ITபற்றி அறிந்த ஒரு பெண்ணுக்கு 18 வயதில் திருமணமானது. ஆனால், அவருடைய கணவர், புகுந்த வீட்டார் அவரைப் பணிக்குச் செல்ல அனுமதிக்கவில்லை. அவர் 20களின் முற்பகுதியில் இருந்தபோது தான் அவருக்கு ஆலோசனை வழங்கியதை நினைவுகூர்கிறார் டாக்டர் தாரா.

தன்னுடைய பிரச்னைகளால் எரிச்சலடைந்த அவர், முதலில் தன்னுடைய மணிக்கட்டை வெட்டிக் கொண்டார். இதற்காக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார், அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. ஆனால் அப்போதும், அவர்கள் அவரைப் பணிக்குச் செல்ல அனுமதிக்கவில்லை.

ஆகவே, அவர் தன்னுடைய சேலையில் தூக்குப் போட்டுக் கொள்ள முயன்றார். வியப்பூட்டும் விஷயம், அப்போதும் அவர் காப்பாற்றப்பட்டு விட்டார்.

அதன்பிறகு, அவரை என்னிடம் அழைத்துவந்தார்கள். அவரைப் பகுதி நேரப் பணி செய்ய அனுமதிக்குமாறு நான் அவருடைய குடும்பத்தினரைச் சம்மதிக்கவைத்தேன்.

பின்னர் அவர் என்னை அழைத்துப் பேசினார்; ஒரு நாளைக்குச் சில மணிநேரங்கள்தான் என்றாலும், வீட்டுக்கு வெளியில் சென்று, தான் செய்ய விரும்பியதைச் செய்வதால் தான் மகிழ்ச்சியுடன் இருப்பதாகச் சொன்னார்.''

டாக்டர் லட்சுமி ஒரு குழந்தையை நினைவுகூர்கிறார். அந்தக் குழந்தையின் தாய் புற்றுநோயால் இறந்துபோனார்; குழந்தையின் தந்தை மீண்டும் திருமணம் செய்துகொண்டார். அந்தக் குழந்தையால் தன்னுடைய சிற்றன்னையுடன் ஒத்துப்போக இயலவில்லை. ஆகவே, அவர் கொசு விரட்டும் வேதிப்பொருளொன்றை உட்கொண்டுவிட்டார். அதன் பிறகு, அவரை டாக்டர் லட்சுமியிடம் அழைத்துவந்தார்கள்.

இதையடுத்து, பெற்றோருக்கும் குழந்தைக்கும் மூன்று மாதங்கள் ஆலோசனை வழங்கப்பட்டது. அதன்பிறகு, இப்போது அந்தக் குழந்தை நன்றாக இருக்கிறார் என்கிறார் மருத்துவர்.

ஒரு குழந்தை தற்கொலைக்கு முயன்று உயிர்பிழைத்த பிறகு, அந்தக் குழந்தையின் பெற்றோர் எந்த அளவு ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறார்கள்?

பெரும்பாலானோர் வருத்தத்தில் உள்ளார்கள்; குழந்தை சந்தித்துள்ள அழுத்தத்தை உணர்கிறார்கள்; சிலர் மிகவும் குற்றவுணர்ச்சியை உணர்கிறார்கள்; தங்களுடைய குழந்தையை வசதியாக, நன்றாக உணரச்செய்வதற்காக வலுக்கட்டாயமாக ஏதேதோ செய்கிறார்கள்.

மற்றவர்கள் "சமநிலையில்" உள்ளார்கள்; என்ன செய்யவேண்டும் என்பதை இயல்பானமுறையில் எடுத்துக் கொள்கிறார்கள்.

ஆனால் சிலர், தங்கள் குழந்தை குடும்பத்துக்கு அவமதிப்பைக் கொண்டுவந்துவிட்டதாக நினைக்கிறார்கள்; அழுத்தத்தைச் சந்திக்கிறார்கள்; தற்கொலைக்கு முயன்றதற்காகக் குழந்தையின்மீது சினம் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட பெற்றோருடன் அதிக நேரம் செலவிடுவது கட்டாயமாகும்; தங்கள் குழந்தை சந்தித்துள்ள பிரச்னைகளைப் புரிந்துகொள்வதற்காக அவர்களுக்கு அதிக ஆலோசனைகள் தரவேண்டியிருக்கும்.

அடுத்து, ஆலோசனை நிகழ்வுகளுக்குப் பிறகும் தற்கொலைக்கான தூண்டிகள் மீண்டும் வருமா என்பதுபற்றிப் பேசுகிறார் அவர்.

தற்கொலை என்பது மிகவும் கடுமையான அழுத்தத்தைக் கொண்ட அறிகுறி என்றும், கடுமையான இந்த நிலை 2-3 வாரங்களுக்கு நீடிக்கும் என்றும் சொல்கிறார். இந்தக் காலகட்டத்தில் அவர்களுக்கு

உரிய ஆதரவு வழங்கப்பட்டால், தற்கொலையைத் தடுக்கலாம்.

ஆம், தற்கொலைக்கு முயன்ற ஒருவருக்கு ஓராண்டு கழித்து அதேபோன்ற அழுத்தம் உண்டானால், அவருக்கு மீண்டும் தற்கொலை எண்ணங்கள் வரலாம்.

தற்கொலை எண்ணங்களைக் கொண்ட 100 பேரில் 10 பேர்தான் தற்கொலையினால் இறந்துள்ளார்கள் என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இது உணர்ச்சிவயப்பட்டு நிகழ்கிற ஒரு விஷயம், அதே நேரத்தில், பலவிதமான உணர்ச்சிகளின் கலவையினால் நிகழ்வதும் கூட.

வாழவேண்டும் என்ற விருப்பமும் சாகவேண்டும் என்ற விருப்பமும் அவர்களுக்குள் சீ-சா பலகைபோல் மேலும் கீழுமாக எழுகின்றன; போராட்டம் நடத்துகின்றன. அவர்கள் சொல்கிறார்கள்: 'நான் உண்மையில் சாக விரும்புகிறேன் என்று சொல்ல இயலாது; ஆனால், என்னால் தொடர்ந்து இப்படி வாழ்ந்து கொண்டிருக்க இயலாது.'

அந்தக் கணத்தில், வாழ்வதற்கான விருப்பத்தை அதிகப்படுத்தினால், தற்கொலையைத் தடுக்கலாம்.''

தற்கொலை என்பது, உதவியை வேண்டுகிற ஒரு கூக்குரல். அது ஒரு தகவல் தொடர்பு வடிவம். தற்கொலை எண்ணம் கொண்ட பெரும்பாலான மக்கள், தங்களுடைய சாகும் விருப்பத்தைப்பற்றி யாரிடமாவது சொல்கிறார்கள், அல்லது, குறிப்பால் உணர்த்துகிறார்கள்.

நாம்தான் அதை முறையாகக் கேட்பதில்லை. நாம் அவர்களுக்கு வெறுமனே அறிவுரை சொல் கிறோம், "கவலைப்படாதே. எல்லாம் சரியாகிவிடும். உன்னைவிட மோசமாக இருக்கும் மக்களைப் பார், அவர்களைவிட நாம் பரவாயில்லை என்று எண்ணி மகிழ்ச்சியாக இரு" என்கிறோம். மிஞ்சிப்போனால், ஒரு வாரம் விடுமுறை எடுத்துக்கொண்டு எங்கேயாவது சென்று திரும்பு என்று சொல்வோம், அவ்வளவுதான்.

தற்கொலை எண்ணங்களைத் தடுப்பதற்கு, குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சமூகத்தினரிடையே உங்களுக்கு ஆரோக்கியமான இணைப்புகள் தேவை என்கிறார் டாக்டர் லட்சுமி. அப்படிப்பட்ட இணைப்புகள் இருந்தால், நீங்கள் தனிமையாக உணரமாட்டீர்கள்.

உங்களுக்கு மனநலப் பிரச்னைகள் இருந்தால், தயவு செய்து உதவியை நாடுங்கள். பலர் மௌனமாகத் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பிரச்னைகளைப்பற்றிப் பேச விரும்புவதில்லை. காரணம், அப்படிப் பேசினால், சமூகம் தங்களைக் களங்கமாகப் பார்க்கும் என்கிற அச்சம்தான்.

எந்தவிதமான மன நலப் பிரச்னையையும் கையாள்வதற்குப் போதுமான சிகிச்சைகள், வியூகங்கள் உள்ளன. அத்துடன், பிரச்னைகள் தாற்காலிகமானவை என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். உங்களுடைய சவால்களைக் கடந்து வருவதற்குத் தேவையான விடாமுயற்சியையும் பொறுமையையும் வளர்த்துக்கொள்ளுங்கள்.

2013ம் ஆண்டில், தற்கொலை எண்ணம் கொண்டோருக்கு ஆலோசனை வழங்குவதற்கான மருத்துவ உளவியலாளர்களைக் கொண்ட 104 என்கிற இன்னோர் உதவித் தொலைபேசி எண்ணை அறிமுகப் படுத்தியது தமிழ் நாட்டு அரசு. இந்த உதவித் தொலைபேசி எண்ணை GVK EMRI என்ற தனியார் நிறுவனமொன்று இயக்குகிறது.

இந்த விஷயத்தில் ரோட்டரி என்ன செய்யலாம்?

ரோட்டரியைப்போன்ற அமைப்புகள் இந்தப் பிரச்னையைக் கையாள்வதற்குப் பெரிய அளவில் உதவலாம். அவர்கள் போலியோ ஒழிப்புக்காகவும் எழுத்தறிவுக்காகவும் நிறைய விஷயங்களைச் செய்திருக்கிறார்கள். மன நலன் என்பது இப்போதைய, நவீன நெருக்கடி.

உண்மையில், நாங்கள் SnehaChat என்ற பெயரில் ஒரு நட்பு அரட்டைச் சேவையைத் தொடங்க விரும்புகிறோம். ஏனெனில், இன்றைய மக்கள் மத்தியில் மின்னஞ்சல்கூடப் பழையதாகிவிட்டது. இதற்கு இன்னும் அதிக வளங்கள் தேவை. இந்த விஷயத்தில் ரோட்டரியால் உதவ இயலுமானால், அது மிகப்பெரிய பலன் தரும்.

அரட்டைச் செயல்முறையைக் கவனிப்பதற்கு எங்களுக்குத் தன்னார்வலர்கள் தேவை. நாங்கள் அதை ஸ்னேகா-விலிருந்து செய்ய இயலாது. ஏனெனில், நாங்கள் ஏற்கெனவே மிகுந்த வேலைப்பளுவுக்கிடையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம் என்கிறார் டாக்டர் லட்சுமி.

தற்கொலைபற்றிய விழிப்புணர்வை ரோட்டரி அதிகரிக்கலாம்; உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள குழந்தைகளை நேர்விதமான மனநிலையை வளர்த்து க்கொள்ள ஊக்குவிக்கும்வகையில் ஒரு திட்டத்தைத் தொடங்கலாம் என்று ஆலோசனை தெரிவிக்கிறார் Dr தாரா.

கிராமப்புறத் தற்கொலைகள்

கிராமப்புறங்களில் மிகப் பொதுவான தற்கொலை முறை, பூச்சிமருந்துகளைக் குடிப்பது. இதைத் தடுப்பதற்காக, பூச்சிமருந்துகள், பூச்சிக்கொல்லிகளைப் பூட்டிவைப்பதற்கான பாதுகாப்புப் பெட்டகங்கள் மக்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. இதன்மூலம், யாரேனும் திடீரென்று உணர்ச்சி வயப்பட்டுத் தற்கொலை செய்யத் தீர்மானித்தால், அந்த நேரத்தில் இந்த மருந்துகள் அவர்களுக்குக் கிடைக்காது.

கேப்ரியல் ஐசக்

ஆபிர் கங்கோபாத்யாய்

நாங்கள் கடலூர் மாவட்டத்தில் இரண்டு கிராமங்களில் இதைச் செய்துள்ளோம். கடந்த ஆறு ஆண்டுகளில், இந்த இரு கிராமங்களிலும் எந்தத் தற்கொலை மரணங்களும் நிகழவில்லை. உள்ளூர் ரோட்டரி சங்கங்களும் இவற்றைத் தங்களுடைய சமூகத் திட்டங்களாக நடத்தலாம். குறைந்த செலவில் தற்கொலையை மிகுந்த செயல்திறனோடு தடுக்கக்கூடிய முறைகளில் ஒன்றாக WHO இந்த முன்னெடுப்பைப் பாராட்டியுள்ளது என்கிறார் டாக்டர் லட்சுமி.

இப்போது அவர் இந்த மாதிரியைக் குஜராத்திலுள்ள 54 கிராமங்களில் செயல்படுத்த வுள்ளார். நாங்கள் 500 சமூக நல ஊழியர்களுக்குப் பயிற்சி யளிக்கப்போகிறோம். ஒவ்வொரு கிராமத்திலும் தற்கொலை எண்ணம் கொண்ட மக்களை இவர்கள் அடையாளம் காண்பார்கள்; அவர்களுக்கு ஆலோசனை வழங்கு வதற்கான வழிகளை முறையாகச் சுட்டிக்காட்டுவார்கள்.''

2017 மன நலப் பராமரிப்புச் சட்டம், தற்கொலை ஒரு குற்றச்செயல் இல்லை என்று தெரிவித்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்குமுன்புவரை, தற்கொலைக்கு முயலும் எவருக்கும் தண்டனை வழங்கப்பட்டுவந்தது. இது ஒரு பிரச்னையாக இருந்தது.

தற்கொலை செய்துகொண்ட ஒருவருக்கு மக்கள் மலர்களைக் கொண்டுவருகிறவர்கள்கூட அரிதுதான். வாழ்க்கை ஒருவரைப் பார்த்து “நீ வேலைநீக்கம் செய்யப்பட்டாய்” என்று சொல்வது தான் மரணம். தற்கொலை செய்து கொள்கிறவர்கள் வாழ்க்கையைப் பார்த்து “நான் விலகிக்கொள்கிறேன்” என்கிறார்கள்.

ஆகவே, மிகத் தாமதமாவதற்கு முன்னால் பிறரை நாடி உதவி பெறுங்கள். ஏனெனில், ஒவ்வொரு பிரச்னைக்கும் ஒரு தீர்வு இருக்கிறது என்று புன்னகை செய்கிறார் Dr லட்சுமி.

கேப்ரியல் ஐசக் ஒரு ஸ்வீடன் நாட்டு புகைப்படக்காரர்

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

TRFஐ ஆதரியுங்கள்

இந்த ஆண்டு கிட்டத்தட்ட நிறைவடைந்துவிட்டது; நீங்களெல்லாம் பரிசுகளைத் தருவது பற்றியும் கடைசி நேரப் பங்களிப்புகளைப்பற்றியும் சிந்தித்துக்கொண்டிருப்பீர்கள் என்று நான் அறிவேன். உங்களுடைய பாராட்டுதல்களையும் அன்பையும் காட்டுவதற்குச் சிறந்த வழி என்ன என்று நீங்கள் யோசித்துக்கொண்டிருப்பீர்கள்.

இதற்கான விடை மிக எளியது: உங்கள் பரிசுகளை ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்குங்கள். உலகில் நன்கு அறியப்பட்ட தொண்டு நிறுவனங்களில் உங்கள் ரோட்டரி அறக்கட்டளையை நம்பர் 1ஆகத் தேர்ந்தெடுத்திருக்கிறது வலுவான நிதி நலனையும் பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான அர்ப்பணிப்புணர்வையும் காட்டியதற்காக, சாரிட்டி நாவிகேட்டருடைய ஆகஸ்ட் மதிப்பீடுகளில் அதிகபட்சப் புள்ளிகளான 100 புள்ளிகளைப் பெற்றுள்ளது இந்த அறக்கட்டளை.

சாரிட்டி நாவிகேட்டர் நம்முடைய அறக்கட்டளைக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது: நாங்கள் மதிப்பிடும் தொண்டு நிறுவனங்களில் 1 சதவிகிதத் தொண்டு நிறுவனங்கள் தான் குறைந்தது 12 தொடர் நான்கு-நட்சத்திர மதிப்பீடுகளைப் பெற்றுள்ளன, ரோட்டரி அறக்கட்டளை அமெரிக்காவிலுள்ள பிற தொண்டு நிறுவனங்களைவிடச் சிறப்பாகச் செயல்படுவதை இது காட்டுகிறது.

கடந்த பல ஆண்டுகளில் நாம் வென்றுள்ள விருது களோடு இந்த அங்கீகாரமும் சேர்ந்துகொள்கிறது. உலக அளவில் போலியோவை அகற்றுவதற்கான ரோட்டரியின் அர்ப்பணிப் புணர்வுக்காக, அமைதிக்கான ஒரு பில்லியன் செயல்பாடுகள் பரப்புரையில் சிறந்த லாபநோக்கற்ற செயல் விருது கிடைத்தது. இந்தப் பரப்புரை, உலகின் மிக முக்கியமான பிரச்னைகளைக் கையாள்வதற்கான ஒரு பன்னாட்டு உலகக் குடிமக்கள் இயக்கமாகும்.

ஆகவே, அனைத்தையும்விட மிகச்சிறந்த ஒரு பரிசை இந்த உலகுக்குத் தருவதன்மூலம் உங்கள் ஆண்டை இனிதாக நிறைவுசெய்யுங்கள். ரோட்டரி அறக்கட்டளைக்கு உங்கள் ஆதரவைக் காட்டுங்கள்.

இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துகள், மகிழ்ச்சியான புத்தாண்டு வாழ்த்துகள்!



கேரி C K ஹுவாங்
TRF அறங்காவலர் தலைவர்

பழைய மற்றும் புதிய இலக்குகளை பூர்த்தி செய்தல்

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக போலியோவுக்கு எதிரான போராட்டத்தை ரோட்டரி மற்றும் ரொட்டேரியன்கள் எவ்வாறு தக்க வைத்துக் கொள்ள முடிந்தது என்று RI பொதுச் செயலாளர் ஜான் ஹியூகோவிடம் ஹார்வர்ட் பிசினஸ் ரிவியூவினால் கேட்கப்பட்டது, அவரது பதில்:

- ★ 1984 ஆம் ஆண்டில், ரோட்டரி போலியோ ஒழிப்பு இயக்கத்தில் இறங்கிய போது, இந்த நோய் பெரும்பாலான நாடுகளுக்கு ஆண்டு முழுவதும் பரவியது. எனவே, ரொட்டேரியன்கள், எல்லா இடங்களிலும், ஒரு பொதுவான காரணத்தைக் கண்டறிந்தனர்.
- ★ இது பணத்தை பங்களிப்பது மட்டுமல்ல. குழந்தைகளுக்கு NIDகளில் இரண்டு சொட்டுகளை வழங்குவதில் ரொட்டேரியன்கள் பங்கேற்றனர்.
- ★ பலன்கள் அளவிடக் கூடியனவாக இருந்தன. 1984ஆம் ஆண்டில் 350,000 வழக்குகளில் இருந்து, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் சுமார் 100 வழக்குகள் மட்டுமே இன்னும் போலியோ இல்லாத இடங்கள் என அறிவிக்கப்படாத நிலை உருவாகியுள்ளது. எனவே நாம் அந்தக் கடைசி எல்லையையும் கடக்க வேண்டும் என்பது எங்கள் அர்ப்பணிப்பு உணர்வாகும்.

2030ஆம் ஆண்டில் ரோட்டரியை நான் எங்கே பார்க்கிறேன் என்று சமீபத்திய விவாதத்தில் என்னிடம் கேட்கப்பட்டது. ரோட்டரி அமைதிக்கான நோபல் பரிசை வெல்ல வேண்டும் என்று RIPN சேகர் மேத்தா ஒரு தெளிவான அழைப்பை வழங்கியுள்ளார். அந்த குறிக்கோள் ஒவ்வொரு ரொட்டேரியனின் கனவாக இருக்க வேண்டும்.

நான் கூறிய இரண்டாவது குறிக்கோள் என்னவென்றால், ரோட்டரி உண்மையிலேயே உலகம் முழுவதும் இருக்க வேண்டும். ரோட்டரி கிளப்புகள் சீனா, அரபு நாடுகளில் கடுமையான கட்டுப்பாடுகளின் கீழ் இயக்குகிறது. மற்ற நாடுகளைப் போலவே செயல்பட அனுமதிக்க அந்த அரச ாங்கங்களை நாம் நம்ப வைக்க முடிந்தால், அது உறுப்பினர் சேர்க்கையில் பெரும் எழுச்சிக்கு வழிவகுக்கும் மற்றும் TRFவிற்கு அடித்தளத்தில் பெரும் ஆதரவு கிட்டும்.

கவனத்துடன் முயற்சித்தால் கற்பனை செய்யும் அளவை விட பல உயரங்களை ரோட்டரியில் தொட முடியும்.

குலாம் வஹன்வதி
TRF அறங்காவலர்

ரோட்டரியில் குழு இயக்கவியல் சிறப்பாக வேலைசெய்கிறது: சேகர் மேத்தா

ரஷீதா பகத்

குழு இயக்கவியல் என்பது, ரோட்டரியைவிடச் சிறப்பாக வேறு எந்த அமைப்பிலும் செயல்படுவதில்லை. ஐசக் நியூட்டன் சொன்னார், என்னால் நெடுந்தொலைவு பார்க்க இயலுகிறது என்றால், அதற்கு ஒரே காரணம், நான் மிகப்பெரிய முன்னோடிகளின் தோள்களில் நின்றிருக்கிறேன். மிகப் பலருடைய ஆதரவால்தான் நான் இன்று இந்த நிலையில் இருக்கிறேன் என்றார் RIPN சேகர் மேத்தா.

மும்பையில் RC பம்பாய் மற்றும் RID 3141 மற்றும் 3142 நடத்திய, மாவட்டங்கள் 3030, 3131, 3132 மற்றும் 3170, பம்பாய் ஹில்ஸ் தெற்கு, மும்பை டவுன்டவுன் சீ லான்ட் மற்றும் மும்பை மலபார் ஹில் ரோட்டரி சங்கங்கள் இணைந்து நடத்திய ஒரு நிகழ்வில் பேசிய அவர், அவருடைய ஆற்றல், சுறுசுறுப்பு, கடின உழைப்பு மற்றும் தொலைநோக்கைப்பற்றிய மிகுந்த பாராட்டுகளுக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார். நான் சாதிக்க இயன்றுள்ள அனைத்தும், குழு இயக்கவியலால்தான். ரோட்டரியினருடைய ஒரு குழுவுடன் நான் அமர்ந்திருக்கும்போது, என்னுடைய சொந்தத் திறமை நான்கு மடங்கு அதிகரிக்கிறது. நான் பிறருடன் பணியாற்றும்போது, எனக்கு அதிக ஆற்றல் கிடைக்கிறது, என்னுடைய மூளை இன்னும் சிறப்பாகப் பணியாற்றுகிறது. நான் மக்களின் மனிதன். என்னைச் சுற்றி மக்கள் இருந்தால்தான் என்னால் இன்னும்

RID பரத் பாண்டியா, PDG ஆஷிஸ் கங்குலி, நயன்தாரா, PRIP கலயாண் பானர்ஜி, PDG ஆஸிஸ் மேமன், PRID அஷோக் மஹாஜன் மற்றும் நந்திதா கங்குலி.

சிறப்பாகப் பணியாற்ற இயலும்.''

தான் பங்குபெறும் பெரும்பாலான கூட்டங்கள் ஒரு நாளில் தொடங்குகின்றன; ஆனால், அதே நாளில் அவை முடிவதில்லை. இதற்குக் காரணம் என்ன என்று யோசித்தால், நாம் அப்படி உழைக்கவேண்டும் என்று யாரும் நமக்கு அழுத்தம் தருவதில்லை. அந்த அளவுக்கு நாம் நம்முடைய பணியை நேசிக்கிறோம் என்று மேத்தா குறிப்பிட்டபோது, பார்வையாளர்கள் மகிழ்ச்சிக்குரல் எழுப்பினார்கள்.

கல்யாண் பேனர்ஜி RI தலைவராகத் தன்னுடைய பொறுப்பை நிறைவுசெய்தபிறகு, தெற்கு ஆசியாவில் ஒரு மிகப்பெரிய எழுத்தறிவுத் திட்டத்தைத் தொடங்கும் யோச னையை முன்வைத்தார்; அதற்காக ஒரு குறிப்பாணை ஆவணத்தை

நிறைவுசெய்யவேண்டியிருந்தது; இந்த ஆவணத்துக்காகப் பல மணி நேரம் உழைத்தபிறகு, அவர் உள்படச் சில மைய உறுப்பினர்கள் கிளம்பிவிட்டார்கள். ஆனால், மேத்தா சில ரோட்டரியன்களுடன் இரவு முழுக்கப் பணிபுரிந்து வரைவு ஆவணத்தை நிறைவுசெய்தார் என்று TRF அறங்காவலர் குலாம் வாஹன்வடி குறிப்பிட்டார்.

இதற்கும் மேத்தா அர்ப்பணிப்புள்ள ரோட்டரியன்களுடைய குழு இருந்தால் தான் இப்படிப்பட்ட பணிகள் சாத்தியம் என்று குறிப்பிட்டார்.

தன்னுடைய தலைமை ஆண்டுக்கான தன்னுடைய இலக்குகள், தொலைநோக்குப்பார்வையைப் பகிர்ந்துகொண்ட மேத்தா, தன்னுடைய இலக்குகள் சிலவற்றை நிறைவேற்றுவதற்கு நம்முடைய பகுதிகளில் உள்ள ரோட்டரியினரிடமிருந்து மிகப்பெரிய ஆதரவை எதிர்பார்த்திருப்பதாகக் குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்ட இலக்குகளில் முதன்மையான ஒன்று, போலியோவில் ரோட்டரியின் பணிகளுக்காக, போலியோ உலகிலிருந்து முழுமையாக நீக்கப் படுவதற்கு முன்பாகவே நோபல் அமைதிப் பரிசைப் பெறுவது.

நாம் போலியோவின் முடிவை நெருங்கிவிட்டோம்; இது உலகப் போரைத் தடுத்ததற்குச் சமம். இதற்கு முன் ஒவ்வோராண்டும் 3.5 லட்சம் குழந்தைகள் போலியோவால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள்; இப்போது அந்த எண்ணிக்கை வெறும் 100. நீங்கள் கணக்குப்போட்டுப் பார்த்தால், ரோட்டரியின் பணிகளால் 40லிருந்து 50 லட்சத் துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இந்த அச்சமூட்டும் நோயிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். இத்துடன், உலகில் முரணைக் குறைக்க/தவிர்க்கப் பயிற்சி பெற்றுள்ள நம்முடைய 1,110 அமைதி அறிஞர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.''

நம்முடைய பகுதிகளில் ரோட்டரியினர் செய்கிற ஆயிரக்கணக்கான சேவைத் திட்டங்களைப்பற்றிக் குறிப்பிட்ட மேத்தா, அந்தப் பணியை அளவிடுவதற்கான எண்கள் இல்லை என்பதுதான் சோகம் என்றார்.

ஆனால், இது நிச்சயம் மாறும்; இதற்காக ஓர் இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது; இது இந்தூர் இன்ஸ்டிட்யூட்டில் வெளியிடப்படும். அதன்பிறகு, எல்லா சங்கங்களும் தாங்கள் செய்கிற திட்டங்களின் மதிப்பைப்பற்றிய தரவுகளை இதில் நிரப்பவேண்டியிருக்கும்.

RID 3141ன் பணிகளைப் பாராட்டிய அவர், இந்த ஒரு மாவட்டமே மிகச்சிறப்பான பணியைச் செய்திருப்பதாகச் சொன்னார்: உங்கள் மாவட்டத்துக்கு வருவது எனக்குப் பிடிக்கும், ஏனெனில், ஒவ்வொருமுறை இங்கு வரும்போதும், நான் ஏதாவது ஒரு புதிய விஷயத்தைக் கற்றுக்கொள்கிறேன். (RID பரத் பாண்ட்யா இந்த நேரத்தில் குறுக்கிட்டு, "இந்த நிகழ்ச்சியை வழங்கும் முன்னணி சங்கமான, பழம்பெருமை மிக்க, இந்த ஆண்டு 90 வயதைத் தொடுகிற RC பம்பாய் மட்டும், சென்ற ஆண்டில் ரூ 25 கோடி மதிப்புள்ள திட்டங்களை நிறை வேற்றியுள்ளது. இதில் 11 AKS உறுப்பினர்கள் இருக்கிறார்கள், இது ஓர் உலக சாதனையாகும், உலகில் வேறு எந்த சங்கத்தையும்விட இது அதிகம்' என்றார்.)

ரோட்டரியினர் மிகப்பெரிய மற்றும் கட்டமைப்புள்ள திட்டங்களை நாடுதழுவிய அளவில் செய்யவேண்டும் என்று வலியுறுத்திய அவர், கல்வியறிவுத் திட்டத்தின் வெற்றிக்கான காரணம், அது கட்டமைப்புடன் நடத்தப்பட்டதுதான் என்றார். தடுப்பு நலன் மற்றும் WinS ஆகிய இரண்டுக்கும் நாம் அதைச் செய்யப்போகிறோம். நம்மிடம் ஒரு கட்டமைப்பு இருப்பதால், எழுத்தறிவுப் பணிகளில் GoI நம்முடன் இணைந்து செயல்படுகிறது. டாடா டெக்னாலஜீஸ் நிறுவனம் நம்முடன் ஓர் MoUல் கையெழுத்திட்டு, நம்மை அவர்களுக்கு ஆலோசகர்களாக இருக்கும்படி கேட்கிறது! WinS மற்றும் நலத் திட்டங்களிலும் நம்மால் இதைச் சாதிக்க இயலும்.''

ரோட்டரியின் மகுடத்தில் இந்தியாதான் ஒப்பற்ற வைரம் என்று தெரிவித்த RIPN, 2021–22ல் தான் RIன் தலைமைக்குத் தயாராகும் இந்த நேரத்தில் இந்திய ரோட்டரியினர்

தங்கள் நாட்டை இன்னும் சிறந்த உயரங்களுக்குக் கொண்டுசெல்வார்கள் என்று உறுதியாக நம்புவதாகக் குறிப்பிட்டார்.

எடுத்துக்காட்டாக, இந்தியா உறுப்பினர் எண்ணிக்கையில் முதலிடத்தைப் பிடிக்கவேண்டும் என்றார் அவர். தற்போது நாம் சுமார் 1.5 லட்சம் என்ற எண்ணிக்கையில் உள்ளோம்; அடுத்த மூன்றாண்டுகளில் ஒவ்வொரு ரொட்டேரியனும் ஒரே ஒருவரை உறுப்பினராகச் சேர்த்தால் கூட, இந்தியாவின் உறுப்பினர் எண்ணிக்கை 2.5 லட்சம் என்ற எண்ணிக்கையைத் தாண்டிச்செல்லும் சாத்தியம் உண்டு. இதன்மூலம் நாம் USஐத் தாண்டிச்சென்று முதலிடத்தைப் பிடிக்கலாம். துரதிருஷ்டவசமாக, USல் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்து கொண்டிருக்கிறது.

நம்மிடம் 250,000 ரோட்டரியினர் இருந்தால், நம்முடைய TRF பங்களிப்பு 40 மில்லியன் வரை செல்லலாம்; இப்போது நம்மிடம் உள்ள இரண்டு இயக்குநர்களுக்குப்பதிலாக, நான்கு இயக்குநர்கள், இரண்டு அறங் காவலர்களைக் கொண்டிருக்கலாம். இத்துடன், CoLல், மிகவும் செயல்திறன் வாய்ந்த குரல், இந்திய ரொட்டேரியன்களுடையதாக இருக்கும்!

பெண் உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை அதிகரிப்பது, ரோட்டராக்ட் இயக்கத்தை வளர்ப்பது ஆகியவை அவருடைய பிற முக்கியத்துவங்களாகும், ஆனால், இவை அனைத்துக்கும், நீங்கள் மிகவும் கடினமாக உழைக்கவேண்டும். வெறுமனே வாழ்த்துரைகளை வழங்கினால் போதாது என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

தங்களுடைய 2021–22 பொறுப்புக்காலத்தின்மூலம் மேத்தாவும் ராஷியும் RI தலைமையில் ஒரு குறிப்பிடத்தக்க முத்திரையைப் பதிப்பார்கள் என்ற தன்னுடைய கருத்தை வலியுறுத்திய PRIP கல்யாண் பேனர்ஜி, 1995ல் தான் முதன்முதலாக மேத்தாவைச் சந்தித்ததுபற்றிய ஒரு சுவையான குறிப்பைச் சொல்லிப் பார்வையாளர்களை மகிழ்வித்தார். அப்போது அவர் ஒரு துடிப்புள்ள குதிரைக்குட்டியாக இருந்தார், தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருந்தார்!''

அப்போது கல்யாண் பேனர்ஜி நேபாளத்தில் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அதில் RI தலைவர், நேபாள அரசி கலந்துகொள்வதாக இருந்தது. அப்போது, மறைந்த PDG அலோக் மித்ராவுடைய மாவட்டத்தில் நேபாளம் இடம்பெற்றிருந்தது. ஆகவே, அந்த மாவட்டத்திலிருந்து சில இளம் தன்னார்வலர்களை வழங்கும்படி அவரைக் கேட்டார் கல்யாண் பேனர்ஜி.

இதையடுத்து, அவருக்கு ஒரு குழு வழங்கப்பட்டது. அதில் இளமையான, கலகலவென்று பேசுகிற ரொட்டேரியன்கள் இடம் பெற்றிருந்தார்கள். சேகர் தலைமையில் செயல்பட்ட அவர்கள் ஒவ்வொருவரும், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்தார்கள்.

இது அவர்களுக்கும் சரி, எனக்கும் சரி, ஒரு சவாலாகவே இருந்தது. ஏனெனில், ஒரு பன்னாட்டு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்வது மிக எளிது என்று இந்த இளைஞர் குழு நினைத்தது; ஆற்றல் மிகுந்த, அதேசமயம் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கிற சுறுசுறுப்பான இந்தக் குதிரைக்குட்டிகளைச் சமாளித்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வது எனக்குச் சவாலாக அமைந்தது.

சேகர் அந்தக் குழுவைத் தீவிரமாக வழிநடத்தினார்; நான் சொன்னதை அவர் அதிகம் கவனிக்கவில்லை, பொருட்படுத்தவில்லை. ஆனால், அது ஒரு பெரிய பிரச்னையாக இல்லை. ஏனெனில், அந்த நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அப்போதிலிருந்து, அவர்கள்

RID 3141ன் GMLஐ *வெளியிடும்* RIPN *சேகர் மேத்தா.* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி,* DG *ஹர்ஜீத் சிங் தல்வார்,* RIDs *பரத் பாண்டியா மற்றும் கமல் சங்வி ஆகியோரும் உடன் உள்ளனர்.*

வழிபாட்டின் ஆற்றல்

தான் வழிபாட்டில் அதிகம் ஈடுபடுகிறவர் இல்லை என்று ஒப்புக்கொண்ட சேகர் மேத்தா, தானும் ராஷியும் இந்தியா, தெற்கு ஆசியாவைச் சேர்ந்த பலப்பல ரோட்டரியன்கள் கடந்த மூன்று மாதங்களாக எங்கள் மீது பொழிந்துள்ள, கற்பனைக்கும் எட்டாத அன்பு, நேசத்துக்காக அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

உண்மையில், அவர் RI தலைவராக முன்வைக்கப்பட்டபிறகு, பல மாவட்டங்களில் நடத்தப்பட்ட பல்வேறு பாராட்டுக் கூட்டங்களில் அவர்மீது பொழியப்பட்ட உயர்ந்த பாராட்டுகளைப்பற்றிக்கூட அவர் பேச வில்லை. இவை சில நேரங்களில் மிக அதிகமாகிவிடுகின்றன (மக்கள் அளவுக்கு மீறிப் புகழக்கூடும்).

நீங்கள் இந்தக் கூட்டத்துக்காக என்னை இந்தக் கூடத்துக்கு அழைத்து வந்தபோது, என்னைப் பேரரசர் போல் நடத்தினீர்கள். முந்தைய நாள் ஒருவர் சொல்கிறார், நீங்கள் யோகா சனம் செய்யுங்கள், சேகரை மனத்தில் வைத்து தியானம் செய்யுங்கள். இதெல்லாம் கொஞ்சம் அதிகமில்லையா? (எல்லாவற்றுக்கும் ஒரு வரம்பு இருக்கவேண்டும்), என்று கலகலப்பாகச் சிரித்தபடி சொன்னார் அவர்.

பின்னர் அவர் தொடர்ந்து குறிப்பிட்டது, இன்று நீங்கள் என்னைக் கடவுள் ராமருடனும் கிருஷ்ணருடனும் ஒப்பிட்டுள்ளீர்கள் இவற்றையெல்லாம் அந்தக் கடவுள் ஏற்றுக்கொள்வாரா ஆனால், இவை அனைத்தும் அன்பாலும் நேசத்தாலும் வருகின்றன என்பது எனக்குப் புரிகிறது!''

சற்றுத் தீவிரமான தொனியில் தொடர்ந்து பேசிய மேத்தா, ஆகஸ்ட் மாதத்தில் அவருடைய வேட்பு மனுவுக்கு முன்பாக ரோட்டரியன்கள் நடத்திய வழிபாடுகளின் அளவு மற்றும் தீவிரத்தை எண்ணித் தான் திகைத்துப் போனதாகச் சொன்னார்.

RIPN மேத்தாவுடன் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, PDG அஸீஸ் மேமன், RIDs பரத் பாண்டியா மற்றும் கமல் சங்வி.

நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னால் எனக்கு ஆயிரக்கணக்கான செய்திகள் வந்தன. அவை அனைத்தும், நாங்கள் உங்களுக்காகக் கடவுளிடம் வழிபடுகிறோம் என்றன.

ஒரு நாள், ராஷியும் நானும் ஒரு திரைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது, PDG அஸிஸ் மேமன் (TRF அறங்காவலர் வேட்பாளர்) என்னை அழைத்தார். நான் அவரைப் பின்னர் அழைப்பதாகச் சொன்னேன். ஆனால் அவரோ, தயவுசெய்து ஒரு நிமிடம் வெளியில் வாருங்கள் என்றார்.

அதன்படி நான் வெளியில் வந்தேன். மேமன் என்னிடம் தொடர்ந்து பேசினார். பாகிஸ்தானில் போலியோ முழுவதுமாக அகற்றப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இரண்டாண்டுகளாக நாள்தோறும் வழிபட்டுவருவதாகச் சொன்னார். இப்போது, கடந்த 15 நாட்களாகத் தான் இன்னொரு வழிபாட்டையும் தொடங்கியிருப்பதாக அவர் சொன்னார். இப்போது, நீங்கள் உங்களுடைய திரைப்படத்துக்குத் திரும்பிச்செல்லலாம் என்றார் அவர்.

வேட்பாளர் தேர்வானது ஆகஸ்ட் 5 மற்றும் 6 இரவில் (இந்தியாவில்) நடைபெற்றதால், ஆகஸ்ட் 5, 6 மற்றும் 7 தேதிகளில் தான் ஒரு சிறப்பு வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்ததாக PDG K A குரியச்சன் (RID 3201) குறிப்பிட்டார். அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், திருப்பதி மலைக்கு நடந்தே செல்வதாக இன்னொரு ரோட்டரியன் உறுதி கூறியிருந்தார். இன்னொருவர், தன்னுடைய நன்றியுணர்வை வெளிப்படுத்துவதற்காக ஷிர்டிக்குச் செல்வதாக உறுதிபூண்டிருந்தார்.

எனக்கு இந்தப் பொறுப்பு கிடைக்கவேண்டும் என்பதற்காக நான் ஒரே ஒருமுறைகூட வழிபடவில்லை. ஆனால், ஆயிரக்கணக்கான ரோட்டரியன்கள் எனக்காக வழிபட்டார்கள், அவர்களுடைய வழிபாடுகளால்தான் நான் இங்கு நிற்கிறேன் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இப்போது நான் வழிபாட்டின் ஆற்றலை நம்பத் தொடங்கிவிட்டேன்.

இருவரும் ஒரு பரஸ்பர ஏற்றுக்கொள்ளலை, வியத்தலை, மதிப்பை வளர்த்துக்கொண்டார்கள், அது கால் நூற்றாண்டுக்கு நீடித்துள்ளது.''

அடுத்த பல ஆண்டுகளில், இந்த இளைஞர் வெறும் சுறுசுறுப்பான குதிரைக்குட்டி இல்லை, மிக நல்ல பந்தயக் குதிரை என்று நான் தெரிந்துகொண்டேன் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் பேனர்ஜி.

அவர் கலப்படமற்ற தூய மரபுக்குதிரையும்கூட, அவரால் எந்தப் பந்தயத்தையும் வெல்ல இயலும் என்று நான் உணர்ந்தேன்.''

தன்னுடைய திறமையை அவர் நன்கு நிரூபித்தும் காட்டினார். முதலில், RI இயக்குநரானார், பின்னர் எழுத்தறிவு இயக்கத்தைச் செயல்திறனுடன் வழிநடத்தினார், இப்போது RIன் மிக உயர்ந்த பொறுப்புக்குச் செல்கிறார். இவற்றையெல்லாம் செய்துகொண்டிருக்கிற அதே நேரத்தில், அவர் பல மக்களுக்குப் பயிற்சியளித்தார், மிகச்சிறந்த குழுக்களைக் கட்டமைத்தார், புதிய தலைவர்களை உருவாக்கினார், ராஷியை மகிழ்ச்சியாகப் பார்த்துக் கொண்டார்; பெரும்பாலான நேரங்களில் அவர் நினைத்தது நடக்கும்படி அனுமதித்தார்; தன்னுடைய ஒரே வேலை தன் பெற்றோரைக் கவனித்துக்கொள்வது தான் என்பதுபோல் அவர்களைக் கவனித்துக்கொண்டார்.

2021–22க்கான RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேத்தாவைப் பாராட்டிய RI இயக்குநர் பரத் பாண்ட்யா, 2004ல் தான் முதன்முறையாக மேத்தாவைச் சந்தித்தபோதும், அதன்பிறகு, அவர் மிகப்பெரிய நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வதைக் கவனித்தபோதும், அவருடைய நிர்வாகத் திறமைகள் மிகச் சிறந்தவை என்று கண்டுகொண்டேன். அவர் எதற்கேனும் ஏற்பாடு செய்கிறார் என்றால், தன்னுடைய முழு உழைப்பையும் அதில் கொட்டுகிறார், தீவிரத் திட்டமிடல், பேரார்வம், சுறுசுறுப்பு, மிகுந்த கடின உழைப்பின்வழியாக உன்னதத்தை எட்ட முனைகிறார் என்றார்.

கொல்கத்தா இன்ஸ்டிட்யூட்டில்

RC *பாம்பே உறுப்பினர் திலீப் பிராமல்* RIPN *மேத்தாவிடம் $120,000-ற்கான காசோலை வழங்குகிறார்.*

மேத்தா பேசியபோது, கழுகுகள் எதிலும் துணிந்து இறங்குகின்றன என்று குறிப்பிட்டிருந்தார். அவருக்குக் கழுகைப்போன்ற தலைமைப் பண்புகள் இருக்கின்றன என்று நான் நம்புகிறேன். அதாவது, தீவிரமான மற்றும் தொலைநோக்குப் பார்வை; மிக உயரத்திலிருந்து மிகச்சிறிய இரையைக்கூடப் பார்க்கிற திறமை, கீழே பறந்துவந்து அதைப் பிடிக்கிற திறமை.

கழுகுகள் மிக உயரத்துக்குப் பறக்கிறவை; 10,000 அடி உயரத்தில் பறந்துசெல்கிறவை. மேத்தாவும் ஒரு கழுகைப்போன்றவர்தான். பெரிய கனவுகளைக் காண்கிற, பெரிய சாதனைகளை நிகழ்த்துகிற துணிச்சல் அவருக்கு உள்ளது. கழுகுகள் அச்சமற்றவை. புயல் வரும்போது, அவை புயலுக்கு மேல் பறக்கின்றன. அதேபோல், சேகரும் சவால்களை நேருக்கு நேர் சந்திக்கக்கூடியவர்; தான் தொடங்குகிற எதிலும் வெற்றி பெறக்கூடியவர்.''

இந்த உவமையை மேலும் விரிவாக்கிப் பேசிய பாண்ட்யா, கழுகுகள் தங்களுக்குத் தாங்களே மறுவடிவம் தந்துகொள்கின்றன, தங்களுடைய இளம் கழுகுகளை வழிநடத்தி வளர்க்கின்றன என்றார்; சேகரும் அதையே செய்கிறார். ஏனெனில், இன்னும் அதிகப் பின்பற்றுவோரை உருவாக்குகிற தலைவர்களால் பயனில்லை என்றும், தங்களைப்போல் இன்னும் அதிகத் தலைவர்களை உருவாக்குகிறவர்கள்தான் உண்மையான தலைவர்கள் என்றும் அவர் நம்புகிறார்.''

இயக்குநர் கமல் சங்வி கலகலப்பானமுறையில் பேசினார். இதுவரை பேசியவர்கள் எல்லாரும் மிகச்சிறந்த தலைமைக் குணங்கள், ஏற்பாடுசெய்யும் திறன் போன்றவற்றைக் கொண்ட ஒரு மிகத் தீவிரமான மனிதராக இந்தத் தலைவரைக் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள் என்றார். ஆனால், நான் அவருடன் பல ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறேன்; அவருடன் மிக நெருக்கமாகப் பணியாற்றியிருக்கிறேன்; இந்த மனிதருக்கு இன்னொரு மாறுபட்ட முகமும் உண்டு என்று என்னால் சொல்ல இயலும் அவர் ஒரு மிகச்சிறந்த நண்பர்.''

உருது மொழியில் எழுதப்பட்ட ஈரடிப் பாடல்களின்மீது பேரார்வம் கொண்ட சங்வி, அந்த விருப்பத்தை நன்கு வெளிப்படுத்திப் பல உருதுப் பாடல்களைப் பாடினார். அவற்றில் சில, இந்த நிகழ்ச்சிக்காக, அதில் பாராட்டப்படும் தலைவருக்காக மேம்படுத்தப்பட்டிருந்தன. இவற்றின் மூலம், மேத்தா நம்முடைய மிகச்சிறந்த நட்பை, அன்பை, விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டு, நம்மிடம் எப்போதும் நீடித்த தாக்கத்தை உண்டாக்குகிறார் என்று காட்டினார்.

சேகர் எப்படிப்பட்டவர் என்று என்னிடம் பலரும் கேட்கிறார்கள். நான் அவருடன் பல ஆண்டுகள் பணியாற்றியிருப்பதால், இன்று காலையிலிருந்து இப்படிப் பல கேள்விகளை நான் எதிர்கொள்கிறேன் இதற்கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஒரே பதில், சேகர் என்னுடைய நண்பர்களிலெல்லாம் சிறந்த நண்பர், எனக்கு எல்லாம் அவர்தான்.''

மேத்தாவின் தலைமைப் பண்புகளை வலியுறுத்திப் பேசிய

TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி, அவருடைய சங்கமாகிய RC கொல்கத்தா மகாநகர் செய்துள்ள மிகச்சிறந்த திட்டங்களையும், இந்தப் பகுதியில் இயற்கைப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்கள், சேவைகளை விரைவில் கொண்டுசெல்வதற்காக அவர் தன்னுடைய குழுவினருடன் சேர்ந்து உழைக்கிற விதத்தையும் ஆராய்கிற எவரும் இதைத் தெளிவாகப் புரிந்துகொள்வார்கள் என்றார். எழுத்தறிவின்மையை 2025க்குள் தெற்கு ஆசியாவிலிருந்து விரட்டவேண்டும் என்ற பணியில் RILMஐத் தூண்டும் இயந்திரமாக ஆக்கியது, முற்றிலும் மேத்தாவின் தலைமைதான்.

ரோட்டரி நோபல் பரிசு பெற வேண்டும் என்ற மேத்தாவுடைய இலக்கைப் பாராட்டிய வாஹன்வதி, அவரிடம் இன்னொரு கோரிக்கையை வைத்தார்; பல காரணிகளால் ரோட்டரி அவ்வளவாகப் பரவாத இடங்களிலும் ரோட்டரியைப் பரப்பப் பாடுபடும்படி அவரைக் கேட்டுக் கொண்டார்.

எடுத்துக்காட்டாக, சீனா, அரபு உலகில் பல நாடுகள். இந்த இரு பகுதிகளிலும் குறிப்பிடத்தக்க செல்வம் உள்ளது; இந்த நாடுகளில் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்தால், TRFம் பலன் பெறும்; உலகில் இன்னும் அதிக நல்லவற்றைச் செய்ய இது உதவியாக இருக்கும் என்று குறிப்பிட்டார் அவர்.

பெருமைக்குரிய இந்தப் பொறுப்பைப் பெற்றுள்ள மேத்தாவைப் பாராட்டிய PRID அசோக் மகாஜன், அவருடைய தலைமையின்கீழ் RI இன்னும் சிறந்த உயரங்களுக்குச் செல்லும் என்றார். அவரைப் பல ஆண்டுகளாக அறிந்துள்ள அசோக் மகாஜன், மேத்தா ஒரு மிகச்சிறந்த நட்சத்திரம்; உணர்ச்சிகளுக்கு அடிமையாகாத, சமநிலை மனம் கொண்ட தலைவர்; ஒருபோதும் அதிகாரத்தின் பின்னால் ஓடாதவர்; அனைத்தும் தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றன என்ற உணர்வை எப்போதும் உருவாக்குகிறவர். தொலைநோக்குப் பார்வையும் எண்ணத் தெளிவும் கொண்ட ஒரு மனிதர்; தன்னுடைய பார்வைகளை யாரிடமும் திணிக்காதவர், அதனால் மாறுபட்ட மனிதர்களுடன் அவரால் பணியாற்ற இயலுகிறது என்று உறுதிகூறினார்.

அரிதாகிப்போன தொலைபேசி அழைப்புகள்

தான் எட்டியுள்ள உச்சத்துக்கு ரோட்டரியில் தான் மிகவும் கடமைப்பட்டிருக்கிற ஒருவர், RI முன்னாள் தலைவர் கல்யாண் பேனர்ஜிதான் என்றார் RIPN சேகர் மேத்தா. அவருடன் ஒவ்வொருமுறை பேசும்போதும், நான் ஏதாவது ஒரு புதிய விஷயத்தைக் கற்றுக் கொள்கிறேன். அவரைப்போல் யாராலும் சொற்களை, சொற்றொடர்களை மிகச்சிறப்பாகப் பயன்படுத்த இயலாது; அவரிடமிருந்து நான் நிறைய விஷயங்களைக் கற்றுக்கொண்டுள்ளேன்.''

அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு முக்கியமான நிகழ்விலும் பேனர்ஜி இருந்துள்ளார். என்னால் எப்போதும் மறக்க இயலாத ஒரு விஷயம், நான் (DGயாக) என்னுடைய கருத்தரங்கத்தை நடத்தியபோது, அவருடைய மகளுக்குத் திருமணம் நடைபெறவிருந்தது. ஆனால், இரண்டாவது நாளில், விருந்தினர்கள் எல்லாரையும் வீட்டிலேயே விட்டுவிட்டு, ஒரு மாலை நேர விமானத்தைப் பிடித்துக் கொல்கத்தா வந்தார் அவர், தன்னுடைய சொற்பொழிவை நிகழ்த்தினார், பின்னர் மீண்டும் பறந்து சென்றார்.

தனக்குப் பேனர்ஜி வழங்கிய வழிகாட்டுதல் எப்போதும் அழுத்தம் உண்டாக்குவதாக இருந்ததில்லை என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டைச் சொன்னார் மேத்தா. பல ஆண்டுகளாக, பேனர்ஜியும் அவரும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை தொலைபேசியில் பேசுகிறோம். 80 சதவிகித நேரங்களில் அவர்தான் என்னை அழைப்பார்.

ஆனால், நான் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில் தொடங்கி, அவருடைய தொலைபேசி அழைப்புகள் அரிதாகிவிட்டன. இந்தச் செயல், அந்த மனிதரைப்பற்றிப் பல விஷயங்களைச் சொல்கிறது. மற்றவர்கள் தொலைபேசி அழைப்புகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருப்பார்கள்; ஆனால் அவரோ, அவற்றைக் குறைத்துக்கொண்டார். காரணம், அவர் தன்னுடைய இருப்பை என் மீது ஓர் அழுத்தமாகச் சுமத்த விரும்பவில்லை. இதற்காக நான் அவரை வணங்குகிறேன்!''

TRF அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, பாகிஸ்தான், RID 3271ஐச் சேர்ந்த PDG அஸிஸ் மேமன், பல ஆண்டுகளாகத் தான் மேத்தாவுடன் பல நிலைகளில் பணியாற்றியிருப்பதாகக் குறிப்பிட்டார். அவர் ஒரு மிகச்சிறந்த தலைவர், மிகச்சிறந்த தொலைநோக்கும், தகவல்களைக் கூர்ந்து கவனிக்கிற பார்வையும் கொண்டவர் என்றார். வெவ்வேறு நிலைகளில் உங்களுடன் பணியாற்றுவது எனக்கு ஒரு பெருமையாக இருக்கும்; அவற்றில் ஒன்று, 40 ஆண்டுகளுக்குமுன் நாம் அளித்த ஒரு வாக்குறுதி: போலியோவைப்போன்ற ஒரு முடக்கும் நோயால் எந்தக் குழந்தையும் துன்புறாது. உங்களுடைய தலைமையின் கீழ், நாம் இன்னும் கடினமாக உழைப்போம். போலியோ இல்லாத உலகை உறுதிசெய்வோம்.''

மும்பைக்கு RIPNன் வருகையைக் கொண்டாடும்வகையில், RC பம்பாயைச் சேர்ந்த திலீப் பிரமல் மேத்தாவுக்கு 120,000க்கான காசோலையை வழங்கினார்.

DGக்கள் ஹர்ஜித் சிங் தல்வார் (D 3141), மோகன் சந்தவர்கர் (D 3142), சுஹாஸ் வைத்யா (3132), கிரீஷ் மசுர்கர் (3170), ராஜேந்திர பாம்ரே (D 3030) மற்றும் PDG பிரசாந்த் தேஷ்முக் (3131) ஆகியோர் மேத்தாவின் சிறந்த முன்னேற்றத்தைப் பாராட்டினார்கள். DG தல்வார் கொண்டுவந்த GMLஐ மேத்தா வெளியிட்டார்.

RC பம்பாயின் தலைவர் ப்ரீத்தி மேத்தா, சங்க உறுப்பினர் சந்தீப் அகர்வாலா ஆகியோர் இக்கூட்டத்தில் பேசினார்கள்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

போலியோவின் கடைசி மைலுக்காக, $2.6 பில்லியனை வழங்குவதாக உறுதிகூறுகிறார்கள் உலகத் தலைவர்கள்

ரஷீதா பகத்

கேட்ஸ் ஃபௌண்டேஷன் நிறுவனர் பில்கேட்ஸ் மற்றும் TRF*ன் வருங்காலத் தலைவர்* K R *ரவீந்திரன் அபுதாபியில் நடைபெற்ற போலியோ ஒழிப்பு மாநாட்டில்.*

இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதற்கான உலக அளவிலான ஒரு திட்டத்துக்காக, பல உலக அரசாங் கங்களும் கொடையாளிகளும் $2.6 பில்லியன் வழங்குவதாக உறுதிகூறியிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இந்தத் திட்டம், இப்போது கடைசி மைலை எட்டிவிட்டதாகப் பன்னாட்டு நல வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள். இளம்பிள்ளைவாதத்தை முற்றிலுமாக அகற்றுவதற்கான வியூகத்தை ஆதரிக்கத் தேவைப்படும் மொத்தத் தொகை, $3.27 பில்லியன்.

கேட்ஸ் அறக்கட்டளை வழங்கும் $1.08 பில்லியன் நன்கொடையையும் சேர்த்து, ஒவ்வோராண்டும் 450 மில்லியன் குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கப் பயன்படுத்தப்படும்.

பன்னாட்டுத் தலைவர்கள் பங்குபெற்ற இந்த நிகழ்ச்சியை அபுதாபியின் கிரீட இளவரசர் ஷேக் முகம்மது பின் ஜாயெத், பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை இணைந்து வழங்கினார்கள்; அரேபியத் தீபகற்பத்தில் உள்ள மிகப்பெரிய கலை மற்றும் பண்பாட்டு அருங்காட்சியகமான, பிரமாண்டமான, ஃபிரெஞ்சு இலூவாவுடன் இணைந்து கட்டப்பட்ட இலூவா-வில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. 'கடைசி மைலை எட்டுதல்' என்ற தலைப்பிலான உரையாடல் மன்றத்தின்வழியாக, இளம்பிள்ளைவாதத்தை அழிப்பதற்கு ஓர் உறுதியான முறையில் ஆதரவை வெளிப்படுத்துவதற்காக இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது ஒரு தனித்துவமான ஒரு நாள் நிகழ்ச்சி, அழைப்பிதழ் பெற்றவர்கள்மட்டுமே இதில் கலந்துகொள்ள இயன்றது. பொழுது போக்கு, பிற கவனச்சிதறல்கள் போன்ற ஆடம்பரங்களெல்லாம் இல்லாமல் இந்நிகழ்ச்சி நடை பெற்றது. நாள்முழுவதும், மையத் தலைப்பில்மட்டுமே முழுக் கவனமும் செலுத்தப்பட்டது. நலப் பராமரிப்பு மற்றும் இளம்பிள்ளைவாதம் தொடர்

பான துறைகளைச் சேர்ந்த பன்னாட்டு வல்லுனர்கள் அதிகாரப்பூர்வமான வழங்கல்களையும் விவாதங்களையும் நிகழ்த்தினார்கள் என்றார் PRIP மற்றும் ரோட்டரி அறக்கட்டளையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள K R ரவீந்திரன். இந்த நிகழ்ச்சியில் RIயின் பிரதிநிதிகள் குழுவுக்கு இவர் தலைமை தாங்கினார். இவருடன் IPPC தலைவர் மைக் மெக்கவர்ன் மற்றும் உறுப்பினர் ஜுடித் டிமென்ட், இளம்பிள்ளைவாத இயக்குநர் கேரல் பாண்டக் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட உறுதிகூறுதல் கணத்தின்போது, உலகத் தலைவர்கள் மொத்தம் $2.6 பில்லியன் தொகைக்கு உறுதிகூறினார்கள் என்று தொடர்ந்து கூறினார் அவர். கேட்ஸ் அறக்கட் டளை $1.08 பில்லியன் வழங்குவதாக உறுதிகூறியது, ஷேக் ஜாயெத் $160 மில்லியன் வழங்குவதாக உறுதிகூறினார். இதேபோல் பெரிய தொகைகளை வழங்கிய மற்றவர்கள், UK அரசாங்கம் $514.8 மில்லியன் வழங்குவதாக உறுதிகூறியது; US அரசாங்கம் $215.92 மில்லியன் வழங்குவதாக உறுதிகூறியது. இந்த நோக்கத்தைப் பல அரசாங்கங்கள் ஆதரித்திருக்கின்றன, நிதிகளை வழங்குவதாக உறுதிகூறியிருக்கின்றன என்றால், அவர்களை இதற்குச் சம்மதிக்கச்செய்வதில் ரோட்டரியின் ஆலோசனைகள் ஒரு முக்கியப் பங்கை ஆற்றியுள்ளன என்று ரோட்டரி செய்திகளிடம் கூறினார் ரவீந்திரன்.

இளம்பிள்ளைவாதத்தை முற்றிலுமாக அழிக்கும் முயற்சியில் ரோட்டரி ஆற்றிவரும் முக்கியப் பங்கை பில் கேட்ஸே பாராட்டிப் பேசியுள்ளார். ஃபோர்ப்ஸ் இதழ் அவரை இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான தலைமை நிதியளித்தவர் மற்றும் நிதி திரட்டியவர் என்று பாராட்டியபோது அந்த இதழுக்கு அவர் வழங்கிய பேட்டியில் இதைக் குறிப்பிட்டிருக்கிறார். இளம்பிள்ளைவாதத்தை முற்றிலுமாக அழிப்பதற்காகப் பன்னாட்டளவில் நிதி திரட்டும் முயற்சியை வழிநடத்தியதற்காக RIயை குறிப்பிட்டுப் பாராட்டிய கேட்ஸ், அநேகமாக ஒவ்வொரு

அபுதாபி இளவரசர் ஷெய்க் முகமது பின் சயிதுடன் பில் கேட்ஸ்.

நாட்டிலும் ரோட்டரிக்கு உறுப்பினர்கள் உள்ளார்கள். அது எங்களுக்கு மிக மிக உதவியாக அமைந்தது. அந்த உறுப்பினர்கள் 1988 முதலே இந்த நோக்கத்துக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறார்கள், அதாவது, கேட்ஸ் அறக்கட்டளை இளம்பிள்ளைவாதத்துக்கெதிரான போரில் ஈடுபடுவதற்கெல்லாம் முன்பாகவே அவர்கள் இதில் ஈடுபட்டு வந்துள்ளார்கள் என்றார். குறிப்பாக, இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரசாங்கம் ஆகிய பகுதிகளில் உள்ள ரோட்டரியன்கள் தங்களுடைய அரசியல் தலைவர்களுக்கு எழுதுவது, அவர்களைச் சந்தித்துப் பேசுவது ஆகியவற்றில் செயல்திறனுடன் செயல்பட்டுள்ளார்கள். முதல் சில ஆண்டுகளில், விஷயங்கள் மிகவும் நன்றாக நடந்தன. நாம் இளம்பிள்ளைவாதத்தை முற்றிலுமாக அகற்றும் நிலையை நெருங்கிவிட்டோம் என்று மக்கள் நினைத்தார்கள். இதனால், அவர்கள் இதைத் தொடர்ந்து கவனமாகச் செய்தது நல்ல விஷயம். ஏனெனில், நாம் தொடக்கத்தில் எதிர்பார்த்ததைவிட இதற்கு அதிக ஆண்டுகள் ஆகும் என்பது இப்போது நமக்குப் புரிகிறது என்றார்.

RI சார்பில் $150 மில்லியன் வழங்குவதாக உறுதிகூறிய ரவீந்திரன், பன்னாட்டளவிலான இளம்பிள்ளைவாத ஒழிப்பு முன்னெடுப்பின் முன்னோடிக் கூட்டு நிறுவனங்களில் ஒன்றான ரோட்டரி, 30 ஆண்டுகளுக்குமேலாக இளம்பிள்ளைவாதத்தை நீக்கப் பணியாற்றிவருகிறது. 122 நாடுகளில் $2.5 பில்லியனுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்துகளை வழங்குவதற்காக, ரோட்டரியன்கள் $2 பில்லியனுக்கு மேல் பங்களித்துள்ளார்கள். ரோட்டரியன்கள் அனைவருடைய சார்பில், இளம் பிள்ளைவாதத்தை முற்றிலுமாக அழிக்கும் முயற்சிக்காக எங்களுடைய தொடர்ந்த, ஓய்வில்லாத ஆதரவைப் பெருமையுடன் அறிவிக்கிறேன், இதற்காக $150 மில்லியன் கூடுதல் தொகையை வழங்கவும் உறுதி கூறுகிறேன் என்றார்.

இதற்குமுன், நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் இயக்குநரான டாக்டர் ராபர்ட் ரே ரெட்ஃபீல்ட் அமெரிக்க அரசாங்கத்தின் சார்பில் பேசியபோது, ரோட்டரியை மிகவும் பாராட்டினார். அப்போது அவர் குறிப்பிட்டது, 1985ல், உலகில் ஒவ்வொரு குழந்தைக்கும்



PRIP K R *ரவீந்திரன்.*

உலகின் மிகப்பெரிய நலப் பணியாளர் குழுக்களில் ஒன்றை ஆதரிப்பதில் தொடங்கி, அனைத்துக் குழந்தைகளுக்கும் தடுப்பு மருந்துகளைக் கிடைக்கச்செய்வது வரை, பன்னாட்டு இளம்பிள்ளைவாத அகற்றல் முன்னெடுப்பானது நம்மை இளம்பிள்ளைவாதம் இல்லாத உலகை நோக்கி இன்னும் அருகில் அழைத்துச் செல்வதுடன், பலவிதமான நலத் தேவைகளையும் கையாள்வதற்குத் தேவையான மருத்துவ உள் கட்டமைப்பையும் உருவாக்குகிறது என்றார் WHO பொது இயக்குநர் டாக்டர் டெட்ராஸ் அட்ஹானம் கிப்ரெயெசஸ்.

அபுதாபி நிகழ்வில், தன்னுடைய நாட்டைச் சேர்ந்த வரும், எத்தியோப்பியாவின் வெற்றிகரமான மாரத்தான் ஓட்டக்காரருமான அபெபெ பிகிலாவைச் சுட்டிக் காட்டிப் பேசிய அவர், மாரத்தானில் கடைசி மைல்தான் எப்போதும் மிகக் கடினமானது என்று குறிப்பிட்டார்; இளம்பிள்ளைவாதத்தை அகற்று வதிலும் இது உண்மை, நாம் அந்தக் கடைசி மைலில் இப்போது இருக்கிறோம் என்றார்.

GPEI உறுதி கூறுதல் நிகழ்வை அபுதாபியில் நடத்தியதை எண்ணி நாங்கள் மிகவும் பெருமைப் படுகிறோம்; இதில் கலந்து கொண்ட அனைவரையும், இளம்பிள்ளை வாதத்தை அகற்றுவதற்காக அவர்கள் வழங்கி வரும் அர்ப்பணிப்புக்காகப் பாராட்டுகிறோம் என்றார் பன்னாட்டு ஒத்துழைப்புக்கான UAE ஒன்றிய அமைச்சர் ரீம் அல் ஹஷிமி. எமிரேட்ஸ் இளம் பிள்ளைவாதப் பரப்புரையானது 2014ல் தொடங்கப்பட்டது, அப்போது தொடங்கி, 430 மில்லியனுக்கும் மேற்பட்டோருக்கு இளம்பிள்ளைவாதத் தடுப்புமருந்துகளை வழங்கியுள்ளது. பாகிஸ்தானின் மிக உள் பகுதி களுக்குக் கூட இந்தத் தடுப்பு மருந்துகளை வழங்கியுள்ளோம். ஒவ்வொரு குழந்தையையும் சென்றடையவேண்டும் என்ற எங்களுடைய இலக்கில் நாங்கள் உறுதியாக உள்ளோம். நாம் ஒன்றாகச் சேர்ந்து, வெறுமனே வரலாற்றில் இடம்பெறுகிற ஒரு விஷயமாக இளம்பிள்ளைவாதத்தை மாற்றிவிடலாம் என்று நம்புகிறோம்.■

இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான தடுப்பு மருந்து கொடுக்கவேண்டும், இளம்பிள்ளைவாதம் இல்லாத ஓர் உலகுக்குள் நுழையவேண்டும் என்பதற்காக RIயில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது. அப்போது அந்த அமைப்பு சாத்தியத்தைக் கண்டது; இளம் பிள்ளைவாதத்தை முற்றிலுமாக அழிக்கவேண்டும் என்ற தேடலில் உலகை வழிநடத்தியது. மனிதர்களுடைய வாழ்க்கை நிலையில் ஒரு பொருளுள்ள தாக்கத்தைத் தங்களால் உண்டாக்க இயலும் என்று நம்பினார்கள். அவர்களைப் பொறுத்த வரை, இது வெறும் ஆசை இலக்கு இல்லை. இது ஒரு மனநிலை: இதைச் செய்து விடலாம் என்கிற உறுதியான நம்பிக்கை.

ரவீந்திரனும் அவருடைய குழுவினரும், முக்கியமான இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டதுடன், எதிர்வரும் சவால்களைப்பற்றிக் கேட்ஸ் அறக்கட்டளைக் குழுவினர், WHO பொது இயக்குநர், பாகிஸ்தான் (இந்நாட்டு அரசு கடைசி மைல்க்கு $160 மில்லியன் தொகையை வழங்குவதாக உறுதிகூறியுள்ளது), ஆஃப்கானிஸ்தான் நல அமைச் சர்கள், ஜெர்மனி, கனடா மற்றும் ஆஸ்திரேலியப் பிரதிநிதிகளுடன் பல ஆலோசனைகளையும் நடத்தினார்கள்.

இதற்குமுன்பாக, இளம்பிள்ளை வாத வைரஸுடைய மூன்று வகைகளில் இரண்டாவது வகை பன்னாட்டளவில் முற்றிலுமாக அகற்றப்பட்டுவிட்டது என்று WHO அறிவித்தது. இதுபற்றி அவர்கள் வெளியிட்ட ஒரு பத்திரிகைக் குறிப்பு இவ்வாறு தெரிவித்தது: 1988 முதல் ஆண்டுக்கு 350,000 இளம்பிள்ளைவாத நிகழ்வுகள் கண்டறியப்பட்டுவந்தன; அத்துடன் ஒப்பிடும்போது, பன்னாட்டளவில் இளம்பிள்ளைவாத நிகழ்வுகளின் எண்ணிக்கை 99 சதவிகிதத்துக்கு மேல் குறைந்துவிட்டது. எனினும், பாகிஸ்தான், ஆஃப்கானிஸ்தானில் வகை 1 இளம்பிள்ளைவாத வைரஸ் இன்னும் தோன்றிவருகிறது. அங்கு இந்த வைரஸ் இந்த ஆண்டில் 102 பேரைப் பாதித்துள்ளது. 2017ல் பதிவுசெய்யப்பட்ட பன்னாட்டு ஆண்டுப் புள்ளிவிவரமான 22 நிகழ்வுகள் என்கிற குறைந்த எண்ணிக்கைச் சாதனையுடன் ஒப்பிடும்போது, இது அதிகமாகும்.

ஆப்பிரிக்காவில் வைல்ட் இளம்பிள்ளைவாத நிகழ்வுகளைக் கொண்டிருக்கிற கடைசி நாடாகிய நைஜீரியாவில், 2016க்குப் பின் வைல்ட் இளம்பிள்ளைவாதம் காணப்படவில்லை. 2020ல் ஒட்டு மொத்த ஆப்பிரிக்கப் பகுதியும் வைல்ட் இளம்பிள்ளைவாதம் இல்லாத பகுதியாகச் சான்றளிக்கப்படும்.

SERVICE ABOVE SELF

2020 B2B MEET

ROTARY CONNECTS THE WORLD

First of its Kind...First time in Pune....Soon in other Metros

Indias Biggest Rotary Business to Business Meet

This meet is for facilitating selling to or purchasing from a Rotarian.
Assured integrity in business deals within Rotarian Brotherhood

26th & 27th February 2020

at Hotel Four Points By Sheraton
Opp Inorbit Mall, Nagar Road, Pune 411014

Rs. 35,000/-*
RESIDENTIAL PLAN
Cost includes stay for 3 nights (twin sharing) at the 5 star venue + 3 breakfasts + 2 lunches + 2 dinners each for the 2 people representing your organisation

Rs. 18,000/-*
NON RESIDENTIAL PLAN
Cost includes 2 lunches + 2 dinners each at the 5 star venue on the event days for the 2 people representing your organisation

*Plus GST@ 18%
Travel Costs to be borne by participants

Learn about products and Services within the Rotarian Businessmen Community thereby saving huge costs incurred on advertising / marketing / aquiring know-how

Information Technology
Hardware, Software & Systems
Construction
Materials / Interiors / Architects
Energy
Gas / oil / Solar / Electricals
Electronics
Products / Appliances / Gadgetry
Services
Consultants / Marketing / Finance
Medical
Pharma / Instruments / Hospitals

Hospitality
Hotels / Restaurants / Products
Automobiles
Manufacturers / Ancillary / Parts / Services
Manufacturing
Mechanical / Material Handling / Processes
Food
Raw Material / Machinery / Packaging
Industrial Supplies
Uniforms / Safety & Security Equipment
Government Supplies
Miscellaneous

Meet & interact with Rotarians from all over India

Organised by
Rotary Club of Pune Far East
Dist. 3131 Club No. 30952

In Association with :
THE TIMES OF INDIA
RMB

Theta : +91 9823011145

For details Call us on +91 72494 16788 or email us at rotaryb2bpune@gmail.com

சட்ட விரோதமான குடியேறிகளை UKக்குக் கடத்துதல்

வினய் காமத்

அக்டோபர் 23 அன்று, எஸ்ஸெக்ஸில் பெரிய பெட்டியில் 39 பேர் இறந்து கிடந்தார்கள் என்ற சோகமான செய்தி, கண்டப் பகுதியிலிருந்து UKக்குச் சட்ட விரோதமாகக் குடியேறிகளைக் கடத்தி வருவது இன்னும் தொடர்கிறது என்பதற்கான ஒரு நினைவூட்டலாகும். இச்சோகத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட போது, என் மனம் 25 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற நிகழ்வுகளை நோக்கிச் சென்றது. அப்போது நான் ஒரு வேலை விஷயமாக UK மற்றும் ப்ரஸ்ஸெல்ஸில் இருந்தேன். இப்படிப் பெரிய பெட்டிகளைப் பயன்படுத்தி மக்களைக் கடத்தும் செயலின் பின்னணியிலிருக்கிற மனச்சாட்சியற்ற கும்பலைப்பற்றி ஆராய்வதுதான் அந்த வேலை.

அது 1995ம் ஆண்டு. குக் அறிக்கையைப்பற்றி நான் அப்போது கேள்விப்பட்டிருக்கவில்லை; UKல் பல மில்லியன் பேர் விரும்பி ஏற்றுக் கொண்ட ஒரு புலனாய்வுத் தொலைக்காட்சி நிகழ்ச்சி அது என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. பிர்மிங்கமை அடிப்படையாகக் கொண்ட TV செய்திச்சானலும், சுதந்தரத் தொலைக்காட்சி வலைப்பின்னலின் (ITN) ஒரு பகுதியுமான மத்தியத் தொலைக்காட்சியால் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சி அது; அதை வழங்கியவர் ரோஜர் குக். அவருடைய அரை மணி நேர நிகழ்ச்சிகளைப் பல பார்வையாளர்கள் விரும்பிப் பார்த்தார்கள். நேரடியான மற்றும் ஆற்றல் மிகுந்த தொலைக்காட்சி வழங்குநரான குக், தானே களத்தில் இறங்கிச் செயல்படும் அறிக்கைகளை வலியுறுத்தினார். இதற்காகப் பல நேரங்களில் வேடம் போட்டுக்கொண்டு நடிக்கவேண்டியிருந்தது, ரகசிய மாகக் காட்சிகளைப் படமாக்க வேண்டியிருந்தது. நிறைவாக, படமாகப் பதிவு செய்யப்பட்ட அனைத்துச் சான்றுகளுடன், ‘ஐயத்துக்கு இடமான நபரை’ நேரடியாக எதிர்கொள்வார் குக்.

அப்போது இந்தியா டுடே இதழில் பணியாற்றிக்கொண்டிருந்த ஹரிந்தர் பவேஜாவும் நானும் அந்த நேரத்தில் பிரிட்டிஷ் வெளிநாட்டு அலுவலக உதவித்தொகையின்கீழ் UKல் இருந்தோம். ஐரோப்பியக் கண்டத்தில் சில பகுதிகளில் இருந்து UKக்குச் சட்டவிரோதமாக வருகிற குடியேறிகளைப்பற்றி குக் அறிக்கை உருவாக்கிக்கொண்டிருந்த நிகழ்ச்சியில் உதவுவதற்காக நாங்கள் ITNக்கு நியமிக்கப்பட்டோம். கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலானவர்கள் இருந்தார்கள். ஆங்கிலக் கடற்கரை யிலுள்ள டோவர் வழியாக, மிகப் பெரிய பெட்டிகளைக் கொண்ட ட்ரெய்லர் வண்டிகளின்வழியாக இந்தக் குடியேறிகள் கடத்தப்பட்டார்கள். இந்த ட்ரெய்லர்களில் பிரிட்டிஷ் ஓட்டுநர்கள், எண் பலகைகள் இருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான ட்ரக்குகள் முன்னும் பின்னுமாகச் சென்று வருகிற சூழ்நிலையில், இவர்கள் நிறுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

பிர்மிங்கமில் உள்ள, ஆங்கிலோ-கரீபியர் ஒருவரோடும் இந்தியர் ஒருவரோடும் தொடர்புடைய அப்படிப்பட்ட ஒரு வலைப்பின்னலைப்பற்றி இந்த நிகழ்ச்சியின் ஆராய்ச்சியாளர்களுக்குத் தெரியவந்திருந்தது. எல்லைக்கோட்டின் வழியாக ஒரு ட்ரக்கை ஓட்டத் தயாராக இருக்கும் ஓட்டுநர்களாக இரண்டு பேரை நிறுத்திவைத்தது ITN. அவர்களுடைய யோசனை, ரகசியக் கேமெராக்களைக் கொண்ட ஒரு ட்ரக்கை அமைப்பது, ஒட்டுமொத்தச் செயல்பாடுகளையும் பதிவுசெய்வது, பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு

குர்திஷ் அகதிகளை சேர்ந்த இளம் ஆலன் குர்தியின் உடல் துருக்கியில் மத்திய தரைக்கடல் கடற்கரையில் ஒதுங்கியது.

அதைப் போட்டுக்காட்டுவது. இதன்மூலம், கண்டறியப்படாமல் நிகழ்ந்துவரும் மனித வர்த்தகத்தை வெளிப்படுத்துவது. ஓட்டுநர்கள் ஒவ்வொருவருக்கும் கிட்டத்தட்ட £6,000 வழங்கப்பட்டது. குடியேறிகள் கடத்தப்படுவதற்காக £1,800–2,000 என்கிற மிகப்பெரிய தொகையைத் தரவேண்டியிருந்தது. இப்படி நூற்றுக்கணக்கானோர் கடத்தப்படுவதால், இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல லாபம் தரும் தொழிலாக இது அமைந்து விட்டது.

ப்ருஸ்ஸெல்ஸில் துணிகரம்

எல்லாம் சரியாக வரவேண்டும் என்பதற்காகக் குக் அறிக்கைக் குழுவினர் எவ்வளவு செலவழிக்கவும் தயாராக இருந்தார்கள். அவர்கள் ஒரு மிகப்பெரிய ட்ரெய்லர் வண்டியை வாடகைக்கு எடுத்திருந்தார்கள்; அவர்கள் நியமித்த ஓட்டுநர்கள் அதைக் கடத்தல் கும்பலிடம் ஓட்டிச்செல்வார்கள். அந்த ட்ரக்கில் ரகசிய கேமெராக்களும் மைக்ரோஃபோன் ஒலிவாங்கிகளும் பொருத்தப்பட்டன. உள்ளே என்ன நடக்கிறது என்பதை ஓட்டுநர்கள் தெரிந்துகொள்வதற்காக, முன்னால் திரைகளும் பொருத்தப்பட்டன. இந்தக் குடியேறிகளில் பெரும்பாலானோர் பாகிஸ்தானியர்கள், இந்தியர்கள். அதனால்தான் ஹரிந்தரும் நானும் இதில் இணைக்கப்பட்டோம். நாங்கள் குடியேறிகளாக நடிக்கவேண்டும்; கேமெரா, ஒலிவாங்கி பொருத்தப்பட்ட இந்த ட்ரக்கில் நுழையவேண்டும்; பிறரைப் பேட்டியெடுக்கவேண்டும். இவை அனைத்தும் திரைப்படச்சுருளில் பதிவாகிவிடும். இந்தத் திட்டத்தின் நோக்கம், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவரை நீண்டு விரிந்திருந்த அந்தக் கடத்தல் வலைப்பின்னலைப்பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்வதுதான்.

நாங்கள் ப்ருஸ்ஸெல்ஸிற்கு கிளம்பினோம். பெரும்பாலான குடியேறிகளை உள்ளே ஓட்டிச் செல்வதற்கு முன்னால் அங்குதான் திரட்டிவைத்திருந்தார்கள். இவர்களில் பலர், இரவுக் கடைகளை நிர்வகிக்கிறார்கள். இந்தக் கடைகள் இரவு நெடுநேரம் திறந்திருக்கின்றன.

ITN புலனாய்ந்து கண்டறிந்திருந்த அந்த வலைப்பின்னலின் தலைவர் பெல்ஜியத்தைச் சேர்ந்தவர். அவரிடம் தான் எல்லாப் பணமும் சேர்ந்தது.

ப்ருஸ்ஸெல்ஸில் இருந்த ஒரு வாரமும், நாங்கள் ஓர் இரட்டை வாழ்க்கை வாழ்ந்தோம். ஒரு வாழ்க்கை, நாங்கள் நாங்களாகவே இருப்பது, ஒரு வசதியான விடுதியில் தங்குவது. அங்கிருந்து வெளியில் வரும்போது, நாங்கள் ஏழைக் குடியேறிகளாகிவிடுவோம். எப்படியாவது எல்லையைக் கடந்து UK செல்லவேண்டும், அங்கு எங்களுடைய உறவினர்கள் உள்ளார்கள், அவர்கள் எங்களுக்கு உதவுவார்கள், வேலை பெற்றுத்தருவார்கள் என்று பேசி நடிப்போம்.

ஏற்றுக்கொள்ளக்கூடிய அழுகைக் கதை

எங்களுடைய கதையில், நான் தென்னிந்தியாவிலிருந்து வருகிறேன்; தில்லியிலுள்ள ராஜேந்திரா பேளசில் ஒரு தரகர் அலுவலகத்தில் பணிபுரிந்தேன். ஹரிந்தர் பஞ்சாபைச் சேர்ந்தவர், அதே அலுவலகத்தில் தட்டச்சாளர். எங்களுடைய திருமண த்தைப் பெற்றோர் எதிர்த்தார்கள். ஆனாலும் நாங்கள் மணந்து கொண்டோம்; அவர்களுடைய துன்புறுத்தலிலிருந்து தப்பிப்பதற்காக நாங்கள் வீட்டை விட்டு ஓடவேண்டியிருந்தது. UKவிலுள்ள எங்கள் நண்பர் எங்களுக்கு வேலை தருவதாக வாக்களித்திருக்கிறார். எங்களுடைய விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன. ஆகவே, நாங்கள் கடத்தல் வழியில் உள்ளே நுழையத் தீர்மானித்துவிட்டோம்.

நாங்கள் ச்சாதா என்ற கற்பனை முகவரை உருவாக்கினோம். போலந்தைச் சேர்ந்த இரக்கமற்ற இந்தப் பஞ்சாபி, ரொமானியாவில் வந்திறங்கியிருந்த எங்களைக் கண்டம் தாண்டிக் கடத்திக் கொண்டுவந்திருந்தார். ப்ருஸ்ஸெல்ஸில், எங்களிடமிருந்த பணத்தையும், கடவுச்சீட்டுகளையும் அவர் பறித்துக்கொண்டு எங்களை ஒரு விடுதியில் தங்கச்செய்துவிட்டுக் காணாமல் போய்விட்டார்.

எங்களுடைய அழுகைக் கதை நன்கு வேலைசெய்தது. ப்ருஸ்ஸெல்ஸில், இந்தியர்களாக இருக்கிற காரணத்தாலேயே, தங்களை முகவர்கள் என்று அழைத்துக்கொண்ட, மக்களை UKக்குள் கடத்திச்செல்ல முன்வந்த பலரை நாங்கள் சந்திக்க இயன்றது. இவர்கள் மக்களை ஒரு ட்ரெய்லரில் கடத்திச்செல்வார் கள், அல்லது, ஒரு பொய்யான கடவுச்சீட்டை ஏற்பாடு செய்வார்கள். நான் ஒரு மைக்ரோஃபோன் ஒலிவாங்கியை பேனா போல் சட்டைப்பையில் இயல்பாகக் குத்தி வைத்திருந்தேன். என்னுடைய மேலங்கியில் ஒரு சிறிய ஒலிநாடாப் பதிவுக்கருவியை ஒளித்துவைத்திருந் தேன். அது உரையாடல்களைப் பதிவுசெய்துகொண்டது.

நாங்கள் கண்ணிமைப்பதற்குள் ஒருவர் மற்றவரிடம் பேச, அவர் இன்னொருவரிடம் பேச, தொலைபேசி எண்கள் பரிமாறிக்கொள்ளப்பட, நாங்கள் முகவர்களுடன் பேசத் தொடங்கினோம். நாங்கள் £1,800 தந்தால் எங்களை எல்லை தாண்டிக் கடத்திச்செல்வதற்கு அவர்கள் மிக ஆவலாக இருந்தார்கள். UKவிலிருக்கிற யாராவது, அந்தப் பெரிய தொகையைத் தர விரும்புவதாக முகவரிடம் உறுதிப்படுத்தவேண்டும். உடனே, அந்த முகவர் குடியேறிகளை ஒரு பாதுகாப்பான வீட்டில் அடைத்து வைப்பார், அப்போதுதான் அவர்கள் எங்கும் தப்பி ஓடிவிடாமல் இருப்பார்கள். எல்லையைத் தாண்டியவுடன், UK நண்பர் பணத்தைத் தந்து, குடியேறியை அழைத்துக் கொண்டு செல்லவேண்டும். ஒருவேளை, அந்தத் தொடர்பு நபர் பணத்தைத் தராவிட்டால், அந்தக் குடியேறியைப் பற்றிய தகவல்களை முகவர்கள் அரசாங்க த்துக்கு வெளிப் படுத்திவிடுவார்கள். பின்னர் அவர் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டுவிடுவார்.

ரகசியத் திட்டம்

துசாவர் ஷா என்கிற ஆன்ட்வெர்ப் முகவர். எங்களை எளிதில் UKக்கு அழைத்துச்சென்றுவிடுவதாக எங்களிடம் சொன்னார். நாங்கள் ஒரு காரில் ப்ருஸ்ஸெல்ஸிலிருந்து ஆன்ட்வெர்ப்புக்கு விரைந்தோம். அதை வாடகைக்கு எடுத்தவர், குக் அறிக்கையின் ஆய்வாளர்

சில்வியா ஜோன்ஸ். அதே நாளின் முன்பகுதியில், டேவிட் என்ற ஒரு தொழில்நுட்ப வல்லுனர் பிர்மிங்கமிலிருந்து வந்து என்னை இந்த வேலைக்குத் தயார்செய்தார். டேவிட் என்னுடைய நெஞ்சில் ஓர் ஒலிவாங்கியை நாடாவால் ஒட்டினார்.

டேவிட் ஒரு தோல் பையைக் கொண்டுவந்திருந்தார். அந்தத் தோல் பையில் ஒரு கேமெரா, மற்றும் பதிவு செய்யும் கருவி ஒளித்துவைக்கப்பட்டிருந்தது. காரில் அமர்ந்தபடி டேவிட் எங்களுடைய உரையாடலைக் கேட்கலாம்.

ஹரிந்தர் இக்கருவியுடன் புறப்பட்டார். நாங்கள் ஆன்ட்வெர்ப்புக்கு வந்ததும், கார்த் தொலைபேசியிலிருந்து முகவரை அழைத்தார். நாங்கள் அவருடைய அடுக்ககத்துக்குச் சென்றோம். உள்ளே நுழைவதற்குச் சில்வியா, டேவிட் இருவரும் சும்மா அந்தப்பக்கம் நிற்பவர்களைப்போல் வெளியில் காத்திருந்தார்கள். "ஏதாவது பிரச்னை என்றால், ஒலிவாங்கியில் சத்தமாகக் கத்தினால் போதும்" என்று என்னிடம் சொன்னார்கள். நாங்கள் உள்ளே சென்றதும், எங்களுக்கும் அந்த முகவருக்கும் மிகவும் படபடப்பான உரையாடல் நடைபெற்றது.

ஷா தரையில் ஒரு மெத்தையில் அமர்ந்திருந்தார். தான் பாகிஸ்தான் ஆக்கிரமித்த காஷ்மீர் பகுதியிலிருந்து வந்ததாகவும், சில ஆண்டுகளுக்கு முன்னால் ப்ருஸ்ஸெல்ஸில் புகலிடத்தை நாடியதாகவும் ஷா சொன்னார். UKல் உள்ள எங்கள் நண்பர் பணம் தந்தால், எங்களை எல்லை கடந்து அழைத்துச்செல்வதற்குத் தான் மிகவும் விருப்பத்துடன் இருப்பதாக அவர் சொன்னார்.

நூலிழையில் தப்பினோம்

நாங்கள் ப்ருஸ்ஸெல்ஸில் எங்கு தங்கியிருந்தோம் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று ஷா வற்புறுத்தியபோது, சூழ்நிலையில் சற்று அழுத்தம் கூடியது. ப்ருஸ்ஸெல்ஸ் விடுதிக் கட்டணங்களைப்பற்றி நாங்கள் ஒழுங்காகத் தெரிந்து கொண்டிருக்கவில்லை. ஆகவே, ஏதோ சொல்லிவைத்துச் சொதப்பினோம். ப்ருஸ்ஸெல்ஸில் இவ்வளவு குறைந்த கட்டணத்தில் எங்களுக்கு ஒரு விடுதி கிடைத்ததை எண்ணி அவர் வியந்தார். அதே நேரம், நாங்கள் எந்தப் பிரச்னையும் இல்லாமல் அங்கிருந்து எப்படியோ தப்பிவிட்டோம்.

வெளியில் வந்ததும், விரைவாக ஒரு வாடகைக் காரைப் பிடித்து நிலையத்துக்கு வந்தோம்.

மேலும் பல பதிவுசெய்யப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் மற்றும் கூட்டங்களுக்குப்பிறகு, குறிப்பிடத்தக்க அளவு நன்றாகச் சூழ்ந்திருந்த ஒரு கும்பலுக்கான வழிகளை நாங்கள் கண்டறிந்தோம். பஞ்சாபைச் சேர்ந்த அவ்தார் சிங் ராணா என்பவர், "இந்தியச் சகோதரர்களாகிய நீங்கள் பொய்யான கடவுச் சீட்டுகளோடு எல்லையைக் கடந்து செல்வதை நான் உறுதிப்படுத்துவேன்" என்று எங்களுக்கு உறுதிசொன்னார். ஷா ஏற்பாடுசெய்கிற ஒரு பெரிய பெட்டியில் நாங்கள் UKக்குச் செல்லவேண்டும் என்று சில்வியா வற்புறுத்தினார். பின்னர், அங்கு ஷா சொல்லும் முகவருக்குப் பணம் செலுத்தி ITN எங்களை விடுவிக்கும் என்றார். நாங்கள் அதைச் செய்ய விரும்பவில்லை. ஏனெனில், நாங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் FCO உதவித்தொகையில் இருந்தோம், பெல்ஜியத்துக்கான எங்கள் விசாக்கள் கிட்டத்தட்ட காலாவதியாகும் நிலையில் இருந்தன. அதன்பிறகு, நாங்கள் உண்மையிலேயே சட்டவிரோதமான குடியேறிகளாகிவிடுவோம்!

அதன்பிறகு, ITN ஏற்பாடு செய்த பிரிட்டிஷ் குடிமகனான ஒரு பாகிஸ்தானியப் பொறியாளர் எங்களுடைய குறிப்புகளைப் பின்பற்றி ஆன்ட்வெர்ப்பில் ஷாவுடன் தொடர்புகொண்டார். அவரும் ஒரு நண்பரும் ஒரு ட்ரக்கில் UK-க்குக் கடத்தப்பட்டார்கள். நமுத்துப்போன பழைய திட்டத்தின்படி எங்களைக் கடத்திவருவதற்காக ITN கேமெராக்கள் போன்றவற்றைப் பொருத்திய ட்ரக்கைப்போலவே இந்த ட்ரக்கும் இருந்தது. தாரிக் என்ற அந்தப் பாகிஸ்தானியர் தன்னுடன் ஒரு ரகசியக் கேமெராவைக் கொண்டுசென்றிருந்தார். ஆனால், துரதிருஷ்டவசமாக, அதிலிருந்த மின்கலன்கள் தீர்ந்துவிட்டன. ஆகவே, ட்ரக் எல்லையைக் கடக்கும் அந்தக் காட்சியை அவரால் பதிவுசெய்ய இயலவில்லை. ஆனால், அவர் ஒரு ட்ரக்கில் 22 மணிநேரம் உணவோ தண்ணீரோ இல்லாமல் அடைத்து வைக்கப்பட்டார். அவருடன் டஜன்கணக்கான பிற குடியேறிகளும் இருந்தார்கள். மத்தியத் தொலைக்காட்சி UKல் ஒரு தொடர்புநபரை அமைத்தது, முகவர்களிடமிருந்து அவரை விடுவிப்பதற்காக £2,000 வழங்கியது.

பல மில்லியன் பார்வையாளர்களுக்கு ஒளிபரப்பு

குடியேறிகளைப்பற்றிய குக்கின் நிகழ்ச்சி UKல் மே 23, 1995 அன்று ITN வலைப்பின்னலில் ஒளிபரப்பப்பட்டது. UKல் அந்நிகழ்ச்சியை எட்டரை மில்லியன் பார்வையாளர்கள் கண்டார்கள். குக் தன்னுடைய வழக்கமானமுறையில், பிர்மிங்கமிலிருந்த அந்த ஆங்கிலோ-கரீபியரையும் இந்தியரையும் திரையில் எதிர்கொண்டார். முதல் நபர் மிகவும் இயல்பானமுறையில் எதிர்வினையாற்றினார். குக் வைத்திருந்த சான்றைப்பற்றிச் சிந்தித்துப் பதில் சொல்வதாகச் சொன்னார். (அவர்கள் இருவரும் ITN அனுப்பிய இரு ஓட்டுநர்களுடன் பேரம் பேசியபோது, குக் குழுவினர் அதை ரகசியமாகப் படம் பிடித்திருந்தார்கள்). அந்த இந்தியர் "உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று குக்கை மிரட்டினார்.

துஸாவர் ஷா வீட்டில் நான் எடுத்திருந்த ரகசிய வீடியோக்களில் சிலவும் நிகழ்ச்சியில் காட்டப்பட்டன. பெல்ஜியச் சட்டப்படி காவல் துறையினர் ஊடகங்களுக்கு ஒத்துழைக்கவோ ஊடக அறிக்கைகளைக் கருத்தில் கொள்ளவோ அனுமதியில்லை. துசாவர் ஷா போன்றோருக்கு எதிராக அவர்கள் விசாரணைகளைத் தொடங்கினார்களா என்று எனக்கு இதுவரை தெரியவில்லை. அவர் இன்னும் குடியேறிகளைக் கடத்தும் தொழிலில் இருக்கிறார் என்றால், அவருடைய கைகள் இந்தியாவரை நீளாது என்று நம்புகிறேன்!

© தி இந்து பிஸினஸ்லைன்;
எழுத்தாளர் இந்தச் செய்தித்தாளில் மூத்த துணை ஆசிரியர்.

பாட்னாவில் புற்றுநோய் பரிசோதனை சிறப்பு மையம் திறப்பு

ரோட்டரி செய்திக்குழு

பிகார் மாநிலம் பாட்னாவில் உள்ள சவேரா கேன்ஸர் மற்றும் மல்ட்டிபிள் ஸ்பெஷாலிட்டி மருத்துவ மனையில், பாட்னா மிட்டவுன் ரோட்டரி சங்கம் RID 3250 சார்பில் R S கேன்ஸர் டயனாக்ஸ்டிக் சென்டர் எனப்படும் புற்றுநோய் சிறப்பு பரிசோதனை மையம் திறக்கப் பட்டுள்ளது.

இந்த மையத்தை RID கமல் சங்வி அவர்கள், அண்மையில் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், ''பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கு, இதுபோன்று புற்றுநோயைக் கண்டறியும் சிறப்புப் பரிசோதனைகள் இதுவரை ஒரு கனவாகத்தான் இருந்தது. அப்படிப் பட்டவர்களுக்கு, இந்த மையம் நிச்சயமாக ஒரு வரப்பிரசாதமாக

RID கமல் சங்வியுடன் சுனித் சந்திரா PDG விவேக் குமார், DG கோபால் கெம்கா, அவிடா கெம்கா, சங்கத்தலைவர் மனோஜ் குப்தா மற்றும் Dr R N சிங்.

விளங்கும்'' என்று பாராட்டி பேசினார்.

நன்றியுரை ஆற்றிய DG கோபால் கெம்கா பேசுகையில், "இந்த கனவு மையத்தை நனவாக்கிய பெருமை PDG விவேக்குமார் அவர்களையும், சங்கத்தின் முந்தைய தலைவர் மனோஜ் குப்தா அவர்களையுமே சாரும். அதற்கு அவர்கள் பெரும் பங்கு அளித்தனர்", என மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.■

தித்திக்கும் தீவு

ஹாங்க் சார்டின்

ஹானலுலுவில் ஜூன் 6–10 நடைபெறவுள்ள RI மாநாட்டுக்கு நீங்கள் வருகை தரும் போது தவறாமல் ஐஸ்கிரீம் சுவைப்பதற்கும் நேரம் ஒதுக்குங்கள். ஆம், ஹவாய் தீவுகள் உங்களுக்காக இனிப்பு விருந்துகளுடன் காத்திருக்கிறது.

ஷேவ் ஐஸ் (இதை ஷேவ்டு ஐஸ் அல்லது ஸ்னோ கோன் என்று சொல்லிவிடாதீர்கள், உடனே நீங்கள் வெளிநாட்டுக்காரர் என்பதைக் கண்டுபிடித்து விடுவார்கள்) என்பது ஹவாய் தீவுகளில் குடியேறிய ஜப்பானியர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. ககிகோ-ரி என்ற உறைந்த ஐஸ் பலகாரத்தின் தாக்கத் தால் இது உருவாக்கப் பட்டது. ஐஸ் கட்டிகளை கைகளால் தீட்டி மிருது வான ஐஸ் சில்லு களின் குவியல்களாக உருவாக்குவார்கள், பிறகு வெப்ப மண்டல பழச்சாறு களால் அதற்கு சுவையும் மணமும் ஊட்டுவார்கள்.

இப்போதெல்லாம் இது பொதுவாக எந்திரத் தாலேயே தீட்டப்படுகிறது, பிறகு மேலும் ஒருபடி தித்திப்பூட்டும் வகையில் அதை ஐஸ்கிரீமுடன் சேர்த்து வழங்குகிறார்கள். சுவையூட்டிகளாக பப்பாளி, லிச்சி, அன்னாசி போன்ற உள்ளூர் பிரபலங்கள் முதல், நவாப் பழம், ஆப்பிள், சாக்லேட் போன்ற சற்று விசித்திரமானவை (ஹவாய் தீவுகளில்) வரை பல வகைகள் பயன்படுத்தப்படுகின்றன.

பொறித்த டோநட் உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமா? அப்படி யென்றால், மலாஸதாஸை சுவைத்துப் பாருங்கள். இது, இந்தத் தீவுகளுக்கு வந்து குடியேறிய போர்ச்சுகீசியர்களால் கொண்டுவரப்பட்டது. ஹவாய் தீவுகளில், எச்சில் ஊறவைக்கும் காடி சேர்த்த டோநட்களுள் கஸ்டர்ட், தேங்காய் புட்டிங், சாக்லேட் புட்டிங், கொய்யா போன்றவை திணிக்கப்பட்டிருக்கும்.

உங்கள் விருப்பம் எவ்வகைச் சுவையூட்டியில் இருந்தாலும் சரி, வெவ்வேறு கடைகளுக்குச் சென்று பலதரப்பட்ட வகை களை ருசித்துப் பார்ப்பதில் தவறில்லையே.■

ஆசிய பசிஃபிக் ரோட்டரி இதழ் ஆசிரியர்கள் சந்திப்பு

V முத்துக்குமரன்

உள்ளூர் ரோட்டரி இதழ்களின் உள்ளடக்கம், வடிவமைப்பு மற்றும் காட்சிப்பூர்வமான தோற்றம் ஆகியவைபற்றிய ஒரு தணிக்கை அறிக்கையட்டை விரைவில் வெளியாகவுள்ளது. ரோட்டரியன்கள், மற்றவர்கள்மத்தியில் உள்ளூர் ரோட்டரி இதழ்களுடைய வீச்சை விரிவாக்குவதற்கு இது உதவும். இந்த ஆண்டறிக்கையானது, சந்தாதாரர்களுடைய நாடித்துடிப்பை, கருத்துகளைப் புரிந்துகொள்வதற்காக 2020–21ல் நிகழ்த்தப்படவேண்டிய ஒரு வாசகர் கணக்கெடுப்பில் பெறப்படும் பின்னூட்டங்களையும் கருத்தில் கொள்ளும் என்றார் RIன் பன்னாட்டுத் தகவல் தொடர்புக் குழுத் தலைவர் டேவிட் அலெக்ஸாண்டர்.

ரோட்டரி நியூஸ் இதழ் சென்னையில் நடத்திய இரண்டு நாள் ஆசிய-பசிஃபிக் ரோட்டரி ஆசிரியர்கள் கலந்துரையாடலில் அவர் வழங்கிய உரையில், எதிர்வரும் உள்ளூர் இதழ்களுக்கான உரிம ஆய்வு, ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை இதழ்கள்வழியாக மேம்படுத்துவதற்கான கொள்கை வழிகாட்டுதல்கள், முன்னெடுப்புகளைக் கண்டறிவதற்காக, இரண்டாண்டுகள் பொறுப்புவகிக்கும் ஓர் ஆலோசகர் வாரியத்தை முன்வைக்கும் என்றார்.

ரோட்டரியின் புதிய வியூகச் செயல் திட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிற ஒரு தகவல் தொடர்புச் செய்தித்தொகுப்பை வழங்கிய அவர், இதழ்கள் பரவலான மற்றும் நீடித்த தாக்கத்தைக் கொண்ட திட்டங்களை வெளிச்சம்போட்டுக் காட்டுகிற உள்ளடக்கத்தின்மூலம் வெளிப் பார்வையாளர்களையும் ஈர்ப்பதன்மூலம் தங்களுடைய தாக்கத்தை அதிகரிக்கவேண்டும், வீச்சை விரிவாக்கவேண்டும் என்றார்.

ரோட்டரி இதழ்களை முன்னெடுத்துச்செல்வதற்கு, பொதுவான முக்கியத்துவங்களின் பட்டியலுடன் கூடிய ஒரு சரியான தகவல் தொடர்பு அணுகுமுறை, உள்ளடக்க வியூகம் நமக்குத் தேவை. தொழில்நுட்பம், மக்கள் தொகை, சமூக மற்றும் போட்டிக் காரணிகள் போன்ற வெளிக் காரணிகள், தேங்கிவிட்ட உறுப்பினர் எண்ணிக்கை, சிக்கலான ஒரு படிநிலை, பொறுப்புக்காலம் அடிப்படையிலான சேவை Vs திறமை அடிப்படையிலான வல்லமை ஆகியவற்றின் இருமைத் தன்மை, தொடர்ச்சியின்மை, போலியோவிலிருந்து விடுதலை பெற்று விட்ட உலகம் ஆகிய உள் தூண்டிகள் நம்மை எழுந்து அமரவைக்கின்றன; எதிர்வரும் சவால்களுக்குத் தயாராக்குகின்றன என்று விவரித்தார் அலெக்ஸாண்டர்.

வியூக முக்கியத்துவங்கள்

எதிர்வரும் சவால்களில் கவனம் செலுத்திப் பேசிய அலெக்ஸாண்டர், அவற்றைப் பின்வருமாறு பட்டிய லிட்டார்: உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்தல், போலியோவுக்கு எதிராகச் செயல்பட்ட அனுபவத்தைப்

பயன்படுத்திக்கொள்ளுதல், தாக்கமுள்ள திட்டங்களைப்பற்றி எழுதுதல், பன்முகத்தன்மையைத் தூண்டி வீச்சை விரிவாக்குதல், உறுப்பினர்களின் பங்களிப்பு, ரோட்டரியில் புதிய வழிகளை உருவாக்குதல் மற்றும் ஆராய்ச்சி, புதுமைச் சிந்தனைகளை ஏற்றுக் கொள்ளுதல், ஆபத்துகளுக்குத் தயாராக இருத்தல். மேலும், நம்முடைய முதல் ஆண்டு முன்னெடுப்புகள் ரோட்டராக்டை (ரோட்டராக்டர்களையும்) உயர்த்துதல், இந்த ரோட்டரி ஆண்டுக்குள் பயிற்சிக்கான இணையக் கருவிகளை உருவாக்குதல் ஆகியவற்றில் அமையும். ரோடராக்டர்களுடைய செயல்திறன்மிக்க ஒரு தரவுத் தளத்துடன், ரோட்டரி சங்க அளவில் அவர்களில் சுமார் 250,000 பேருடன் நாம் ஊடாடவேண்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

RI தகவல் தொடர்பு அதிகாரி டேவிட் அலெக்ஸான்டர் மற்றும் ரோட்டரி பிராந்திய பத்திரிக்கைகள் ஒருங்கிணைப்பாளர் டோனா காட்டர்.

உள்ளூர் இதழ்கள் பொதுத் தோற்றக் குழுவை நியமிக்க வேண்டும், தங்களுடைய கட்டுரைகளில் செயல்வீரர்கள் என்ற செய்தியை ஒரு முக்கியப் பணியாக ஏற்றுக்கொள்ளவேண்டும், பிராண்ட் மையத்திலுள்ள இணையக் கருவிகளை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் அவர். கேட்ஸ் அறக்கட்டளையின் ரோட்டரி உறவை விரிவாக்குவதுபற்றிய பேச்சுகள் நடைபெற்றுவருகின்றன; அடுத்த பன்னாட்டுக் கூட்டத்தில் இதுபற்றிய ஓர் அறிவிப்பு வெளியிடப்படும். மேலும், 2020ன் நடுவில், ஆப்பிரிக்காவைப் போலியோ அற்ற கண்டமாக அறிவிக்கவுள்ளது WHO. ரோட்டரி சங்கங்கள், போலியோ வெற்றிக்கதைகளைத் தங்கள் சமூகங்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

டேவிட் அலெக்ஸான்டர் மற்றும் டோனா காட்டர் அவர்களுடன் பத்திரிக்கை ஆசிரியர்கள் ரஷிதா பகத் (ரோட்டரி நியூஸ்), யோதர்வட் வனித் (ரோட்டரி தாய்லாந்து), ஹென்ரி ஷாவ் (தாய்வான் ரோட்டரி), கேய் கிடில் (ரோட்டரி டவுன் அன்டர், ஆஸ்திரேலியா), மற்றும் RISAO மூத்த PR ஒருங்கிணைப்பாளர் ஜோதி ராய், ரோட்டரி நியூஸ் அலுவலர்கள் K செந்தில் குமார், K விஸ்வநாதன், V முத்துகுமரன் மற்றும் கிரண் ஜெஹரா.

புதிய உரிம ஆய்வு

புதிய உரிம ஆய்வின் முக்கிய அம்சங்களில் ஒன்று, பதிப்பாளர்கள் RI போர்டின் அனுமதியைப் பெற்றபின் சில்லறை விற்பனை நிலையங்களில் இதழ்களை விற்க அனுமதி வழங்கப்படும். இதழின் தரத்தை மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள், குறிப்புகளை ஆலோசகர் வாரியம் உருவாக்கும். டொமைன்கள், URLகள் ஒரே மாதிரியாக ஒழுங்குபடுத்தப்படும்.'' வலைப் பதிவுகள், செய்தி இணையத்தளங்கள் போன்ற வெளி ஊடகங்களிலிருந்து உள்ளடக்கங்களைப் பயன்படுத்தும் போது, உரிமைதுறப்புகளைச் சேர்க்கவேண்டும் என்றார் உள்ளூர் இதழ்களுக்கான ஒருங்கிணைப்பாளர் டோன்னா காட்டெர்.

புதிய பிராண்டிங் தரநிலைகள் செயலுக்கு வரும்போது, உள்ளடக்கத்தை வழங்குதல் மற்றும் வடிவமைப்புச் செயல்முறைகளுக்கான தர அளவுகோல்களை இதழ்கள் எட்டவேண்டும்.'' இதழ்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக, 6–7 கேள்விகளுக்கு மேற்படாத ஒரு வாசகர் கணக்கெடுப்பு அனைத்து இதழ்களுக்கும் நடத்தப்படும்.

ஒட்டுமொத்த வடிவமைப்பானது, ரோட்டரியின் வியூகத் தொலை நோக்கை ஆதரிக்கவேண்டும், அதனுடன் ஒத்திசையவேண்டும் என்றார் அவர்.

தகவல்தொடர்புக் குழு விவாதித்து உருவாக்கிக்கொண்டிருக்கிற இந்தக் கணக்கெடுப்பு, சந்தாதாரர்களிடமிருந்து கருத்துகள், பின்னூட்டங்களைப் பெறுவதற்கான அச்சுறுத்தலற்ற ஒரு வழியாகும். இதன்மூலம், இதழை மேம்படுத்துவதற்கான வழிகளைப்பற்றிச் சந்தாதாரர்கள் தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பு அமையும். கணக்கெடுப்புகளைச் செயல்திறனுள்ளவையாக ஆக்குவதற்கு என்னென்ன கேள்விகளைக் கேட்கலாம் என்பதுபற்றி நம்முடைய ஆராய்ச்சி குழு சிந்தித்துக்கொண்டிருக்கிறது. இந்த ஆய்வின் முடிவுகள் உள்ளூர் ஆசிரியர்களுடன் பகிர்ந்துகொள்ளப் படும் என்றார் டோன்னா.

அச்சு Vs டிஜிட்டல்

இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் 74 சதவிகிதம்; நாட்டின் பல கிராமப்புறச் சந்தைகளை அச்சு ஊடகங்கள் இன்னும் ஆராயவேண்டியிருக்கிறது. இந்தப் பின்னணியில் பார்க்கும்போது, செய்தித்தாள்களும் இதழ்களும் இந்தியாவில் குறைந்தபட்சம் 20–30 ஆண்டுகளுக்குத் தொடரும். பல நாளிதழ்கள், தங்களுடைய விற்பனை எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகச் சமீபத்தில் தெரிவித்துள்ளார்கள். இதனால், அச்சு இதழ்கள் அழிந்து போகும் என்று ஊகித்தவர்களுடைய பேச்சு அடிபட்டுவிட்டது என்றார் ரோட்டரி நியூஸ் ஆசிரியர் ரஷீதா பகத். ஊடாடல் சாத்தியமுள்ள ஓர் இணையத்தளம் நம்முடைய அச்சுப்பதிப்பை முழுமையாக்குகிறது. இந்த இணையத்தளத்தில் தனிப்பட்ட கட்டுரைகள், படங்கள் பதிவுசெய்யப்படுகின்றன. PDF வடிவில் ஒரு மின் பதிப்பு வெளியிடப்படுகிறது. Rotary.org மற்றும் பிற இடங்களில் இணைய மேம்பாடுகள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன.

1.28 லட்சம் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. அத்துடன் ஒப்பிடும்போது, வெறும் மூன்று சத விகிதத்தினர் (4,000 ரொட்டேரியன்கள்) மட்டுமே டிஜிட்டல் பதிப்பைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். இதன்மூலம், அச்சுவடிவம்தான் இன்னும் ஆட்சிநடத்துகிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம் என்றார் அவர்.

இத்துடன், இதழில் இடம்பெற இயலாத திட்டங்கள் இப்போது ஒரு தனித்துவமான மின்பதிப்பில் வெளியிடப்படுகின்றன. "ரோட்டரி நியூஸ் ப்ளஸ்" என்ற இந்த மின்பதிப்பு, ஒவ்வொரு மாதமும் 15ம் தேதி வெளியிடப்படுகிறது. நாம் ரோடராக்ட் செய்திகள் என்ற இதழையும் ஒவ்வொரு காலாண்டும் வெளியிடுகிறோம். இந்த இதழ் சில நூறு பிரதிகள் அச்சிடப்படுகிறது, இதன் பிரதிகள் இந்தியாவிலும் எவன்ஸ்டானிலும் உள்ள DRRகள், DGக்கள் மற்றும் மூத்த ரோட்டரித் தலைவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இது இணையத்தில் கிடைக்கிறது.''

மார்ச் 2019லிருந்து ஆகஸ்ட் 2019க்குள், இந்தியச் செய்தித்தாள்கள் மற்றும் இதழ்களில் நீர் மற்றும் தூய்மைப் பிரச்னைகளைப்பற்றி 13,500 கதைகளும் கட்டுரைகளும் வெளியிடப்பட்டிருப்பதாக ஓர் ஊடகக் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது என்றார் RISAO புது தில்லியின் மூத்த PR ஒருங்கிணைப்பாளர் ஜ்யோதி ராய். மனித வளர்ச்சி மற்றும் துன்பங்களைப்பற்றிய கதைகள் நன்கு எழுதப்பட்டால், மக்களால் அவற்றுடன் நேரடியாகத் தங்களைத் தொடர்புபடுத்திப்பார்க்க இயலும் என்ற உண்மையை இது சுட்டிக்காட்டுகிறது."

எல்லா ஆசிரியர்களும் சந்திக்கிற பெரிய சவால்களில் ஒன்று, புதிய அல்லது விலகிய உறுப்பினர்களைப்பற்றிய தகவல்கள் இதழ்களில் சரியான நேரத்தில் வெளியிடப்படுவதில்லை.

RI இயக்குநர்கள் பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி வழங்கிய வீடியோ செய்திகளில் ரோட்டரி இதழ்களின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டினார்கள். அவை ஒரு முக்கியமான தகவல்தொடர்புக் கருவிகளாகப் பயன்படுவதால், ஆசிரியர்கள் அவற்றின் தரத்தைத் தொடர்ந்து மேம்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ரோட்டரி டவுன் அன்டர் பொது மேலாளர் கே கிட்டில், தைவான் ரோட்டரி ஆசிரியர் ஹென்றி Y T ஷாவ் மற்றும் ரோட்டரி தாய்லாந்தின் தலைமை ஆசிரியர் யொதர்வுட் வானிட் ஆகியோர் தங்களுடைய கருத்துகளை பகிர்ந்து கொண்டார்கள், ரோட்டரியன்கள் தாங்கள் செலுத்தவேண்டிய தொகைகளைச் செலுத்தாமல், உறுப்பினர் தகவல்களைச் சரியான நேரத்தில் தெரிவிக்காமல் இருக்கும் சூழ்நிலையில் இதழ்களை நடத்துவதிலிருக்கும் சிரமங்களைக் குறிப்பிட்டார்கள்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

கிரண் ஜெஹரா, டோனா காட்டர், ஜோதி ராய், ஹென்றி ஷாவ், K செந்தில்குமார் **(நிற்போர்)** *ஷேரன் ஹர்லி, V முத்துகுமரன், கேய் கிடில், ரஷிதா பகத், ஜெய்ஸ்ரீ மற்றும் K விஸ்வநாதன்.*

RI தெற்காசிய அலுவலக அறிவிப்புகள்

மேஜர் டோனர் அங்கீகாரம்/ உலகளாவிய மானிய பயனாளிகளுக்கான வழிகாட்டல்கள்

முக்கியமாக நன்கொடை வழங்குபவர் மற்றும் முக்கியமான பரிசுகள் வழங்கியவர்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதில் வழிகாட்டிகள் படி கவனம் செலுத்தப்படாததால் கொள்கை இங்கே வலியுறுத்தப்படுகிறது.

- வருடாந்திர நிதி, எண்டோவ் மென்ட் ஃபண்ட் மற்றும் ரோட்டரி பவுண்டேஷனுக்கான பிற தடை செய்யப்பட்ட பரிசுகள் உள்ளிட்ட தனிப்பட்ட பங்களிப்புகள் மட்டுமே முக்கிய நன்கொடையாளர் அங்கீகாரத்திற்கு தகுதி பெறுகின்றன.
- மேஜர் டோனர் அங்கீகாரம் தனிநபர்கள், தம்பதிகள், ரோட்டரி அல்லாத இணைக்கப்பட்ட ஃபௌண்டேஷன்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நன் கொடையாளர் வாழ்க்கைத் துணைவர்களிடமிருந்து பங்களிப்புகள் பொதுவாக மேஜர் டோனர் அங்கீகார நோக்கங்களுக்காக இணைக்கப்படுகின்றன, அவர்கள் அதை எழுத்துப்பூர்வமாகக் கோரும் பட்சத்தில் இந்த அங்கீகாரத்திற்கு ஒரு கிளப் அல்லது மாவட்டம் தகுதி பெறுவதில்லை.

முக்கியமான நன்கொடை பங்களிப்புகள், AKS பங்களிப்புகள் உட்பட நன்கொடை யாளர்களின் தனிப்பட்ட பரிசளிப்புகளாகும். மாவட்ட நிதிகள், பயனாளிகள்/ ஒத்துழைக்கும் நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து வரும் நிதியை மேஜர் டோனர் அங்கீகாரம் அல்லது உலகளாவிய திட்டங்களுக்கு வழங்குவதற்கு/ செயல்படுத்து வதற்கு பயன்படுத்தக்கூடாது.

கிளப்கள் மற்றும் மாவட்டங் களும் உலகளாவிய மானியத்திற்கு விண்ணப்பிக்கும்போது பயனாளிகளின் தகுதி, செயல்பாடு கள், திறன் நிலை போன்றவற்றைப் பற்றிய பின்வரும் தகவல்களை மனதில் வைத்திருக்க வேண்டும்:

- ரோட்டரி கிளப்புகள் மற்றும் மாவட்டங்களால் சமர்ப் பிக்கப்பட்ட உலகளாவிய மானியங்களுக்கான பங்களிப்பு களை TRF ஏற்றுக் கொள்ளும், மற்றும் ரோட்டரி அறக்கட்டளை கொள்கைகளில் பிரிவு 10.030யில் வரையறுக்கப் பட்டுள்ளபடி வட்டி மோதல் இல்லாத வரை ரோட்டரி அல்லாத நிறுவனங்கள் அளிக்கும் பங்களிப்பு ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் அந்த நிதிகள் பயனாளியின் அல்லது ஒத்துழைக்கும் நிறுவனத்தில் இருந்து வருவதாக இருக்கக்கூடாது.
- உறுப்பினர் அல்லாதவர் பண பங்களிப்புக்களைச் செய்ய - திட்டம் கணக்கு அல்லது பார்ட்டிக்கு நன்கொடைகள் மற்ற நிறுவனங்களிலிருந்து (ஒத்துழைக்கும் நிறுவனங்கள் அல்லது திட்டத்தின் பயனாளிகள் சேர்க்கப்படவில்லை) TRFற்கு வழங்க, உலக நிதியம் மூலம் 50 சதவீதம் இணையாக வழங்கப்பட தகுதியானவை அவை ரோட்டரி கிளப்புகள் மற்றும் மாவட்டங்களால் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களாக இருத்தல் வேண்டும்.
- பிரிவு 26.080ல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள தனிப்பட்ட தரவுகளுக்கான ரோட்டரியின் தனியுரிமை அறிக்கையைப் பின்பற்றுங்கள். ஃபௌண்டேஷன் குறிப்பிட்டு கேட்டாலோ அல்லது பயனாளர்கள் (அல்லது அவர்கள் பெற்றோர் சட்ட காப்பாளர்) கேட்டுக் கொண்டாலே தவிர, நன்கொடை பயனாளர்களின் பெயர், வயது அல்லது பிறந்த தேதி, அல்லது பிற அடையாள மிடும் தகவல் அல்லது படங்கள் மற்றும் அறிக்கைகள் ஆகியவற்றை சேர்க்காதீர்கள்.
- கிராண்ட் நிதி கிராண்ட் சென்டரில் உள்ள பட்டியலிடப் பட்ட கணக்கிற்கு அனுப்பி வைக்கப்படும் மற்றும் திட்டச் செலவுகளுக்கு நேரிடையாக செலவு செய்யப்படும் வரை அந்தக் கணக்கிலேயே இருக்க வேண்டும். அதாவது ஒரு கட்டணம் ஒரு திட்டம் விற்பனையாளர் அல்லது ஒத்துழைக்கும் நிறுவனம் அல்லது பயனாளியின் நிறுவனத்திற்கு நேரடியாக செலுத்தப்பட வேண்டும். உண்மையான செலவுகள் செய்யப்படாத நிலையிலோ அல்லது சேவைகள் முழுமையாக வழங்கப்படாத நிலையிலோ திட்ட நிதிகள் வழங்கப்படக்கூடாது. திட்டம் செலவுகளுக்கான மறு ஈடு வழங்கப்படும் போது அவர்கள் ரொடேரியன் திட்ட ஸ்பான் சர்களிடம் அசல் விலைப் பட்டியல் அல்லது ரசீது பிரதிகளை கொடுக்க வேண்டும். வங்கிக் கணக்கில் கையெழுத்திடும் அதிகாரம் உள்ளவர்கள் ஸ்பான்சர் கிளப் அல்லது மாவட்டத்தின் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

புகைப்படங்கள், செய்தித் தாள்களிலிருந்து எடுக்கப்பட்ட கட்டிங்குகள், அல்லது கடிதங்கள் அல்லது பயனாளிகளின் அல்லது பயனாளி நிறுவனங்களின் இறுதி அறிக்கையுடன் வழங்கப்பட வேண்டும்.

பைலட் திட்டம் - குறைந்த விலை தங்குமிடம் அல்லது எளிய பள்ளிகள் கட்டுதல் 31.12.2019 அன்று முடிவடைகிறது. ■

டயாலிசிஸ் சேவைக்காக ஃபேர்ஃபேக்ஸ் அறக்கட்டளையுடன் ஓர் MoU

ரஷீதா பகத்

இந்தியாவிலுள்ள ரோட்டரி, ஃபேர்ஃபேக்ஸ் இந்தியா தொண்டுஅறக்கட்டளை யுடன் ஓர் MoUல் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம், நாடு முழுவதுமுள்ள அரசு மருத்துவ மனைகளில், நலிந்த பிரிவினருக்குச் சேவை புரிவதற்கான டயாலிசிஸ் இயந்திரங்கள் 75:25 கூட்டணியின் கீழ் அமைக்கப்படும்.

சமீபத்தில், மும்பையில் அறக் கட்டளையின் CEO ஆப்ரஹாம் அலபட், மகாராஷ்டிர மாநிலத்தின் பிரதிநிதிகளான மாவட்ட ஆளுநர்கள் இந்த MoUல் கையெழுத்திட்டார்கள்.

தொற்றாத நோய்களைத் (NCD) தடுப்பதற் காக நாடுதழுவிய மிகப்பெரிய இயக்க மொன்றைத் தொடங்கியுள்ள RI இயக்குநர் பரத் பாண்ட்யா, ஃபேர்ஃபேக்ஸ் அறக்கட்டளையானது பல விற்பனையாளர்களுடன் உரையாடி, டயாலிசிஸ் இயந்திரங்களுக்கு நல்ல, விலையைப் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டார். இதன்கீழ், ஒரு டயாலிசிஸ் இயந்திரம் ஐந்தாண்டு நீடித்த உத்தரவாதத்துடன் ரூ.4.3 லட்சத்துக்குக் கிடைக்கும்.

ஆரம்பத்தில், மகாராஷ்டிர மாவட்டங்கள் ஃபேர்ஃபேக்ஸுடன் இணைந்து தங்களுடைய மாநிலத்தில் டயாலிஸ் இயந்திரங்களை அமைப்பார்கள்; இதற்கான தொகையில் 75 சதவிகிதத்தை ரோட்டரி திரட்டும், மீதித்தொகையை ஃபேர்ஃபேக்ஸ் சேர்க்கும்.

டயாலிசிஸ் இயந்திரங்களுக்கான பணத்தை ரோட்டரியன்கள் திரட்டியவுடன், அதில் ரோட்டரியின் சக்கரச் சின்னம் பொறிக்கப்படும். ஒரு சங்கத்தால் வழங்கப்பட்டால், அந்த மையத்தின் நுழைவாயிலிலும் அதன் பெயர் காட்சிப்படுத்தப்படும்.

பரத் பாண்ட்யா
RI இயக்குனர்

TRF *அறங்கவலர் குலாம் வஹன்வதி,* DG *மோகன் சந்தவார்கர்,* RIPN *சேகர் மேத்தா,* RID *பரத் பாண்டியா, ஃபேர்ஃபேக்ஸ் ஃபௌண்டேஷன் தலைவர் ஆப்ரஹாம் ஆலப்பட்,* DGs *சுஹாஸ் வைத்யா, கிரிஷ் மசூர்க்கர் மற்றும்* RID *கமல் சங்வி.*

உட்கார்ந்திருப்போர்: DGs *ஹர்ஜித் சிங் தல்வார், ராஜேந்திர பாம்ரே மற்றும்* PDG *ப்ரஷாந்த் தேஷ்முக்.*

சமீபத்தில், ஃபேர் ஃபேக்ஸ் இந்திய CEO, பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார். அப்போது, இந்தியாவில் டயாலிசிஸுக்கான தேவைக்கும் கிடைக்கும் வசதிகளுக்கும் ஒரு பெரிய இடைவெளி இருப்பதாகக் குறிப்பிட்ட PM, அவர் ஒரு டயாலிசிஸ் திட்டத்தை ஏற்று நடத்தவேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொண்டார். இதையடுத்து, இந்தியாமுழுவதும் 1,000 டயாலிசிஸ் இயந்திரங்களை அமைக்கும் இந்த நோக்கத் துடன் அறக்கட்டளை இயங்கிக் கொண்டிருக்கிறது என்று விளக்கினார் அலபட்.

நாங்கள் நாடுமுழுவதும் சுமார் 500 இயந்திரங்களை ஏற்கெனவே அமைத்து விட்டோம்; நாங்கள் மத்திய நல அமைச்சகத்துடன் பணியாற்றி, மாவட்ட மருத்துவமனைகளில் இயந்திரங்களை அமைத்துள் ளோம். இந்த மாதிரி, பொது-தனியார் கூட்டணி யாகச் செயல்படுகிறது; அரசாங்கம் இதற்கான கட்டடத்தை வழங்குகிறது, நாங்கள் இயந்திரங்களை வழங்குகிறோம்.''

ஒரு தனியார் மருத்துவ மனையில் குறைந்தபட்சம் ரூ.2,000 அல்லது அதற்கு மேல் செலவாகும் டயாலிசிஸ், PMன் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏழை நோயாளிகளுக்கு முற்றிலும் இலவசமாகக் கிடைக்கிறது. பொதுவாக, இதைச் சாத்தியமாக்க வேண்டுமென்றால், ஒரு பிரிவுக்குச் 5 இயந்திரங்கள் தேவை. இத்திட்டத்தின்கீழ் ஏற்கெனவே 90 மையங்கள் இயங்கி வருகின்றன என்றார் அவர். தற்போது மகாராஷ்டிராவில் சுமார் 3,600 இயந்திரங்கள் இருப்பதாகவும், இவற்றில் பெரும்பாலானவை பெரிய நகரங்கள் மற்றும் பேரூர்களில் இருப்பதாகவும் Dr பாண்ட்யா குறிப்பிட்டார். இத்திட்டமானது, இச் சேவை குறைபட்டிருக்கும் பகுதிகளில் உள்ள ஏழை நோயாளிகளுக்கு டயாலிசி ஸைக் கிடைக்கச்செய்யும்.

நாங்கள் இத்திட்டத்தை இந்தியா முழுவதும் செயல் படுத்த விரும்புகிறோம். மகாராஷ்டிராவைச் சேர்ந்த DGக்கள் இங்கு இருக்கிறார்கள். ஆகவே, இந்த மாநிலத்தில் நாங்கள் பணியைத் தொடங்குவோம்.''

டயாலிசிஸ் இயந்திரங் களுக்கான பணத்தை ரோட்டரியன்கள் திரட்டியவுடன், அதில் ரோட்டரியின் சக்கரச் சின்னம் பொறிக்கப்படும், ஒரு மையத்திலுள்ள பெரும்பாலான அல்லது அனைத்து இயந்திரங்களும் ரோட்டரியால், அல்லது RC பம்பாய் போன்ற ஒரே ஒரு சங்கத்தால் வழங்கப் பட்டால், அந்த மையத்தின் நுழைவாயிலிலும் அதன் பெயர் காட்சிப் படுத்தப்படும்.''

இந்த MoUக்கான அடிப் படைப் பணிகளைச் செய்த RID 3131ஐச் சேர்ந்த Rtn ராகேஷ் பார்கவுக்கு அவர் நன்றி தெரிவித்தார். MoU கையெழுத்தான போது, RIPN சேகர் மேத்தா, RI இயக்குநர் கமல் சங்வி மற்றும் TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதியும் அங்கிருந்தார்கள். ■

RIPN சேகர் மேத்தாவிற்கு பாராட்டு மழை

கொல்கத்தாவில் RIPN சேகர் மேத்தா தன் தாயார் வல்லப் குமாரி, மனைவி ராஷி, மருமகள் கீதாவுடன். PRIP கல்யாண் பானர்ஜி, RID கமல் சங்வி, TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும் PRID மனோஜ் தேசாய் அவர்களும் உள்ளனர்.

கொல்கத்தாவில் RID பரத் பாண்டியா மற்றும் மாதவி RIPN மேத்தா மற்றும் ராஷி அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கின்றனர்.

PRID Y P தாஸ் மற்றும் மஞ்சு RIPN மேத்தா மற்றும் ராஷியுடன்.

RID 3240 வில் RIPN மேத்தா நன்றியுரையாற்றுகிறார். DGE சுபாஷிஷ் சாட்டர்ஜி அவர்களும் உள்ளார்.

நயன்தாரா மஹாஜன், PRIP கல்யாண் பானர்ஜி, PDG அஸீஸ் மேமன், PRID அஷோக் மஹாஜன் மற்றும் PDG ராகுல் டிம்பாடியா மும்மையில்.

மேலே: *தலைப்பாகையை கழட்டியப்பின் கலைந்த தலைமுடியை சரிசெய்யும்* RIPN *மேத்தா.*

வலது: TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதியுடன்* RIPN *மேத்தா மற்றும் ராஷி.*

மேலே: PDG *விஜய் ஜலானுடன்* RIPN *மேத்தா மற்றும் ராஷி.*
இடது: *ஜெய்ப்பூரில்* RIPN *மேத்தா மற்றும் ராஷி.* PDGs *அஜய் கலா, அஷோக் குப்தா,* PRID *மனோஜ் தேசாய்,* DGN *அஷோக் மங்கல்,* DG *பீனா தேசாய் மற்றும்* DGE *ராஜேஷ் அகர்வால் அவர்களும் உள்ளனர்.*

பேஷ்வா பாஜிராவ் உடையில் RIPN *மேத்தா. ராஷியும் உடன் உள்ளார்.*

RIPN மேத்தா, ராஷி, PDGs
J B காமதார், மாதவ் போராத்தே
மற்றும் அமிதா திம்பாடியா
அவர்களுடன்.

புனேவில் RIPN மேத்தா,
ராஷி, RID கமல் சங்வி,
சோனல், மஹேஷ் கோட்பாகி
மற்றும் அவர் மனைவி
அமிதா.

தில்லியில் DG தீபக்
குப்தா மற்றும் ரீனா
குப்தாவுடன் RIPN
மேத்தா மற்றும் ராஷி.

படங்கள்: ரஷிதா பகத், ஜெய்ஸ்ரீ மற்றும் சிறப்பு ஏற்பாடு

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

BSF ஜவான்களுடன் ரக்ஷபந்தன்

கிரண் ஜெஹரா

RC டோம்பிவில்லி மிட்டவுன், RID 3141, ரோட்டரியர்கள் கட்ச், குஜராத்தின் BSF அவுட்போஸ்டில் இருக்கும் ஜவான்களுடன் ரக்ஷாபந்தன் விழாவைக் கொண்டாடினார்கள். பெண்கள் ரொட்டேரியன்கள் 125க்கும் அதிகமான ஜவான்களுக்கு ராக்கி கட்டினார்கள். அதில் ஒரு வீரர் தன்னுடைய சகோரதரியிடமிருந்து தபால் மூலம் வந்த ராகியை கட்டச் சொல்லி ஒருவரிடம் கேட்டது ஓர் உணர்ச்சிகரமான நிமிடமாக இருந்தது என்றார் திட்டத்தின் சேர்மன் ருதுஜா பாட்டில். பெரும்பாலான ஜவான்கள் நாட்டைக் காக்கும் புனித பணியில் ஈடுபட்டிருக்கும் போது எந்தப் பண்டிகையை கொண்டாடவும் தங்கள் சொந்த வீடுகளுக்கு செல்வதில்லை என்பதை அறிந்த பெண்கள் ஆச்சரியமடைந்தனர்.

படையினரைச் சந்தித்து அவர்களுடன் ஒரு திருவிழாவைக் கொண்டாடுவது எங்களுக்கு ஒரு பெரிய பாக்கியம் ஆகும். அவர்களின் புன்னகையை பார்த்ததும் கட்சிலிருந்து மும்பை வரை 850 மைல் பயணம் செய்தது முழுமையாக பயனுள்ளதாக எங்களுக்கு தோன்றியது,'' என்று கிளப் தலைவர் அனில் குல்கர்னி கூறினார். மற்றும் கிளப் பெண்களுக்கு ராக்கிகளையும் இனிப்புகளையும் தயார் செய்ததற்கும், பள்ளிக் குழந்தைகளை விட்டு ஜவான்களுக்கு நன்றிக் கடிதங்கள் எழுத வைத்ததற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.இக்கடிதங்கள் BSF ஜவான்களிடம் ஒப்படைக்கப் பட்ட போது அவர்கள் ரொட்டேரியன்களின் இந்த அன்பான செய்கையால் மிகவும் உணர்ச்சி வசப்பட்டனர்.■

Cancer Institute (W.I.A.)

(Regional Cancer Centre)

Adyar, Chennai - 600 020.

Help us in our campaign against cancer

We seek your generous contribution to support our Dharmasala that provides food and shelter for patients and attenders.

- **It sees 160-180 inmates a day.**
- **Our monthly expenses Rs 6 lakh**
- **Exemption for donations under 35 (I) (ii) (Research); 80 G**

Dr V Shanta, Chairman

Dr G Selvaluxmy, Director

Cancer Institute (WIA) Adyar, Chennai – 600 020.

Phone: +914424910754. Email: *caninst@md2.vsnl.net.in*

விவசாயிகளுக்கான ரோட்டரிச் சந்தை

ரஷீதா பகத்

DG *ராஜேந்திர மாம்ரே,* RC *நாஷிக் தலைவர் மனிஷ் சின்தாதே, மற்றும் சங்கத்தினர் ரோட்டரி காய்கறி சந்தையில்.*

நாசிக் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு இயற்கை விவசாயத்தை லாப கரமாகவும் நீடித்திருக்கக்கூடிய திட்டமொன்றை வெற்றி கரமாகத் தொடங்கியுள்ளது RC நாசிக், RID 3030. இதன்மூலம், ரோட்டரியின் மையப் பகுதிகளில் இரண்டான வாழ்க்கைகளை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஒரே திட்டத்தில் இணைத்து, அத்துடன், துயரத்தில் உள்ள இந்திய விவசாயிகளுக்கு முக்கியமான ஒரு மூன்றாம் பரிமாணத் தையும் இவர்கள் சேர்த்துள்ளார்கள்.

இந்தச் சங்கம் தற்சமயம் தன்னுடைய 75வது ஆண்டைக் கொண்டாடுகிறது. சென்ற ஆண்டு, இக்குழுவின் ஓர் உறுப்பினரும் விவசாய நிபுணரும், உள்ளூர் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியருமான ஹெம்ராஜ் ராஜ்புத் அவர்களுடைய தலைமையின் கீழ் இந்தக் குழு ஒரு ‘ரோட்டரி இயற்கைச் சந்தை’யை அறிமுகப்படுத்தியது. இதே நகரிலுள்ள ரோட்டரிக்குச் சொந்தமான கூடத்தில் இது நடைபெற்றது.

சங்கச் செயலாளர், தலைவர் பதவி வேட்பாளரான ஷ்ரீயா குல்கர்ணி இது பற்றிக் குறிப்பிடும்போது, நம்முடைய விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய ஒரு சேவைத் திட்டத்தை நாங்கள் செய்ய விரும்பினோம் என்கிறார். ஏனெனில், விவசாயம் தான் இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு. விவசாயிகள் விளைவிக்கும் பயிர்களுக்கான லாபத்தில் பெரும் பகுதியை இடைத்தரகர்கள் கொண்டு சென்று விடுகிறார்கள் என்பதை நாம் எல்லாரும் அறிவோம். இத்துடன், இந்தியாவில் விவசாயம் என்பது பெரும்பாலும் பருவ மழையைச் சார்ந்திருக்கிறது; அதிலிருந்து வரும் வருவாய் நிச்சயமற்றதாகவும், ஊகிக்க இயலாததாகவும் உள்ளது.

காய்கறிகள், பழங்கள் போன்ற பணப்பயிர்களுக்கு வேதிப்பொருட்கள், பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தக் கூடாது என்று விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்றார் இத்துறையில் வல்லுனரான ராஜ்புத். இதனால், இயற்கை விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் தங்களுடைய வருவாயை இடைத்தரகர்களிடம் இழக்காமல் தங்களுடைய விளைச்சலை விற்பதற்கான சந்தைப் படுத்தல் அமைப்பை வழங்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

சமூக ஊடகங்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சிற்றேடுகளின் வழியாக ரோட்டரி இயற்கைச் சந்தை விளம்பரப்படுத்தப்பட்டது; தொடக்கத்தில் சந்தையானது ஒரு வாரம் விட்டு ஒரு வாரம் செவ்வாய்க் கிழமைகளில் நடைபெற்றது. இதை இன்னும் துடிப்பாக ஆக்கி, மேலும் அதிக விவசாயிகளை ஈடுபடுத்தி, அவர்களுக்கு நன்மை தேடித் தருவதற்காகவும், இந்த முயற்சி யை நீடித்திருக்கச் செய்வதற்காகவும் இந்தத் திட்டத்துக்காகத் துஷார் உகாலெ தலைமையின்கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது.

இந்த முன்னெடுப்பை இன்னும் அதிக வெற்றிபெறச் செய்வதற்காக, வாடிக்கையாளர்களுக்கு மேலும் எளிதான, நகரின் முன்னணிப் பகுதியொன்றுக்கு இதை மாற்ற வேண்டும் என்றும், ஒவ்வொரு மாதமும் இரண்டாவது, நான்காவது ஞாயிற்றுக்கிழமைகளில் இதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் இந்தக் குழு தீர்மானித்தது. இதற்காக, நகரின் மையப்பகுதியில் உள்ள ஒரு புகழ்பெற்ற கூடத்தை ரோட்டரியன்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

நாங்கள் அங்குள்ள கார் நிறுத்து மிடத்தை ரூ.5000க்கு வாடகைக்கு

எடுத்தோம்; விவசாயிகள் தங்களுடைய தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தும் ஓர் இடமாக அதை மாற்றினோம்.''

அவர் பகிர்ந்துகொள்ளும் ஒரு சுவையான துணுக்கு, மகாராஷ்டிராவிலும் இந்தியாவின் மற்ற பகுதி களிலும் வெங்காயத்தின் விலை அதிகரித்த போது, சென்ற வாரம் விவசாயிகள் இயற்கை வெங்காயத்தைக் கொண்டுவந்தார்கள்; அதற்கான விலை, கிலோவுக்கு ரூ.30 என்று தீர்மானித்தார்கள். அவை மிக நல்ல தரத்தில் இருந்தன. மொத்த வெங்காயமும் 30 நிமிடங்களில் விற்றுத்தீர்ந்து விட்டது!''

இந்த இடத்தில் கிட்டத்தட்ட 80 சதவிகிதம், ஆண்டு உறுப்பினர் அடிப்படையில் முன்கூட்டியே பதிவுசெய்யப்பட்டுவிடுகிறது, என்கிறார் சமூகச் சேவை இயக்குநர் ஓம்பிரகாஷ் ராவத்.

விவசாயிகள் எல்லாவிதமான காய்கறிகள், பழங்களையும் கொண்டுவருகிறார்கள்.

ஷ்ரீயா ஒரு சுவையான தகவலைப் பகிர்ந்துகொள்கிறார்: செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில், பழங்குடியின விவசாயிகள் ரன் பஜ்யா (மராத்தி மொழியில் காட்டுக் காய்கறிகள்) என்ற ஒரு காயை விளைவிக்கிறார்கள். இது மிகவும் ஊட்டச்சத்துமிக்கது; இரும்புச்சத்தும் கால்சியமும் நிறைந்தது. ஆனால், இது எளிதில் கிடைப்பதில்லை; இதை எப்படித் தயாரிப்பது என்று பல மக்களுக்குத் தெரியாது.

ஆகவே, இந்தக் காயை விளைவிக்கிற பழங்குடியின விவசாயிகள், இதை எப்படித் தயாரிப்பது என்று சந்தை நாட்களில் செய்துகாட்டினார்கள்.

விவசாயத்தில் ஈடுபடும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களுடைய இயற்கைப் பொருட்களை, அப்பளம், ஊறுகாய் போன்ற உலர் பொருட்களைக் கொண்டுவருமாறு ஊக்குவிக்கப் படுகிறார்கள். தீபாவளிக் காலகட்டத்தில், வீட்டில் செய்த பாரம்பரிய இனிப்புகளைக் காட்சிப்படுத்துமாறு நாங்கள் அவர்களைக் கேட்டுக்கொண்டோம், பலவகையான சாலட்களை எப்படிச் செய்வது என்பதற்கான ஒரு செய்முறை விளக்க நிகழ்ச்சியையும் அவர்கள் நடத்தினார்கள் என்கிறார் ஷ்ரீயா.

சங்கத் தலைவர் மனிஷ் சிந்தாடெ இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில், இயற்கைச் சந்தை யின் வெற்றியைக் கண்ட சங்க உறுப்பினர்கள், அதை வாரந்தோறும் நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சியாக ஆக்கத் திட்டமிட்டுள்ளார்கள் என்றார்.

மாணவிகளுக்கு மிதிவண்டிகள்

இந்தச் சங்கம் நடத்தும் இன்னொரு சேவைத் திட்டம், இகட்புரி என்ற பிரதேசத்திலுள்ள தொலைதூரப் பகுதியான டாரெவாடி என்ற கிராமத்தில் நடைபெற்றுவருகிறது. ஓர் அணையைக் கட்டுவதற்காக, இங்கிருந்த கிராமவாசிகள் இடம் மாற்றப்பட்டார்கள். இப்போது, இந்தப் பகுதியிலுள்ள மாணவிகள் பள்ளிக்குச் செல்வதற்காக இச்சங்கம் மிதிவண்டிகளை வழங்கிவருகிறது.

பெண்களுக்கான மழைக்கோட்டுகள், காலணிகள், கணினிகள், மிதிவண்டிகள் ஆகிய தேவைகளைச் சங்க உறுப்பினர்கள் அடையாளம் கண்டார்கள். 75 மிதிவண்டிகள், 75 கணினி அமைப்புகள் மற்றும் 25 பழைய மிதிவண்டிகளை (பழுதுபார்க்கப்பட்டுப் புதுப்பிக்கப் பட்டவை) விநியோகிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது; இரண்டு கணினி அமைப்புகள், காலணிகள், மழைக்கோட்டுகள், மூத்த குடிமக்களுக்கான போர்வைகள், தீபாவளியின்போது இனிப்புகள் ஆகியவையும் வழங்கப்பட்டன.■

சங்கத்தினர் பெண் குழந்தைகளுக்கு சைக்கிள் வழங்குகின்றனர்.

கொல்கத்தாவில் 100 ஆண்டுகளாகத் தொடரும் நன்மைகள்

ஜெய்ஸ்ரீ

கல்கத்தா ரோட்டரி சங்கம், RID 3291, தன்னுடைய 100வது பட்டய விழாவை ஜனவரி 2020ல் கொண்டாடவுள்ளது. இதை முன்னிட்டு, இச்சங்கத்தின் உறுப்பினர்கள் காலத்தில் பின்னோக்கிப் பயணம் செய்கிறார்கள், கடந்த ஒரு நூற்றாண்டாகப் பலவிதமான திட்டங்களின்வழியாகத் தாங்கள் தொட்டுள்ள வாழ்க்கைகளை திரும்பிப்பார்க்கிறார்கள்.

இந்தச் சங்கம் செப்டம்பர் 1919ல் நிறுவப்பட்டது, ஜனவரி 1920ல் பட்டயமாக்கப்பட்டது. 21 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட இச்சங்கம், இன்று 240 உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கைக்கு வளர்ந்துள்ளது. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷில் 28 ரோட்டரி சங்கங்களுக்கு ஆதரவளித்துள்ளது. இந்தியாவிலிருந்து முதல் RI தலைவரை (நிதீஷ் லஹாரி) வழங்கிய தனிப்பெருமை இந்தச் சங்கத்துக்கு உண்டு. மகாத்மா காந்தி, தலாய் லாமா போன்ற தலைவர்கள் இந்தச் சங்கத்தில் பேசியிருக்கிறார்கள் என்ற பெருமையும் இதற்குண்டு.

பலருடைய வாழ்க்கையை மாற்றிய இந்தச் சங்கத்தின் செயல்பாடுகளை இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

இங்கு நெடுநாட்களாகத் தொடர்ந்துவரும் திட்டங்களில் ஒன்று, ஆண்டுதோறும் நடைபெறும் 'குழந்தைகள் திருவிழா'. 1925ல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் நோக்கம், கொல்கத்தாமுழுவதுமுள்ள விளிம்புநிலைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு 'ஒரு நாள்முழுக்கச் சூரியவொளி'யைப் பரிசளிப்பது.

ஆதரவற்றோர் இல்லங்கள் ஐந்தைச் சேர்ந்த 200 குழந்தைகளுடன் தொடங்கிய இந்தத் திட்டம், படிப்படியாக வளர்ந்தது. ஆதரவற்றோர் இல்லங்கள், NGOக்கள் மற்றும் பிற அமைப்புகள் பலவற்றைச் சேர்ந்த 1,750 குழந்தைகளுக்குப் பலன்தரத் தொடங்கியுள்ளது. இந்த மகிழ்ச்சிப் பயணம் அவர்களுடைய மன உறுதியையும் தன்னம்பிக்கையையும் உயர்த்தும் என்று நாங்கள் நம்புகிறோம் என்கிறார் சங்க உறுப்பினர் அமித் கோஷ்.

கொல்கத்தா ரோட்டரி சதன் நித்திஷ் லஹரி குழந்தைகள் நூலகத்தில் ரோட்டரியினர்.

ஒவ்வோராண்டும், நிக்கோ பூங்காவில் காலைமுதல் மாலைவரை அவர்கள் ஆனந்தமாக விளையாடுகிறார்கள்; அத்துடன், அவர்களுக்கு மிகச்சிறந்த விருந்தும் உண்டு. பலவிதமான உணவு வகைகளைக் கொண்ட மதிய உணவையும் தின்பண்டங்களையும் ருசித்துச் சாப்பிடுகிறார்கள். ஏராளமான நல்ல நினைவுகள், ரோட்டரியன்கள் வழங்கும் ஒரு பரிசுப் பொதியுடன் அவர்கள் வீடு திரும்புகிறார்கள்.

40-ஏக்கர் பரப்பில் 35 மிகச் சிறந்த ஈர்ப்புகளைக் கொண்ட இந்தப் பூங்கா, சங்க உறுப்பினர் ராஜீவ் கௌலுக்குச் சொந்தமானது. குழந்தைகளுக்கான இந்தத் திட்டத்தைச் இந்தச் சங்கம் இத்தனை ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்துவதற்கு அவருடைய பரந்த மனம் உதவுகிறது. இந்த நிகழ்வின் போது, இந்தப் பூங்காவில் வெளி நபர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. மொத்தப் பூங்காவும் இந்தக் குழந்தைகளுக்காகமட்டுமே!

குழந்தைகளுக்குத் தடுப்பூசிபோடும் திட்டம், 2009ல், ஹௌராவிலுள்ள புனித தாமஸ் இல்லத்தில் தொடங்கியது. $300,000 மதிப்புள்ள பல பன்னாட்டு நல்கைகளின் வழியாக, 20 நோய்களுக் கெதிரான தடுப்பூசி களை 75,000 குழந்தைகளுக்கு வழங்கியுள்ளது. நாங்கள் இந்த ஆண்டு 25,000 குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடத் திட்டமிட்டுள்ளோம் என்கிறார் கோஷ்.

காசநோயால் பாதிக்கப்பட்ட ஜோயா அலி.

தடுப்பூசிச் செயல் பாடானது, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை செயல்படுத்தப்படுகிறது. தங்களுடைய குடும்பத்தினரால் கைவிடப்பட்ட TB நோயாளிகள் தங்கியிருக்கும் இல்லத்தில் இது நடைபெறுகிறது. இந்த நோயாளிகளுடைய குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். 8–14 வயதுள்ள சிறுமிகளுக்குக் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பூசியையும் இதில் சேர்க்கவுள்ளோம்.''

இந்த இல்லத்திலுள்ள பெண்களுக் காகப் பணிசார்ந்த பயிற்சிகளையும் சங்கம் நடத்துகிறது. $100,000 பன்னாட்டு நல்கையொன்றின் வழியாக இப்பணி நடைபெறுகிறது.

இந்த இல்லத்திலிருக்கும் ஜோயா அலி, தன்னுடைய படுக்கையிலிருந்து எழுந்து நம்மை மகிழ்ச்சியாக வரவேற்கிறார், நான் ஒரு தொழில்முறைக்கலைஞரைப்போல் தைக்கக் கற்றுக்கொண்டுள்ளேன்; நான் ஒரு ஃபேஷன் வடிவமைப்பாளராக விரும்புகிறேன் என்கிறார்.

ஆறு மாதங்களுக்கு முன்னால் அவருக்கு TB வந்தது; அப்போது, அவருடைய குடும்பத்தினர் அவரைக் கைவிட்டு விட்டார்கள். இச்சங்கத்தின் உதவியுடன் தையற் கலையைக் கற்றுக் கொண்டுள்ளார். இவரைப் போல் இன்னும் பல நோயாளிகள் இக்கலையைக் கற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஹௌரா சவுத் பாய்ன்ட் இல்லத்தின் பரந்துவிரிந்த வளாகத்துக்குள் நுழையும்போதே, சிறு குழந்தைகள் பாடும் வங்காளப் பாடல்கள் நம்மை வரவேற்கின்றன. இங்கு தங்கியுள்ள மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கு இந்தச் சங்கம் மருத்துவப் பராமரிப்பளிக்கிறது. தன்னுடைய நூற்றாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, இங்குள்ள நலிந்த குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்காக ஒரு பாலப் பள்ளியைக் கட்டத் தொடங்கியுள்ளது இந்தச் சங்கம். ஒரு ஜெர்மன் சங்கத்தின் பன்னாட்டு நல்கையொன்றின்வழியே இந்தத் திட்டம் நடைபெறுகிறது.

இன்று ஹௌராப் பாலம் என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற பாலத்தை அனைவரும் அறிவார்கள். ஆனால், 1927ல் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக அரசாங்கத்தை இணங்க வைப்பதில் இந்தச் சங்கம் ஒரு பங்காற்றியுள்ளது என்று சுட்டிக் காட்டுகிறார் கோஷ். அதற்குமுன்னால் இந்த இடத்தில் ஒரு பான்டூன் பாலம்தான் இருந்தது; அதுவும் மிகவும் பாழடைந்துபோயிருந்தது.

இந்த நகரத்தில் ப்ரக்கோலியை அறிமுகப்படுத்துவதிலும் இந்தச் சங்கம் ஒரு முக்கியப் பங்காற்றி யுள்ளது. 1987ல் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் பேகம்பூரில் ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டமொன்றைத் தொடங்கியபோது தான் இங்கு ப்ரக்கோலி அறிமுகமானது.

இதேபோன்ற ஒரு திட்டம் பிஷ்ணுபூரிலும் நன்கு உருவாக்கப்

ஹவ்ரா சவுத் பாய்ண்டில் குழந்தைகளுடன் ரோட்டரியினர்.

பட்டுள்ளது; ஓர் RCC உதவியுடன் நடைபெறும் இத்திட்டம், அங்கு முழுமையான முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்காகப் பணியாற்றுகிறது.

'ரோட்டரி சதன்' என்பது, ஒரு புகழ்பெற்ற நினைவுச்சின்னமாகும். 1992ல் PRIP ராஜேந்திர சாபூ இதற்கு அடிக்கல் நாட்டினார். இங்குதான் நிதீஷ் லஹாரி சிறுவர் நூலகம் உள்ளது; இங்குள்ள காப்பகப் பிரிவில், கடந்த பல ஆண்டுகளாகத் திரட்டப்பட்ட ரோட்டரி நினைவுப்பொருட்கள் பாது காக்கப்பட்டுள்ளன. இங்கு, பணிசார்ந்த பயிற்சி மையமொன்றும் உள்ளது. இது, விளிம்புநிலைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்குப் பயிற்சி வகுப்புகளை வழங்குகிறது.

இதய அறிவியலுக்கான ரவீந்திரநாத் தாகூர் பன்னாட்டுக் கல்வியமைப்பும் ஒரு பன்னாட்டு நல்கையும் சேர்ந்து, இதுவரை 700 இதய நோயாளிகளைக் காப்பாற்ற இந்தச் சங்கத்துக்கு உதவியுள்ளன. இந்த ஆண்டின்போது, 1,000 உயிர்களைக் காக்கவேண்டும் என்பது தான் எங்கள் இலக்கு என்கிறார் நூற்றாண்டுக் குழுத் தலைவர் சௌமென் ராய்.

இந்த மைல்கல் ஆண்டைக் கொண்டாடுவதற்காகத் திட்டமிடப் பட்டுள்ள மற்ற திட்டங்களையும் இவர் பட்டியலிடுகிறார். எடுத்துக் காட்டாக, பழங்குடியினருக்கான பள்ளியொன்றில் விடுதியொன்றைக் கட்டுவது, 10,000 குழந்தைகளுக்குத் கண் பார்வையிழப்புப் பிரச்னைகள் உள்ளனவா என்று பரிசோதிப் பது, 1,000 குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்வது, 1,000 வயது வந்தோரைக் கல்வியறிவு பெற்றவர்களாக ஆக்குவது.

பல ஆண்டுகளில், இச்சங்கம் பள்ளிகளில் 600 கழிப்பறைகளைக் கட்டியுள்ளது, கட்டணம் செலுத்திப் பயன்படுத்த கூடிய மூன்று கழிப்பறைகளை நகரெங்கும் அமைத்திருக்கிறது,

200 ஆழ்துளைக்கிணறுகளைத் தோண்டியுள்ளது. நூறாவது ஆண்டில் இந்த எண்ணிக்கையை 1,000 கழிப்பறைகள், 10 பொதுக் கழிப்பறைகள், 300 ஆழ்துளைக் கிணறுகள் என்று அதிகரிப்பதுதான் இவர்களுடைய இலக்கு.

பன்னிரண்டு கிராமங்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமில்லாத இடங்களாக ஆக்கப் பட்டுள்ளன. இந்த ஆண்டு, மேலும் 12 கிராமங்களை இவ்வாறு மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

எங்கள் சங்கத்துக்கு 100 வயதாகிறது என்ற உண்மை, எங்கள் அனைவருக்கும் புத்துணர்ச்சியை வழங்கியுள்ளது; பல்வேறு உறுப் பினர்கள் ஒவ்வொரு நாளும் புதிய யோசனைகளை எங்களுக்குச் சொல்கிறார்கள்; அவற்றில் சில யோசனைகள் மிகவும் நல்லவை, அவற்றைக் கேட்டுவிட்டுச் சும்மா இருக்க இயலாது, உடனே செயல்படுத்தவேண்டும் என்று தோன்றும். இந்த ஆண்டு, எல்லாத் திட்டங்களும் ஒரு தென்றலைப்போல் இதமாக நடைபெற்றுவருகின்றன; இதே ஆண்டில் இன்னும் பல திட்டங்களை நாங்கள் வரிசையாகச் செயல்படுத்தவுள்ளோம். ஆனால், இவை அனைத்தும், சங்கத் தலைவர் புர்னேந்துவுடைய சுறுசுறுப்பான ஊக்கத்தினால் தான் சாத்தியமாகின்றன. அவரை யாராலும் வெல்ல இயலாது என்றார் ரே.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

Rotary India Centennial Summit 2020



Dear Friends,

Rotary India Centennial Summit 2020 is the celebration of completion of 100 years of Rotary in India.

Rotary started in India, in the city of Kolkata on 1st January, 1920.

This summit will be the celebration of Rotary's motto 'Service above Self' and we shall do this by showcasing the work of Rotary in India in the six area of focus. Even as we do that we shall also figure out the plans for the future.

Rotary India Centennial Summit is expected to have 5,000 delegates from more than 25 countries. The program will have celebrity speakers and top leadership of the Rotary world. It will be an excellent opportunity to meet friends from across the globe, make new friends, share success stories and take back great ideas from the event.

The lavish food court and the outstanding entertainment will add up to make this a NOT TO BE MISSED event.

You have to be there.

Sincerely,

RID Kamal Sanghvi
Convenor, RICS 2020

RID Dr. Bharat Pandya
Co-convenor, RICS 2020

Our Esteemed Guests

Mark Maloney
President
Rotary International



Shekhar Mehta
President Nominee
Rotary International

Raja Saboo
Past RI President



Kalyan Banerjee
Past RI President

PRIP Gary Huang
TRF Trustee Chair

PRIP K R Ravindran
TRF Trustee Chair 20-21



PRIP John Germ
TRF Trustee Chair 21-22

Rafael Garcia
RI Director

Jennifer Jones
TRF Trustee



PDG Gulam Vahanvati
TRF Trustee

Sangkoo Yun
TRF Trustee



Anne Matthews
Past RI Director



John Hewko
General Secretary, RI

The Venue

Termed as one of the largest convention centers in South Asia, Biswa Bangla Convention Center in Kolkata, West Bengal is all set to host RICS 2020. The magnificent property is a home to a convention center which can efficiently accommodate more than 4,000 guests and a cluster of lovely banquet halls.





The House of Friendship

Enjoy a convention style HOF, where Rotary world comes together and ideas, services and success stories are proudly shared. Get a chance to network with top Rotary leaders while enjoying diverse cuisine & world class entertainment.

Welcome to Kolkata on 14th, 15th & 16th February 2020



PDG Vinod Bansal
Chairman
RICS 2020



PDG Anirudha Roy Chowdhury
Co-Chairman
RICS 2020



PDG Kishore Kumar Cherukumalli
Secretary
RICS 2020

Log on to **www.rics2020.org** for online registration

RC பேலூருக்கு நைஜீரிய சிறுமியின் நன்றி

ரஷீதா பகத்

அந்தச் சிறுமியின் பெயர் மிராக்கிள். அற்புதம் என்று அர்த்தம். பெயருக்கு ஏற்றபடி அவள் வாழ்க்கையிலும் பேலூர் ரோட்டரி சங்கம் ஓர் அற்புதத்தை வழங்கியது.

ஆம்.

கடந்த நவம்பர் 2ஆம் தேதி மிராக்கிளின் தந்தை ஜோசப் சுக்வுமேஜேவும், அவளது தாயும் தங்கள் மகள் பூரண உடல் ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சியுடன் இருப்பதாக மனநிறைவோடு தங்கள் முகநூலில் நன்றி பாராட்டியுள்ளனர். அதில், பேலூர் ரோட்டரி சங்கத்தின் RID 3291 நல்லிதயம் படைத்த உறுப்பினர்கள், குறிப்பாக திரு R K புப்னாவின் பெருமுயற்சியால் தங்கள் மூன்று வயது மகள் மிராக்கிளுக்கு கொல்கத்தா மருத்துவமனையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில், இதய அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டு இப்போது பூரண சுகத்துடன் இருப்பதாக மனம் கனிந்த பாராட்டுகளையும், நன்றிகளையும் அவர்கள் பகிர்ந்துள்ளனர்.

மேலும், ‘இந்தியாவிலுள்ள மேற்குவங்க மாநிலத் தலைநகர் கொல்கத்தாவின் ஹவுராவில் உள்ள நாராயணா சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் மிராக்கிளுக்கு திறந்த இதய அறுவை சிகிச்சை நடைபெற்றது. அவளது உயிரைக் காப்பாற்றிய அனைவருக்கும் கடவுளுக்கும் எனது நன்றியை இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். எனது நினைவுகளைப் பின்னோக்கி நகர்த்தியபோது, நான் நைஜீரியாவில் இருந்து இந்தியாவுக்கு (தெரியாத தேசம் அறியாத மக்கள்) அறிமுகமில்லாத நல்இதயம் படைத்த மனிதர்கள் மீது கொண்ட மிகுந்த நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் சுமந்து கொண்டு

பயணம் செய்தேன்.' என்று தனது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டுள்ளார் மிராக்கிளின் தந்தை.

ஆனால் கொல்கத்தா விமான நிலைய வரவேற்பறையில் R K புப்னா அவர்களை வரவேற்று பேபி மிராக்கிள் என்று கனிவோடு அழைத்தபோது அந்த பெற்றோர் மனதில் இருந்த கவலைகள் எல்லாம் பறந்தோடி விட்டன.

ரோட்டரி முத்திரை ஏந்திய அவர்களை ரோட்டரியின் பரந்த குடும்பம் வரவேற்றபோது அங்கு நிலவிய பரவசத்தை விவரிக்க இயலாது. ஆனால் அந்த பெற்றோரின் நன்றியுணர்வை அவர்களது பேஸ்புக் பதிவில் பளிச்சென நம்மால் உணரமுடிகிறது. அந்தப் பதிவில், மிராக்கிளின் பெற்றோர்கள், எங்களை ஓர் அரச குடும்பத்தைப் போல கொல்கத்தா ரோட்டரி உறுப்பினர்கள் நடத்தினர். எங்களுக்கு மருத்துவமனையில் சிறப்பு வசதி கொண்ட வார்டை பெற்றுத்தந்தனர். நாங்கள் கேட்கும்போதெல்லாம் உயர்தரமான சிறப்பு உணவுகளை தந்ததோடு அனைத்து மருத்துவச் செலவினங்களையும் ஏற்றுக் கொண்டனர் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில் 2019 ஜனவரி ரோட்டரி நியூஸ் இதழில் வெளியான ஒரு கட்டுரையை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதில், நைஜீரியாவை சேர்ந்த ஒரு சிறுமிக்கு மருத்துவ சிகிச்சையுதவியை அளிக்க அமெரிக்காவிலிருந்து சென்ற மருத்துவக் குழுவினருக்கு அந்த சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்களும் போதிய வசதிகளும் நைஜீரிய மருத்துவமனைகளில் இல்லாததால் உதவ முடியவில்லை என்றும் அந்தச் சிறுமிக்கு உடனடியாக அவசர மருத்துவ உதவியை வழங்குவதற்கு அளிக்க ஏற்பாடு செய்யுமாறு அமெரிக்காவின் ஹூஸ்டன் ரோட்டரி சங்கத்தின் (Houston, US, D 5450), சார்பில் ரோட்டரி E-கிளப் ஒன் உறுப்பினர் ஹர்ஷத் ராவேஷியாவிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்தப் பதிவை பேஸ்புக்கில் கண்டதும் உடனடியாக பேலூர் ரோட்டரி சங்கம் உதவ முன்வந்தது குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து புப்னா,

ராவேஷியா அவர்களை உடனடியாகத் தொடர்பு கொண்டு அந்தச் சிறுமியின் மருத்துவ ஆவணங்களைப் பெற்று அதை ஹவுராவில் உள்ள நாராயணா சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவ மனை மருத்துவர்களிடம் கொண்டு காட்டினார்.

ஏழை எளியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு இதய சிறப்பு சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக அந்த மருத்துவமனையுடன் ஏற்கெனவே பேலூர் ரோட்டரி சங்கம் ஓர் ஒப்பந்தத்தை செய்து வைத்துள்ளது. அதனடிப்படையில், சிறுமி மிராக்கிளுக்கு இதயத்தில் சிறு துளை இருப்பதாலும், இடது ரத்த தமனியில் பல்வேறு கோளாறுகளும் இருப்பதைக் கண்டறிந்த மருத்துவர்கள் உடனடியாக மிராக்கிளுக்கு தங்களால் சிறப்பான மருத்து சிகிச்சையைத் தரமுடியும் எனக் கூறினர்.

இதன் பின்னர் மிராக்கிளுக்கு கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் தேதியன்று அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டு மருத்து வமனையிலிருந்து நவம்பர் 8ஆம் தேதி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். கொல்கத்தாவில் அவளது பெற்றோர் உரிய வசதியுடன் தங்கியிருப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சங்க உறுப்பினர்கள் ரமேஷ் திவாரியும், விஷ்ணு தந்தாணியாவும் செய்தனர்.

இந்த சிகிச்சை ஏற்பாடுகளை ரோட்டரி E-கிளப் ஒன் மற்றும் கிரேட்டர் நைஜீரியா ரோட்டரி சங்கமும் D 9125 இணைந்து TRFன் உலகளாவிய மானியத் திட்டத்தின் மூலம் மேற்கொண்டன. இந்த உதவிக்காக சிறுமி மிராக்கிளின் பெற்றோர், மறக்காமல் தங்களது நன்றிகளையும் பாராட்டுகளையும் உறுப்பினர்களின் பெயர்களைத் தனிப்பட்டவகையில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மிராக்கிள் இப்போது பூரண உடல்நலத்தோடு இருக்கிறாள் என்பது மட்டுமல்லாமல் பள்ளிக்குச் செல்லத் தொடங்கி விட்டாள் என்றும் அவளுக்கு ஒரு தம்பிப் பாப்பா பிறந்திருக்கிறான் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். மிராக்கிளின் இதயக்கோளாறு காரணமாக தாங்கள் மற்றொரு குழந்தையைப் பெற்றெடுக்கத் தள்ளிப்போட்டதாகவும் இப்போது மிராக்கிள் உடல் நலம் பெற்றதால் இந்த ஆண் குழந்தையை இப்போது பெற்றெடுத்ததாகவும் நெஞ்சம் நெகிழத் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, உங்கள் அனைவருக்கும் நன்றி. அவள் தன் தோழர்களுடன் பள்ளிக்குச் செல் கிறாள். ஆண்டவன் கிருபையும் ஆசிகளும் உங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் உரித்தாக வேண்டும் என்று நெக்குருகியுள்ளனர்.

இதை நெகிழ்ச்சியுடன் புப்னா கூறுகையில், நான் ரோட்டரி சங்கத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினராக இருக்கிறேன். இந்த சேவையை நான் வாழ்நாளில் மறக்க மாட்டேன் என்றார்.■

ரோட்டரி இந்தியா உலக போலியோ தினத்தை அனுசரிக்கிறது

ரோட்டரி செய்திக்குழு

நாடு முழுவதும் உள்ள ரோட்டரி கிளப்புகள் உலக போலியோ தினத்தை (அக். 24) அனுசரித்தன. இந்த நாளில் இந்தியா தன்னை போலியோ இல்லாத நாடாக அறிவித்துள்ள போதிலும் போலியோவுக்கு எதிராக நோய்த்தடுப்பிற்கான அனைத்து செயல்களையும் முன்னெடுத்துச் செல்வதோடு ரோட்டரி கிளப்புகள் உயிருக்கு ஆபத்தான நோய்களைத் தடுப்பதற்காக குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு ஊசி போட வேண்டிய தன் அவசியத்தை

ஹோஷியார்பூரில் போலியோ பேரணி.

RID 3190ல் போலியோ பற்றிய வரைதல் போட்டி.

பொதுமக்களுக்கு உணர்த்துகிறது.

தில்லியில், RI தெற்காசியா அலுவலகம், RC டெல்லி ரீஜென்சி நெக்ஸ்ட், RID 3011 உடன் கைகோர்த்து பிராந்தியங்கள் முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்த மிஷன் இந்திரதானுஷ் செய்தி வண்டியை கொடி அசைத்து துவக்கி வைத்தது. இந்தியா தேசிய போலியோ பிளஸ் குழு (INPPC) தலைவர் தீபக் கபூர் RISAO அலுவலகத்திலிருந்து, DG சுரேஷ் பாசின் மற்றும் பிற ரோடேரியன்கள் முன்னிலையில் வண்டியை

குர்காவுனில் போலியோ தினத்தையொட்டி ஒரு மருத்துவ முகாம்.

கொடி அசைத்து அனுப்பி வைத்தார்.

குர்கானில் உள்ள ரோட்டரி கிளப்புகள், RID 3011, DLF சைபர் சிட்டியில் ரோட்டரி ஹெல்த் கார்னிவலை ஏற்பாடு செய்தன. அந்த பிரம்மாண்டமான விழாவில் சுகாதார காம்ப் ஏற்பாடு செய்யப்பட்டு அதில் மேமோகிராஃபி மற்றும் புற்றுநோய் கண்டறிதல், பல், நீரிழிவு மற்றும் கண் பரிசோதனை மற்றும் இரத்த தான முகாம் ஆகியவை இருந்தன. PDG Dr. சுஷில் குரானா, DGE சஞ்சீவ் ராய் மெஹ்ரா , தலைமை-TRF சஞ்சய் பார்மர் மற்றும்போலியோ ப்ளஸ் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் சந்தீப் காஷ்யப் RISAOவின் ஒருங்கிணைப்பாளர் சந்தீப் காஷ்யப் குர்கானில் நடைபெற்ற இந்த பிரம்மாண்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

DG Dr சமீர் ஹரியானி மற்றும் மாவட்ட போலியோ ப்ளஸ் குழுவின் தலைவர் டி ருக்மாங்கதாவின் தலைமையில் இயங்கும் RID 3190 உலக போலியோ தினத்தை ஒட்டி மூன்று முக்கிய நிகழ்வுகளை நடத்தியது.

4,500 குழந்தைகள், மாவட்டம் முழுவதுமுள்ள 30 ரோட்டரி கிளப்பு களினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓவிய போட்டியான போலியோ Color-a-thonனில் கலந்து கொண்டனர். போலியோ தடுப்பூசி கண்டுபிடித்த Dr ஜோனாஸ் சால்க் மற்றும் Dr ஆல்பர்ட் சபின் ஆகியோரின் உருவப் படங்கள் பெங்களூரு வாணிவிலாஸ் மருத்துவ மனையின் குழந்தை பிரிவில் திறந்து வைக்கப் பட்டன. டார்ச்லைட் அமைதி கூட்டத்தில் நகரக் காவல்துறை ஆணையர் பாஸ்கர் ராவ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார், இதில் ரோட்டரி தலைவர்கள், ரோட்டராக்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் திரளாக பங்கேற்றனர். ஒரு ஃபிளாஷ் கும்பல் நடனம், ரோட்டரி செய்தி வேன்கள் மற்றும் மெழுகுவர்த்தி விளக்குகள் அமைதி மாநாட்டில் முக்கிய சிறப்பம்சங்களாக இருந்தன.

ஹோஷியார்பூர், பஞ்சாப்பில், உள்ளூர் சுகாதார துறையின் உதவி யோடு உள்ளூர் கிளப்கள் ஏற்பாடு செய்திருந்த பள்ளிப் பெண்களின் ஓட்டத்தை DG சுனில் நாக்பால், RID 3070, கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

RC டில்லி *ரிஜென்ஸி நெக்ஸ்ட்*, RID 3011, *மற்றும்* RISAO, INPPC *தலைவர் தீபக் கபூர் தலைமையில் ஒரு கார் பேரணி நடத்தினர்.*

வடிவமைப்பு:
L குணசேகரன்

புதிய கூட்டணிகள்/நட்புகளை உறுதிப்படுத்துவதற்கான புதுமையான யோசனை

ரஷீதா பகத்

ஜனவரி 2019ல், RID 3201ன் DGE என்றமுறையில், ஒரு ரோட்டரி தலைவரின் வாழ்க்கையில் வரக்கூடிய மிகவும் மகிழ்ச்சியளிக்கிற பயணங்களில் ஒன்றைத் தொடங்கத் தயாராகிக்கொண்டிருந்தார் மாதவ் சந்திரன். அதாவது, சான்டியோகாவில் நடைபெறும் பன்னாட்டுச் சந்திப்புக்குத் தயாராகிக்கொண்டிருந்தார். அப்போது, இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் சுமார் 500 DGEக்களுக்கு என்ன பரிசைக் கொண்டு செல்வது என்று அவர் குழம்பினார். பெரும்பாலான தேர்ந்தெடுக்கப் பட்ட ஆளுநர்களும் இப்படிதான் குழம்பினார்கள்.

முதலில், கேரளத்துடன் தொடர்புடைய வழக்கமான நினைவுப்பரிசுகளைதான் அவர் சிந்தித்தார். அதாவது, யானைகள், படகு வீடுகள் போன்றவை.'' ஆனால், என்னுடைய பெட்டியை மிகவும் கனமாக்கக்கூடிய எதையும் நான் கொண்டு செல்ல விரும்பவில்லை. ஏனெனில், சுஜாதாவும் நானும் ஒரு குறிப்பிட்ட அளவு எடையுள்ள பெட்டிகளைதான் கொண்டுசெல்ல இயலும் என்ற கட்டுப்பாடு உண்டு. அடுத்து, அங்கு வருகிற எல்லாருக்கும் ஒரு நினைவுப்பரிசைத் தருவதைவிட, எண்ணிக்கையைக் குறைத்தால் என்ன என்று சிந்தித்தேன். அதாவது, எங்கள் மாவட்டத்துடன் தொடர்புடையவர்களுக்குமட்டும் நினைவுப்பரிசு வழங்க எண்ணினேன்."

ரோட்டரியில் மிகச்சிறந்த இணைப்பு என்பது, சேவைத் திட்டங்கள்தானே? ஆகவே, தில்லியில் உள்ள RISAOவைத் தொடர்புகொண்டார் சந்திரன்; தன்னுடைய மாவட்டம் (அப்போது RID 3201) பன்னாட்டு சங்கங்கள் மற்றும் மாவட்டங்களுடன் செய்திருக்கிற அனைத்துத் திட்டங்களின் தகவல்களையும் பெற்றார்.''அவர்கள் மிகவும் ஒத்துழைப்பாக நடந்து கொண்டார்கள், எனக்கு ஒரு முழுமையான Excel sheetல் தந்தார்கள். 1990ல் தொடங்கி எங்கள் மாவட்டத்துடன் (320) இணைந்து திட்டங்களைச் செய்துள்ள சங்கங்கள், மாவட்டங்களின் பெயர்கள் அதில் இடம் பெற்றிருந்தன'' என்று சிரிக்கிறார் அவர். உண்மையில், அவருக்குக் கிடைத்தது ஒரு புதையல். உலக அளவில் 104 மாவட்டங்களுடன் இணைந்து 313 திட்டங்கள் செய்யப்பட்டிருந்தன. மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகை மிகப்பெரியதாக இருந்தது: 0.84 மில்லியன்!

இப்போது அவரிடம் 104 மாவட்டங்களின் பட்டியல் இருந்தது. அங்கிருந்து வருகிற ஆளுநர்களுக்கு

ஒரு தன்மயமாக்கப்பட்ட பரிசைத் தரவேண்டும் என்று தீர்மானித்தார் அவர். முதலில், DGEக்கு சிறிது பின்னணியைத் தரவேண்டும், இல்லாவிட்டால், என்ன நடக்கிறது என்றே அவருக்குப் புரியாது.'' அடுத்து, நான் பரிசைத் தன்மயமாக்கவேண்டும். அப்போது தான் அவர்கள் அதை விடுதி அறைகளில் வீசி எறியாமல், வீட்டுக்குக் கொண்டு செல்வார்கள். ஆகவே, DGEயின் பெயரும் புகைப் படமும் பரிசில் இருக்கவேண்டும், மாவட்டங்களின் பெயர்கள், செய்யப் பட்ட திட்டங்களும் இருக்கவேண்டும், அப்போதுதான் அது அவர்களுடைய வீட்டுக்குச் செல்ல அதிக வாய்ப்பு இருக்கும் என்று நான் தீர்மானித்தேன்.

சந்திரனுடைய மாவட்டத்துடன் இணைந்து திட்டங்களைச் செய்துள்ள மாவட்டங்களுடைய DGEக்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தன்மயமாக்கப்பட்ட' பெருமைச் சுருளை' வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதன் பொருள்,

RID 3201 DG *மாதவ் சந்திரன் மற்றும் அவர் மனைவி சுஜாதா,* DG *பெத்* E *ட்ரோலர் மற்றும் அவர் மனைவி ரோட்னியுடன்.*

DGE, அவருடைய துணைவருடைய படமொன்றும் சுருளில் இடம்பெற வேண்டும். இதைச் சொல்வது எளிது; செய்வது கடினம்.'' என்னுடைய மாவட்டச் செயலாளர் ஜோஜோ ஜேக்கப் ஒரு வாரம் முழுக்க என்னுடைய அலுவலகத்தில் அமர்ந்து பணியாற்றினார், வருகிற ஆளுநர்கள், அவர்களுடைய துணைவர்களுடைய புகைப் படங்களை நாங்கள் கூகுளில் தேடினோம்'' என்று சிரிக்கிறார் அவர். சில மாவட்டங்கள், குறிப்பாக USல் உள்ள மாவட்டங்கள், RID 3201 உடன் 10லிருந்து 14 திட்டங்கள்வரை செய்திருப்பதைக் கண்டு அவர் வியந்தார்.

நிறைவாக, மிகவும் எதிர்பார்க்கப் பட்ட ஆளுநர்கள் பயிற்சித்திட்டம் சான்டியாகோவில் தொடங்கியது. DGE மாதவ் சந்திரனும் அவருடைய மனைவி சுஜாதாவும் 104 தன் மயமாக்கப்பட்ட நன்றிச் சுருள்களுடன் விமானத்தில் ஏறினார்கள்.

அதை DG இவ்வாறு நினைவு கூர்கிறார்: IA உண்மையிலேயே நினைவில் நிற்கிற, நினைத்து அனுபவிக்கக்கூடிய ஓர் அனுபவமாக இருந்தது. பெரிய நடன அறையின் அழகு, கம்பீரமான மேடை, கடிகாரத் துல்லியத்துடன் நடைபெற்ற நிகழ்வுகள் பல பண்பாடுகள், உடைகள் மற்றும் உணவுப்பழக்கங்கள் ஒருங்கிணைந்த மையமாக அது அமைந்தது. ஆனால், எங்களுக்கு அதை இன்னும் சிறப்பாக்கிய விஷயம், 100-க்கும் மேற்பட்ட DGEக்களுடன் இணைதல்.

முந்தைய காலகட்டத்தில் நம்பத் தகுந்த கூட்டு அமைப்புகளாக இருந்த மாவட்டங்களுடைய DGEக்களை இந்தத் தம்பதியர் ஒவ்வொருவராகக் கண்டறிந்து சுருள்களை வழங்கிய போது, பழைய உறவுகள் உறுதிப் பட்டதுடன், புதிய உறவுகளும் உருவாகின. சுருள்களைப்பற்றிய ஒரு பரபரப்பான பேச்சு அங்கு தொடங்கியது! குழந்தைகளைக் குணப்படுத்திய, முதியவர்களுக்கு ஆதரவளித்த, நலப்பராமரிப்பு, கல்வி மற்றும் சுகாதாரத்தைப் பலவகையான பயன்பெறுவோருக்கு

RISAOவைத் தொடர்புகொண்டார் சந்திரன்; தன்னுடைய மாவட்டம் (அப்போது RID 3201) பன்னாட்டு சங்கங்கள் மற்றும் மாவட்டங்களுடன் செய்திருக்கிற அனைத்துத் திட்டங்களின் தகவல்களையும் பெற்றார்.

வழங்கிய இத்தனைத் திட்டங்களைப்பற்றித் தெரிந்து கொண்டு எல்லாரும் வியந்தார்கள் என்கிறார் சந்திரன். கிட்டத்தட்ட 2000 பங்கேற்பாளர்களைக் கொண்ட IA19ல் 104 முகங்களை அடையாளம் காண்பது எதார்த்தத்தில் கெட்ட கனவைப்போல்தான் இருந்தது. ஆனால், அதன் பலன்கள் மந்திரம்போட்டதுபோல் சிறப்பாக அமைந்தன.''

அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு DG, 15,000 மதிப்புள்ள நடமாடும் கண் மருத்துவமனைத் திட்டமொன்றைச் செய்வதற்காக ஏற்கெனவே தன்னைத் தொடர்புகொண்டிருப்பதாக DG தொடர்ந்து கூறினார்.

அத்துடன், மதிப்புமிக்க நட்புப் பிணைப்புகளும் உருவாகின. சமீபத்தில், ஓணம் பண்டிகையின்போது, எனக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது. என் குடும்பத்துடன் மொரீஷியஸுக்கு விடுமுறைக்குச் செல்லத் தீர்மானித்தேன். அப்போது, இப்படிப்பட்ட ஒரு சுருளின் மூலம் நான் பெருமைப்படுத்திய ஒரு DGயை அழைத்தேன். அவர் எங்களை வரவேற்பதற்காகத் தன்னுடைய DGE மற்றும் DGN உடன் விமானநிலையத்துக்கே வந்து என்னைத் திகைக்க வைத்தார். நான் அவருடைய சங்கத்துக்கும் சென்று அங்குள்ள உறுப்பினர்களிடம் பேசினேன்.''■

மாதவிலக்குபற்றிய ஓர் உரையாடல்

ஜெய்ஸ்ரீ

RC செவன் ஹில்ஸ் தார்வாட், RID 3170, ஏற்பாடு செய்த மாதவிலக்குச் சுகாதார மேலாண்மைக் (MHM) கருத்தரங்கொன்றில் நான்கு மாவட்டங்களிலிருந்து பிரதிநிதிகள் பங்கேற்றார்கள்; ஏராளமான யோசனைகளை விவாதித்தார்கள்.

இந்த விவாதங்கள் பல விதங்களில் அமைந்தன: ஆண்களும் மாதவிலக்கைப்பற்றிப் புரிந்துகொள்ளவேண்டியது ஏன் என்பதில் தொடங்கி, பெண்களுக்கு இதை எளிதாக்குவதற்கு அவர்கள் எப்படி உதவலாம், மாதவிலக்கில் இருக்கும் காரணத்தால்மட்டும் பெண்கள் தங்களுடைய வீடுகளில் முடங்கிக்கிடக்கவேண்டியதில்லை போன்ற தலைப்புகள்வரை பலவும் பேசப்பட்டன.

கூட்டத்தில் பங்கேற்ற ஆண் பிரதிநிதி ஒருவர், இதைப் பீரியட்ஸ் என்று குறிப்பிடுவது ஏன் என்று கேட்டார். இதுபற்றி ஒரு பெண் பிரதிநிதி இவ்வாறு குறிப்பிட்டார்: மாதவிலக்கைப்பற்றித் தடைகள் இல்லாமல் வெளிப்படையாக விவாதிப்பதில் நாம் நெடுந்தொலைவு வந்துள்ளோம் என்பதை இது காட்டுகிறது. குறைந்தபட்சம் ரோட்டரியிலாவது இது நிகழ்கிறது. இத்தனை ஆண்களுடன் இங்கு இதை விவாதிக்கும்போது நாங்கள் மிகவும் வசதியாக உணர்கிறோம். இந்த மௌனத்தை எங்கும் உடைக்கவேண்டும்.''

மாதவிலக்கை நடைமுறைக் கேற்பவும் ஆரோக்கியமான முறையிலும் கையாள்வதற்கு மாணவிகளுக்குப் பயிற்சியளிப் பதற்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சி தரவேண்டும் என்பதில் இந்தக் கூட்டம் கவனம் செலுத்தியது. தார்வாடைச் சுற்றியுள்ள அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் இதில் பங்கேற்றார்கள்.

குழந்தைகளுக்கு ‘மகிழ்ச்சிப் பொதி’கள் வழங்கப்பட்டன. இவை ஒவ்வொன்றிலும் பஞ்சால் ஆன, மீண்டும் பயன்படுத்தக்கூடிய இரண்டு Sanitary Pads, கையைக் கழுவும் லோஷன் ஒரு பாட்டில், ஒரு சோப் மற்றும் சில சாக்லெட்கள் இடம்பெற்றிருந்தன.

PDG கணேஷ் பட் இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். DG கிரீஷ் மசூர்கருடைய மனைவி சந்தியா மசூர்கர் இதைத் தொடங்கிவைத்தார். நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த சங்கத்தின் தலைவர் கௌரி தவர்கிரி பிரதிநிதிகளை வரவேற்றார். DG மசூர்கர், DGND வெங்கடேஷ் தேஷ்பாண்டெ மற்றும் DG நயன் பாடில் (RID 3160) இதில் பங்கேற்றார்கள்.

மாதவிலக்கு என்பது எப்போதும் தவறான நம்பிக்கைகளால் குழப்பப்பட்டுள்ளது; இவை பல தலைமுறைகளாக நிலைத்துவிட்டன.

மாதவிலக்கைப்பற்றிப் பேசு வதற்கான தடைகள் உலகம்முழுக்க உள்ளன என்றார் கௌரி. மலாவியில், மாதவிலக்காக உள்ள பெண்கள் உப்புப்

RID 3170ன் மாதவிடாய் ஆரோக்கியம் குறித்த பயிற்சி கூட்டத்தில் பள்ளி சிறுமிகளுடன் Dr மீனாக்ஷி பரத், PDG கணேஷ் பட், RC செவன் ஹில்ஸ் தார்வார்ட் செயலாளர் பிரஷாந்தி ரெட்டி, தலைவர் கௌரி தவரகிரி, சந்தியா மசூர்கர், DG நயன் பாட்டீல், ஷிகா பாட்டீல், DGND வெங்கடேஷ் தேஷ்பாண்டே, வாணி இர்கல் மற்றும் மலைவி தேஷ்பாண்டே.

போட்டுச் சமைக்கக்கூடாது, ஏனெனில், அப்படிச் செய்தால், அவர்களுடைய பற்கள் கொட்டிவிடலாம் என்று நம்பப்பட்டது! நம் நாட்டில், அவர்கள் மாதவிலக்கு நாட்களில் குளிக்கக் கூடாது அல்லது ஊறுகாயைத் தொடக் கூடாது என்று நம்பப்பட்டது என்று தொடர்ந்து சொன்னார் அவர்.

மாதவிலக்குடன் இணைக்கப் பட்டுள்ள களங்கவுணர்வானது, எல்லா இடங்களிலும் உள்ள கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிச் சமூகங்களைத் தொடர்ந்து பின்னுக்குத் தள்ளிவருகிறது.

இது ஒரு பெரிய பனிப்பாறையின் நுனிதான். மாதவிலக்குச் சுகாதாரத்தைக் கையாள்வதை நோக்கி நாம் பணியாற்ற வேண்டும்; அதன்மூலம், மாதவிலக்கைச் சந்திக்கிற காரணத் தால் எந்தப் பெண்ணும் தன்னுடைய வீட்டில் முடக்கப்படாமலிருப்பதை உறுதிசெய்யவேண்டும். வீடுகளில் கை கழுவுகிற, கழிப்பறைகளைப் பயன்படுத்துகிற பழக்கத்தை நாம் தொடங்கிவைத்ததுபோலவே, இந்த மாற்றத்துக்கான வினையூக்கிகளாகப் பெண் குழந்தைகளுக்குப் பயிற்சி தர வேண்டும். அவர்கள் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிச் சென்று, தங்களுடைய தாய் மார்கள், உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தங்களுடைய மாதவிலக்குகளைப் பாதுகாப்பாகவும் சுகாதாரமாகவும் கையாளக் கற்றுத்தருவார்கள் என்றார் ரோட்டரி இந்தியா WinS அங்கீகாரக் குழுவின் ஓர் உறுப்பினரான பட். MHM என்பது, நலன் மற்றும் சுகாதாரப் பிரச்னைகளில் கவனம் செலுத்துவதால், அது WinSன் பகுதியாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஒரு பெண் தன்னுடைய மாத விலக்கைச் சுகாதாரமாகவும் கண்ணியம், தன்னம்பிக்கையுடனும் கையாளவேண்டுமென்றால், அவருக்கு ஓர் ஆதரவு அமைப்பு தேவை, அவர் என்ன உணர்கிறார் என்பதை அறிந்திருக்கிற ஆதரவு அமைப்பாக இது இருக்கவேண்டும் என்றார் டாக்டர் மீனாட்சி பாரத், மகப்பேறு மருத்துவ வல்லுனரான இவர், RC பெங்களூரு மேற்கு, RID 3190ன் உறுப்பினராவார்.

திரும்பத் திரும்பப் பயன்படுத்தக் கூடைய Pads, மாத விலக்குக் கோப்பைகளின் வழியாகப் பின்பற்றப்படும் நீடித்திருக்கும் மாதவிலக்குப் பழக்கத்துக்குக் குரல் கொடுத்தார் அவர். இப்போது நாம் பயன்படுத்தும் Pads மேற்பார்வைக்குப் பிரச்னையற்றவையாகத் தோன்றலாம். ஆனால், உண்மையில் அவை பல ஆபத்துகளைக் கொண்டிருக்கின்றன. அவை நச்சானவை என்றார் அவர்.

இதனால், ஒருமுறை பயன்படுத்தி விட்டுத் தூக்கி எறியக்கூடிய Sanitary Napkinகளை வழங்கும் இயந்திரங்கள், எரிக்கும் இயந்திரங்களை முன் வைக்க வேண்டாம் என்று சங்கங்களைக் கேட்டுக்கொண்டார் அவர். திரும்பத் திரும்பப் பயன்படுத்தக்கூடிய பஞ்சு Pads, 2–3 ஆண்டுகளுக்கு நீடிக்கின்றன. இவற்றில் வேதிப்பொருள்கள் இல்லை, இவை சுற்றுச்சூழலுக்கு இதமானவை, இவற்றின் விலை ரூ.200. இவற்றைப் பயன்படுத்தும்போது நீங்கள் சுற்றுச்சூழலுக்கு எவ்வளவு நன்மை செய்வீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள்; அதே நேரத்தில், நலிந்த பெண்ணொருவருக்கும் நீங்கள் உதவுவீர்கள்.

மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதற்கான சிறந்த செயல்பாடுகளைப்பற்றிய ஒரு குழு விவாதம், ஆர்வமூட்டும் பல எண்ணங்களை உருவாக்கியது.

PDG ஆனந்த் குல்கர்னியின் மனைவி டாக்டர் ராஜேஸ்வரி குல்கர்னி, 2017–18ல், ரோட்டரியன் களுடைய துணைவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு தான் அமைத்த ஓர் ஆன்ஸ்' சங்கத்தை நினைவு கூர்ந்தார். நாங்கள் மாவட்டத்தில் பல பள்ளிகளுக்குச் சென்றோம், ஆசிரியர்கள், வளர் இளம்பருவத்திலிருக்கும் பெண்களிடம் MHM பற்றிப் பேசினோம், பல பள்ளிகளில் ஒரு PTA சந்திப்புக்கு ஏற்பாடு செய்து, மருத்துவர்களுடைய ஆதரவுடன் பெற்றோருக்கு ஆலோச னை அளித்தோம்.'' அவர்கள் கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள பெண்களுக்கு Sanitary Napkinsன் முறையான பயன்பாடு, அவற்றை அப்புறப்படுத்துதலைப்பற்றிச் சொல்லித் தந்தார்கள். பள்ளிகளில், பருவ நிலையை எட்டவுள்ள சிறு குழந்தைகளுக்கு மாதவிலக்குச் சுழற்சி, அதன் மேலாண்மையைப்பற்றிய தலைப்புகளை அறிமுகப்படுத்து வதற்கு மூத்த குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

MHMபற்றிய PTA நிகழ்வுகளில் தந்தைமார்களைப் பங்கேற்கச் செய்வது, உயிரியல் செயல்முறையை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்வதற்கு அவர்களுக்கு எந்த அளவு உதவியுள்ளது, குடும்பத்தில் உணர்வுப் பிணைப்பை எவ்வாறு மேம்படுத்தியுள்ளது என்பது பற்றிய தன்னுடைய அனுபவத்தை ஓர் ஆசிரியை பகிர்ந்துகொண்டார்.

மாதவிலக்குகளைப்பற்றிக் கிசுகிசுப்பான குரலில் பேசுவதை நிறுத்துவோம்; ஆண்களுக்கு இதைப்பற்றிச் சொல்வோம்; இதன்மூலம், அவர்கள் பெண்களுடைய உளவியலைப் புரிந்துகொள்வார்கள், அவர்களை மதிப்புடன் பார்ப்பார்கள் என்று தொடர்ந்து கூறினார் டாக்டர் மீனாட்சி.

RID 3160 DG நயன் பாடிலுடைய மனைவி ஷிகா பாடில், MHM ஒரு புதிய கருத்தாக்கம் என்றும், தன்னுடைய மாவட்டத்தில் பல வழிகளில் (மாதவிலக்குகளைக் கையாள்வதற்கான ஒரு செயல்திறன் மிக்க வழியாக மாதவிலக்குக் கோப்பையைப் பயன்படுத்தும் கருத்தாக்கம் உள்பட) இந்தப் பிரச்னையைக் கையாள்வதற்கான தெளிவை இந்தக் கருத்தரங்கம்

புகைப்படங்கள்: ஜெய்ப்ரீ

பயிற்சி முகாம் ஆதரவாளர் கிஷோர் லுல்லா மற்றும் அவர் மனைவி சுனிதா
D 3170 DG *கிரீஷ் மசூர்க்கரிடம்* TRF-*விற்கு* `*5 லட்சம் காசோலையை வழங்குகிறார்.*

தனக்குத் தந்துள்ளது என்றும் ஒப்புக்கொண்டார்.

கிராமப்புற மக்களுக்கு இது பற்றிய கல்வியை வழங்குவதில் RCCக்களு டைய பங்கும் சுட்டிக் காட்டப்பட்டது. RCC உறுப்பினர்கள் இன்னும் மேம்பட்ட அணுகலைக் கொண்டுள்ளார்கள், மக்களுடன் ஒரு நல்ல உறவைப் பகிர்ந்து கொள்கிறார்கள், குறிப்பாகக் கிராமவாசிகளுடன். இதன்மூலம், அவர்களுடைய செய்திகள், ஆலோசனைகள் மக்களால் உடனே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ரோடராக்டர்களாகவும் உள்ள இவர்கள், பெண்கள்மத்தியில் MHM திட்டத்துக்கான நல்ல தூதுவர்களாக இருப்பார்கள் என்றார் நிகழ்ச்சியை நடத்திய சங்கத்தின் உறுப்பினர் டாக்டர் கீதா.

மாதவிலக்குப் பிடிப்புகளை எளிதாக்கும் மருந்துகளைப்பற்றிய தெளிவை மகப்பேறு மருத்துவ வல்லுனர் டாக்டர் ஃபாத்திமா அஹமத் வழங்கினார். நான் இந்த மருந்துகளைப் பரிந்துரைத்தாலும், இந்த மருந்துகளை எடுத்துக் கொள்வதுபற்றிப் பல மக்களுக்குப் பலவிதமான தயக்கங்கள் உள்ளன. இதைச் சாப்பிட்டால் குழந்தை பிறக்காது என்பதுபோன்ற தவறான நம்பிக்கைகள் பெருகியுள்ளன. மாதவிலக்குப் பிடிப்புகளால் பெண்கள் பள்ளிக்குச் செல்லாமல் இருந்துவிட வேண்டியதில்லை என்றார் அவர்.

மத விழாக்களின்போது, மருந்துகளைப் பயன்படுத்தி மாதவிலக்குச் சுழற்சியைத் தள்ளிப்போடும் பழக்கம் நடைமுறையில் உள்ளதை ஓர் ஆசிரியர் குறிப்பிட்டபோது, பார்வையாளர்களும் அந்த விவாதத்தில் கலந்துகொண்டார்கள். இந்தக் காலத்தில் இப்படியொரு பழக்கம் ஏன்? இது ஓர் உயிரியல் செயல்முறை, மதச் செயல்பாடுகளில் இது குறுக்கிடவேண்டியதில்லை என்கிற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டிய நேரமல்லவா இது? என்றார் அவர்.

DGE சங்க்ரம் பாடிலுடைய மனைவி உத்கர்ஷா பாடில், MHM விழிப்புணர்வைப் பரப்புவதில் இன்னர் வீல் தலைவர் என்றமுறையில் தனக்குக் கிடைத்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். எங்கும் உள்ள பெண்கள் மத்தியில் ஒரு செயல்திறன்மிக்க தாக்க த்தை உண்டாக்கவேண்டுமென்றால், இன்னர் வீலுடன் ரோட்டரி கை கோக்கவேண்டும் என்றார் அவர்.

திரும்பத் திரும்பப் பயன்படுத்தக் கூடிய Sanitary Padsஐப் பெண்கள், சிறுமிகள் மத்தியில் விநியோகிப் பதற்கான பெருநிறுவன ஆதரவை ரோட்டரி எடுத்துக்கொள்ளலாம்; இதன்மூலம் சுகாதாரமான மாதவிலக்கு மேலாண்மை உறுதியாகும் என்று ஆலோசனை தெரிவித்தார் டாக்டர் மீனாட்சி.

மாதவிலக்குபற்றிய விழிப்புணர்வு இல்லாததால், பல பெண்கள் மாதவிலக்கு நேரத்தில் பள்ளிக்குச் செல்லாமல் இருந்துவிடுகிறார்கள் என்றும் இதுபோன்ற கருத்தரங்குகள் அதிகம் நடைபெற்றால், சரியான செய்தியைப் பரப்புவதற்கு அது உதவும் என்றும் நிகழ்ச்சி தலைவர் ரேணுகா சாலுங்கெ குறிப்பிட்டார். நாங்கள் குறைந்தது 10,000 பெண்களைச் சென்றடைய விரும்புகிறோம் என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

இந்தப் பயிலகத்துக்கு RC சங்க்லி உறுப்பினர்களில் ஒருவரான கிஷோர் லுல்லா ஆதரவளித்திருந்தார். நிகழ்ச்சியின்போது, TRFக்கான ரூ.5 லட்சம் காசோலையை அவர் DG மசூர்கரிடம் வழங்கினார்.

துணை ஆளுநர் சஞ்சய் இங்காலெ நன்றியுரை வழங்கினார்.■

Rotary
PEOPLE OF ACTION

இன்டராக்டர்களால் ஊக்கம் பெற்ற ரோட்டரியினர்

ஜெய்ஸ்ரீ

இன்டராக்ட் தலைவர் தரணீதரன் போலியோ நிதிக்கான காசோலையை PDG சின்னதுரை அப்துல்லாவிடம் வழங்குகிறார். PDG K ராஜகோபால் அவர்களும் உடன் உள்ளார்.

IPDG சின்னதுரை அப்துல்லா, ராமநாதன் செட்டியார் நகராட்சி உயர்நிலைப் பள்ளி (RMHS) மாணவர்களிடம் இளம்பிள்ளைவாத நிதிக்கு ரூ.1 அளிக்குமாறு கோரியபோது, அந்த நிகழ்ச்சியில் இதன்மூலம் ரூ.76,000 (1,070) திரட்டப்படும் என்று அவர் எதிர்பார்த்திருக்கமாட்டார். அப்துல்லா ARRFCயாக இந்தப் பள்ளியின் புதிய இன்டராக்ட் சங்கத்தின் தொடக்க நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கினார். 1,300 மாணவர்களைக் கொண்ட இந்தப் பள்ளி ரூ.1,500 பங்களித்தால், அதேபோன்ற ஒரு தொகையைத் தானும் பங்களிப்பதாகவும், அந்தப் பங்களிப்பு இன்டராக்ட் சங்கத்தின் பெயரில் இளம்பிள்ளைவாத நிதிப் பங்களிப்பாக வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார். ஆனால், ரோட்டரியன்கள் வியந்துநிற்கும்படி, இன்டராக்ட் வல்லுநர்கள் ரூ.35,000 திரட்டினார்கள். புதிய சங்கம் என்ற முறையில், எங்களுடைய முதல் பணியைப்பற்றி நாங்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தோம். சின்னதுரை ஐயா எங்களிடம் இளம்பிள்ளை வாதத்தைப்பற்றிப் பேசினார்; இந்தியாவில் இளம்பிள்ளைவாதத்தை அழிப்பதில் ரோட்டரி எப்படி ஒரு முக்கியப் பங்காற்றியது என்று விளக்கினார். அவருடைய பேச்சால் ஊக்கம் பெற்ற நாங்கள் இரு குழுக்களை அமைத்தோம், அனைத்து வகுப்புகளுக்கும் சென்றோம். நாங்கள் மாணவர்களிடம் இளம்பிள்ளை வாதத்தைப்பற்றிப் பேசினோம், உலக அளவில் இந்த நோயை அழிக்க நிதி கோரினோம். எங்கள் நண்பர்கள் அவர்களால் இயன்ற அளவு பங்களித்தார்கள்; நாங்கள் திரட்டிய தொகையை எண்ணிப்பார்த்தபோது, நாங்கள் வியந்தோம், முதல் முயற்சியிலேயே இந்தப் பெரிய தொகையைத் திரட்டியதை எண்ணி மகிழ்ந்தோம் என்கிறார் IX வகுப்பு மாணவர், RC காரைக்குடி பேர்ல் சங்கமம், RID 3212ஆல் ஆதரிக்கப்படும் RMHS இன்டராக்ட் சங்கத்தின் தலைவரான தரணீதரன்.

பள்ளித் தலைமை ஆசிரியரான பீட்டர் ராஜா, தாய் ரோட்டரிச் சங்கத் தலைவரும் ஆவார். அவரும், இன்னோர் உறுப்பினரான PAG முத்துக்குமாரும் இன்டராக்டர்களுக்கு தங்களுடைய பங்களிப்புகளின் மூலம் ஊக்கமளித்தார்கள்.

இக்கதை இங்கு முடியவில்லை. இன்டராக்டர்கள் தங்களுடைய திரட்டலை ARRFC அப்துல்லாவிடம் வழங்கியபோது, ரோட்டரியன்கள் சூழ்நிலைக் கேற்பச் சிறப்பாகச் செயல்பட்டுத் தங்களுடைய பங்கை வழங்கினார்கள். இதன் மூலம் மொத்தத் தொகை ரூ.48,000 ஆனது. அப்துல்லா அதற்கு இணையான ஒரு தொகையைத் தந்தார், இந்தக் கூட்டு முயற்சியின்மூலம் கிடைத்த மொத்தத் தொகையான ரூ.96,000 TRFன் இளம்பிள்ளைவாத நிதிக்கு வழங்கப்பட்டது.

ஆர்வம் கொண்ட இந்த இன்டராக்டர்கள், இப்போது பெரிய அளவில் ஒரு பசுமைத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்துவருகிறார்கள்; இந்தத் திட்டத்தின்படி, பள்ளி வளாகத்திலும் அவர்களுடைய வீட்டின் அக்கம் பக்கங்களிலும் உள்ளூர்ச் செடிகளை நடத்திட்ட மிட்டுள்ளார்கள்.■

சிறப்புக் குழந்தைகளுக்கான ஆண்டு விழாவைத் தொடர்ந்து 19 ஆண்டுகளாக நடத்திவரும் ரோட்டராக்ட் சங்கம்

ரஷீதா பகத்

ஆகாஷ் ரோட்டராக்ட் சங்கத்துக்கு ஒரு மிகச் சிறந்த பரிசு தரப்படவேண்டும். ஏனெனில், RC சென்னைக் ஃபோர்ட், RID 3232, ஆதரவுடன் இயங்கிவரும் இந்தச் சங்கம் ஓர் அரிய சாதனையை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது.

இந்தச் சங்கத்தில் 45 உறுப்பினர்கள் உள்ளார்கள்; இவர்களில் பெரும் பாலானோர் இளம் தொழில் வல்லுனர்கள்; இந்திய அளவில் இவ்விதத்தில் அமைந்த மிகச்சில ரோட்டராக்ட் சங்கங்களில் இதுவும் ஒன்று.

24 ஆண்டுகளுக்குமுன்னால் அமைக்கப்பட்ட இந்தச் சங்கம், தொடர்ந்து பல ஆண்டுகளாகச் சென்னையில் ஓர் ஆண்டுவிழாவை நடத்திவருகிறது. பலரால் மிகவும் விரும்பப்படும் இந்த நிகழ்வு, சமீபத்தில் 19வது ஆண்டாக நடைபெற்றது. உடலளவிலும் மனத்தளவிலும் பாதிப்பைக் கொண்ட மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் தங்களுடைய திறமையைக் காட்டும் ஒரு தளத்தை இந்த விழா வழங்குகிறது.

வழக்கம் போல் இந்த ஆண்டும் இந்த விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழா நாளாகிய அக்டோபர் 12 அன்று, சென்னையிலுள்ள, மூத்த மாணவர்களுக்கான ஆசான் நினைவு மேல்நிலைப்பள்ளியில் பல செயல்பாடுகள் நிறைந்திருந்தன, எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சியான விளையாட்டுகள், எல்லாத் திசையிலும் ஆனந்தம் பரவியிருந்தது.

காரணம், நகரிலுள்ள, சிறப்புக் குழந்தைகளுக்கான வெவ்வேறு பள்ளிகளிலிருந்து 600 இளம் பார்வையாளர்கள்

இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் பாடுவதற்காகவும், ஆடுவதற்காகவும், படம் வரைவதற்காகவும், எல்லாவிதமான செயல்பாடுகளையும் விளையாட்டுகளையும் நிகழ்த்து வதற்காகவும் வந்திருந்தார்கள், சுருக்க மாகச் சொன்னால் மகிழ்ச்சியாக நேரம் செலவிட வந்திருந்தார்கள்.

'புன்னகை' என்ற அழகான தமிழ்ப்பெயரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைப்பற்றி ரோட்டராக்ட் சங்கத் தலைவர் பூர்ணிமா சுந்தரராமனிடம் கேட்டபோது, ஓரிரு தகவல்களும் சில மிகச்சிறந்த புகைப்படங்களும் கிடைத்தன. மேலும் தகவல்களுக்காக, இந்தச் சங்கத்தின் ஃபேஸ்புக் பக்கத்துக்கு நான் சென்றேன். அங்கு, இரண்டு புகைப்படங்களும் ஒரு வீடியோத் துண்டும் என்னுடைய கவனத்தை ஈர்த்தன.

அவற்றில் ஒன்று, பூக்கோலம், அதாவது, பூக்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட கோலம். சிவப்பு, மஞ்சள், பச்சை, ஆரஞ்சு போன்ற துடிப்பான வண்ணங்களால் இந்தக் கோலம் வரையப்பட்டிருந்தது. அதன் தலைப்பு, என்னைக் காப்பாற்றுங்கள்''.

நம்முடைய இந்தியாவைத்தான் கோலமாக வரைந்திருக்கிறார் இந்தக் குழந்தைக் கலைஞர். அவர் காப்பாற்ற விரும்புவதும் இந்தியாவைத்தான்.

இன்னொரு படைப்பின் தலைப்பு, 'இயற்கையைக் காப்பாற்றுங்கள், பூமியைக் காப்பாற்றுங்கள்'. சுற்றுச்சூழல்பற்றி இளம் தலைமுறையினர் மனத்தில் இருக்கும் கவலைகள் இந்த இரு படங்களின்மூலம் நன்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நான் குறிப்பிட்ட வீடியோவில், காலொன்றை இழந்த இளைஞர் ஒருவர் மேடையில் மிகச்சிறப்பாக நடனமாடுகிறார்; நளினமான அசை வுகளை நிகழ்த்திக்காட்டுகிறார்; அவருடைய தன்னம்பிக்கையும் ஆட்டப்பாணியும் நம்மை வியக்கவைக்கின்றன!

தற்போது USல் இருக்கும் பூர்ணிமா, இந்தக் குழுவில் 45 உறுப்பினர்கள் உள்ளதாகவும், அதில் 30 பேர்தான் உண்மையில் சுறுசுறுப்பாகச் செயல்படுகிறார்கள் என்றும் கூறுகிறார். புன்னகை என்பது, ஆண்டுதோறும் நடைபெறுகிற ஒரு நிகழ்வு; இதில் இந்தச் சங்கத்தின் ரோட்டராக்டர்கள் முழுமையாக ஈடுபடுகிறார்கள். நகரில் உள்ள வெவ்வேறு பள்ளிகளிலிருந்து சுமார் 500 முதல் 600 குழந்தைகள் இந்த நிகழ்வுக்காக வருகிறார்கள் என்கிறார் சங்கச் செயலாளர் அர்ஜுன் S.

நாள்முழுவதும் நடைபெறும் இந்த நிகழ்வின்போது, குழந்தைகள் அனைவரும் எங்களுடைய பொறுப்பில் இருப்பார்கள். வெவ்வேறு பள்ளிகளிலிருந்து குழந்தைகளை அழைத்துக்கொண்டு வருவது, அவர்களுக்குக் காலை

உணவு, மதிய உணவு வழங்குவது, ஹை-டீ எனப்படும் தேநீர் விருந்து வழங்குவது, மீண்டும் அவர்களைப் பாதுகாப்பாக அவர்களுடைய பள்ளிகளுக்கு அழைத்துச்செல்வது என அனைத்தும் எங்களுடைய பணிகள். இதையெல்லாம் செய்யும்போது, குழந்தைகள் முகத்தில் இருக்கும் புன்னகையைத் தொலைத்து விடக்கூடாது; அதுவும் எங்களுடைய பொறுப்புதான் என்கிறார் இவர்.

இதைக் கல்லூரி அடிப்படையிலான சங்கம் என்று சொல்வதைவிட, சமூக அடிப்படையிலான சங்கம் என்று சொல்வது தான் சரியாக இருக்கும். இதன் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் பணிக்குச் செல்கிறவர்கள். பூர்ணிமா ஒரு தரவு ஆய்வாளர், அர்ஜுன் ஒரு பெருநிறுவனத்தில் பணிபுரிகிறார்.

ஒவ்வோராண்டும், இந்த நிகழ்வைத் தாங்கள் பிரமாண்டமானமுறையில் ஏற்பாடு செய்வதாகவும், இந்த ஆண்டு நிகழ்ச்சிக்கான செலவு ரூ.4 லட்சம் என்றும் இவர் சொல்கிறார். பெருநிறுவன ஆதரவுகள் மற்றும் ரோட்டரியன்களுடைய நன்கொடைகளின் வழியாக நாங்கள் இந்தப் பணத்தைத் திரட்டினோம் என்கிறார் அர்ஜுன்.

உடலளவில் பாதிக்கப்பட்டவர்கள், மனத்தளவில் பாதிக்கப்பட்டவர்கள் என இருவகையான மாற்றுத் திறனாளிகளும் இந்த ஒருநாள் பண்பாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்கள் என்று தொடர்ந்து கூறுகிறார் பூர்ணிமா. ஒவ்வோராண்டும், இந்த நாளில் நாங்கள் இந்தக் குழந்தைகளுக்கு ஒரு தளம் அமைத்துக் கொடுக்கிறோம்; அங்கு அவர்கள் விருப்பம்போல் ஆடலாம், பாடலாம், மகிழ்ச்சியாக நேரத்தைச் செலவிடலாம். இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் குழந்தைகள் இசை, நடனம், ஓவியம், ரங்கோலி/கோலம், இன்னும் பலவிதமான நிகழ்ச்சிகளைப் படைப்புணர்வுள்ள மற்றும் புதுமைச்சிந்தனையுள்ள ஒருமுறையில் விதவிதமாக நிகழ்த்திக்காட்டுகிறார்கள். அவர்கள் தங்களுடைய திறமைகளை உலகுக்குக் காட்டுவதற்கான,

பள்ளிகளுக் கிடையிலான ஒரு தளத்தை இது வழங்குகிறது. இதன் மூலம் அவர்களுடைய மன உறுதி மேம்படுகிறது, அவர்களுடைய படைப்பு உணர்வு தூண்டப்படுகிறது என்கிறார் இவர்.

ஒரே ஒரு ரோட்டராக்ட் சங்கம் ஒரு திட்டத்தை 19 ஆண்டுகளாக ஊட்டி வளர்த்து நீடிக்கச்செய்திருக்கிறது என்பது வியப்புதான். அதைவிட வியப்பான இன்னோர் உண்மை,

கலை, பண்பாட்டு உலகைச் சேர்ந்த முன்னணித் திறமையாளர்களை இவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு அழைக்கிறார்கள், அந்த ஆளுமைகள் இந்தக் குழந்தைகளுடைய திறமையைக் காணும்போது, வருங்காலத்தில் இந்தக் குழந்தைகளுக்கு இன்னும் பெரிய ஒரு தளத்தை, ஒரு வாழ்வாதாரத்தைக்கூட அவர்களால் வழங்க இயலலாம்.

பூர்ணிமா தொடர்ந்து சொல்கிறார், எங்களுக்கும் சரி, குழந்தைகளுக்கும் சரி, இந்த நிகழ்ச்சி மிகவும் பொருளுள்ளது, மிகவும் பிடித்திருக்கிறது. இதனால், புன்னகையை மற்ற நகரங்களுக்கும் கொண்டுசெல்லவேண்டும், அதன் மூலம் இன்னும் அதிகச் சிறப்புக் குழந்தைகளுக்கு இந்தத் தளம் கிடைக்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

சமூக சேவையில் மிகுந்த ஆர்வத்தைக் கொண்டுள்ள இந்த ரோட்டராக்ட் சங்கம் இன்னும் சில சிறப்பான நிகழ்வுகளையும் நடத்திவருகிறது. அவற்றில் சில: சங்கமம் என்ற பெயரில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள்மத்தியில் தலைமைப் பண்புகளை வளர்ப்பதற்கான ரைலா-போன்ற ஒரு திட்டம், கிராமப்புறக் குழந்தைகளுக்கான ஒரு விளையாட்டுப் போட்டித்தொடர்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

இல்லம் தேடி வரும் கண் பராமரிப்பு

ஜெய்ஸ்ரீ

RC கிண்டி, RID 3232, அதன் வெள்ளி விழா ஆண்டைக் கொண்டாடுகையில், உறுப்பினர்கள் தங்கள் திட்டமான சைட்நௌ குறித்து உற்சாகமாக உள்ளனர், இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 900 கண்புரை அறுவை சிகிச்சைகளுக்கு நிதியுதவி செய்ய 87,500 டாலர் மதிப்புள்ள உலகளாவிய மானிய திட்டமாக தொடங்கப்பட்டது. RC நைல்ஸ் ஃப்ரீமாண்ட், RID 5170, US மற்றும் TRF சர்வ தேச பங்காளர்களாகும், மற்றும் செயல்படுத்தும் மருத்துவ மனையாக சங்கர் நேத்ராலயா உள்ளது. IIT-மெட்ராஸால் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இரண்டு வாகனங்கள், மருத்துவ வசதிகள் இல்லாத கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு சிகிச்சையளிக்க பயன்படுத்தப்படுகின்றன.

நாகம்மாள் (65) காஞ்சிபுரம் அருகே மலர் விற்பனையாளராக உள்ளார். கடந்த ஒரு வருடமாக அவரது இரு கண்களிலும் கண்புரை இருந்ததால் அவர் வீட்டிலேயே அடைபட்டு, எல்லாவற்றிற்கும் தன் மகனின் குடும்பத்தை நம்பியிருந்தார். என்னை இந்த பஸ்ஸில் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றபோது, நான் மிகவும் பதற்றமடைந்தேன். ஆனால் இப்போது, இந்த ரோட்டரியினருக்கு நன்றி, என்னால் மீண்டும் வேலைக்குச் செல்ல முடிகிறது, சுயமாக என்னைக் கவனித்துக் கொள்ள முடிவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், அவர் மல்லிகை பூக்களை கட்டிக்கொண்டே இவ்வாறு கூறுகிறார்.

காஞ்சிபுரத்தில் சுமார் 120 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன; அடுத்தது கடலூர். நாகப்பட்டினத்தில், உள்ளூர் ரோட்டரி கிளப், RC நாகப்பட்டினம், RID 2981, உடன் இணைந்து 10 நாட்கள் கண் முகாம் நடத்தினோம். இதில் 1,000 நோயாளிகள் பயன் பெற்றனர், என்றார் கிளப் தலைவர் R சிவராமன்.

சுமார் 150 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன, மேலும் ஆண்டு இறுதிக்குள் 457 அறுவை சிகிச்சைகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளன, என்றார்.

இரண்டு பேருந்துகள்-ஒன்று நோயாளிகளைத் பரிசோதிப்பதற்கும், மற்றொன்று உள்ளமைக்கப்பட்ட ஆபரேஷன் தியேட்டருடன்-முகாம் உள்ள இடத்திற்கு டாக்டர்களுடன் இயக்கப்படுவதாக கிளப்பின் வெகுஜன தொடர்பாளர் பதிவியில் இருக்கும் என்று கிருத்திகா மதுகுமார் கூறுகிறார்.

லேசர் சிகிச்சையின் மூலம் கண்புரை அகற்றப் படுகிறது. பொதுவாக ஒரு அறுவை சிகிச்சைக்கு ரூ.30,000–40,000 வரை செலவாகும். ஆனால் ரோட்டரியில் இது 5,750 ரூபாய் மானிய கட்டணத்தில் உள்ளது. இந்த திட்டம் ஆந்திரா மற்றும் கர்நாடகாவின் பகுதிகள் உட்பட 600–700 கி.மீ சுற்றளவில் பயனாளிகளை உள்ளடக்கியது. அறுவை சிகிச்சைக்கு பின், மீண்டும் பரிசோதனை செய்ய ஒரு கண் மருத்துவர்கள் குழு ஒரு வாரம் கழித்து இப்பகுதிக்கு செல்கிறது.

க்ராம்படன் கிரீவ்ஸின் ஆதரவோடு, செயல்படாத பள்ளியை RC கிண்டி உயர்நிலைப் பள்ளியாக கிளப் மாற்றியுள்ளது. 2009ம் ஆண்டில் நிறுவப்பட்ட தொழிற்பயிற்சி மையம். இந்த 25 வருடங்களில் இச்சங்கம் ஒரு பள்ளிக்கூடத்தை சரி செய்துள்ளது. மேலும், தொழிற்பயிற்சி மையம் ஒன்றை நிறுவியுள்ளது. கொட்டிவாக்கத்தில் சங்கத்தின் பல மருத்துவமனையில் 20,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் பயன் பெற்றுள்ளனர் என்கிறார் சங்கத்தலைவர்.■

RC கிண்டி தலைவர் R சிவராமன் நாகப்பட்டிணம் கண் பரிசோதனை முகாமில் DG G சந்திரமோகன் (D 3232) மற்றும் N மணிமாறன் (D 2981) முன்னிலையில் பேசுகிறார்.

பொன்விழா ஆளுநர்

அனிஷ் ஷா, பாலிமர்ஸ் விநியோகிப்பாளர்

RC பல்சார், RID 3060

இவர் ஓர் இரண்டாம் தலைமுறை ரொட்டேரியன். இவருடைய தந்தை ப்ரத்யுமன் ஷா, 40 ஆண்டுகள் ரொட்டேரியனாக இருந்தவர். இவருடைய தாய் ஹன்ஸாபென் 1987–88ல் மாவட்ட இன்னர் வீல் தலைவராகப் பணியாற்றியவர்.

"80களில் நான் என் தந்தையுடன் சங்கக் கூட்டங்களுக்குச் சென்று வந்து கொண்டிருந்த போது, ஆனெட் என்றமுறையில், மிக இளைய PRIP கல்யாண் பேனர்ஜியைப் பார்த்த நினைவிருக்கிறது என்கிறார் அனிஷ் ஷா. தொடர்ந்து, ஆளுநர்களின் வரிசை முழுவதும் தன்னுடைய தந்தைக்குத் தெரிந்திருந்ததையும் சொல்கிறார்.

2010ல் அவர் இறந்தபோது, இறுதிச்சடங்குக்கு PRIP பேனர்ஜி (அவரை நான் மாமா என்றும் பினோடாடியை அத்தை என்றும் அழைப்பேன்) வந்திருந்தார். அப்போது அவர் RIPEயாக இருந்தார். ஆளுநர் என்ற முறையில் என் தந்தை அவருடைய போட்டியாளர் என்று அவர் சொல்வார். அதேபோல், PRID மனோஜ் தேசாயும் எங்கள் குடும்பத்துக்கு நெருக்கமானவர்.

இவருடைய தந்தை ஆளுநராகவேண்டும் என்ற இலக்கைக் கொண்டிருந்தார்; தந்தையின் கனவை நனவாக்குவதை எண்ணி ஷா மகிழ்கிறார்.

தன்னுடைய மாவட்டம் பொன்விழாவைக் கொண்டாடுவதை எண்ணி அவர் மகிழ்கிறார்; இந்த ஆண்டுக்காக, ரூ.100 கோடி மதிப்புள்ள 5,000 சேவைத் திட்டங்களுக்கு வரிசையாக ஏற்பாடுசெய்துள்ளார். இதுவரை நாங்கள் 1,500 திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம், குறைந்தபட்சம் 15 லட்சம் மக்கள் இவற்றால் பலன்பெற்றுள்ளார்கள். நாங்கள் தாய் மற்றும் சேய்ப் பராமரிப்பு, WinS மற்றும் எழுத்தறிவில் கவனம் செலுத்துகிறோம்.

அவருடைய மாவட்டத்தில் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 4,045ஆக உள்ளது; இந்த ஆண்டு நிறைவுக்குள் இதை 5,000ஆக அதிகரிக்க இயலும் என்று அவர் நம்புகிறார். சங்கங்கள் 600 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளன; ஆனால், அவர்கள் "என் ரோட்டரி"யில் இன்னும் பதிவுசெய்யப்படவில்லை.

TRF பங்களிப்புக்கான அவருடைய இலக்கு, $1.5 மில்லியன். பங்களிப்பைப் பொறுத்தவரை, ரொட்டேரியன்களில் 100 சதவிகிதப் பேரும் இதில் பங்கேற்கவேண்டும் என்ற இலக்குடன் நான் செயல்படுகிறேன். சென்ற ஆண்டு, வெறும் 39 சதவிகித ரொட்டேரியன்கள்தான் TRFக்குப் பங்களித்தார்கள். இப்போதெல்லாம் ஒருவர் குடும்பத்துடன் வெளியில் சென்று இரவு உணவு சாப்பிடுகிறார் என்றாலே குறைந்தபட்சம் $25 செலவாகிவிடுகிறது என்கிறார் அவர், ஒவ்வோர் உறுப்பினரும் அந்தக் குறைந்தபட்சத் தொகையை நன்கொடையாக அளித்தாலே போதும், நம்முடைய மாவட்டம் சாதனைகளைத் தாண்டிய சாதனை படைத்துவிடும்.

அவருடைய மனைவி ஸ்வாதி, RC வல்சாதைச் சேர்ந்த ரொட்டேரியன், விரைவில் அந்தச் சங்கத்தைத் தலைமையேற்று நடத்தும் நம்பிக்கையுடன் உள்ளார். ■

ஆளுநர்களுடன் சந்திப்பு

ஜெய்ஶ்ரீ

பசுமை ரொட்டேரியனுடைய நீண்ட பயணம்

ரஞ்சீத் சிங் சைனி, மின் பொருட்கள் RC ராய்ப்பூர் ராயல், RID 3261

இவர் 1996ல் ரோட்டரியில் இணைந்தார். தன்னுடைய மாவட்ட எண்ணோ, சங்கத்தின் பெயரோ கூடத் தெரியாத ஒரு பசுமை ரொட்டேரியன் நிலையிலிருந்து தொடங்கி, இன்று ஆளுநராகப் பதவியேற்பது வரை தனக்குள் நிகழ்ந்திருக்கும் மாற்றங்களை ரஞ்சீத் சிங் சைனி நினைவுகூர்கிறார்.

இவர் தன்னுடைய தேனிலவுப் பயணத்துக்காக டார்ஜிலிங் சென்றிருந்தபோது இவருடைய மனைவி ரஜ்ஜோவுடன் கைவினைப்பொருட்கள் கடையொன்றுக்குச் சென்றிருந்தார்கள். அங்கிருந்த சுவரில் ஒரு நான்கு-வழிப் பரிசோதனைச் சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்ததைப் பார்த்தார் இவர். கடைக்காரரிடம், “நீங்கள் ரொட்டேரியனா?” என்று கேட்டார். மகிழ்ச்சியடைந்த கடைக்காரர் சைனியிடம் அவருடைய சங்கத்தின் பெயரையும் மாவட்ட எண்ணையும் விசாரித்தார்.

சங்கத்துக்கு அல்லது மாவட்டத்துக்குப் பெயர் உண்டு என்ற கருத்தாக்கத்தையே நான் அதுவரை அறிந்திருக்கவில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம், நான் ஒரு ரொட்டேரியன் என்பதுதான் என்று சிரிக்கிறார் இவர். அதன்பிறகு, அந்தக் கடைக்காரர் இந்தத் தம்பதியருடைய காங்டாக் பயணத்துக்கு ஏற்பாடு செய்தார்.

ரொட்டேரியன்கள் செய்யும் களநிலைப் பணியை சைனி மிகவும் விரும்புகிறார், புகழுக்காகவோ பெயருக்காகவோ பணிகளைச் செய்யாத பின்னணி நிலை ரொட்டேரியன்கள் பலர் உள்ளார்கள். அவர்கள் சேவைத் திட்டங்களைச் செய்யக் காரணம், அவர்களுக்கு மக்கள் மீது பச்சாத்தாபம் இருப்பது தான் என்கிறார் இவர்.

12 சதவிகிதப் புதிய உறுப்பினர்களைச் சேர்த்ததன் மூலம், உறுப்பினர் எண்ணிக்கையில் தன்னுடைய மாவட்டம் சிறப்பாகச் செயல்பட்டிருப்பதை எண்ணி அவர் பெருமைப்படுகிறார். ஆனால், சில சங்கங்கள் உறுப்பினர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்துப் பதிவுசெய்வதை எண்ணி அவர் கவலைப்படுகிறார். சில உறுப்பினர்கள் 10 ஆண்டுகளாக, அல்லது அதற்கு மேலும் ரொட்டேரியன்களாக இருக்கிறார்கள்; ஆனால், அவர்களுக்கு ஒரு பதிவெண் இல்லை. இந்தப் பிரச்னையைச் சரிசெய்ய மிகச் சிறந்த வழி, ரொட்டேரியன்கள் ஒவ்வொருவரும், RI வழங்கும் பதிவெண் தங்களுக்கு வேண்டும் என்று வலியுறுத்தவேண்டும்.

TRFக்கு வழங்குதலைப் பொறுத்தவரை, இந்த மாவட்டத்தின் இலக்கு $120.000. ஆனால், நாங்கள் ஏற்கெனவே இதுவரை $300,000க்குமேல் திரட்டிவிட்டோம்.

இந்த ஆண்டுக்கான அவருடைய திட்டங்களில் சில, ரூ.4 கோடி மதிப்புள்ள கண் புரை அறுவைச்சிகிச்சைகளை நிகழ்த்துவது, ராய்ப்பூரிலுள்ள சத்ய சாய் மருத்துவமனையில் ரூ.2.9 கோடி மதிப்புள்ள அறுவைச்சிகிச்சை அரங்கத்தை அமைப்பது. இரண்டுமே பன்னாட்டு நல்கைகளின் மூலம் நிறைவேறவுள்ளன. RAHAT மருத்துவ முகாம்களை நடத்துவதும் அவருடைய பணித்திட்டத்தில் உள்ளது.

இவருடைய மனைவி ரஜ்ஜோ RC ராய்ப்பூர் க்வீன்ஸில் ஓர் உறுப்பினர்.■

ரோட்டராக்ட்டை வளர்ப்பதுதான் இவருடைய முக்கிய நோக்கம்

சஞ்சய் அக்ரவால், மின் பொருள் விநியோகிப்பாளர், RC காசி, RID 3120

ரோட்டராக்ட் இளைஞர்களுடைய வாழ்க்கைகளை வளமாக்குகிறது; இதை அனுபவித்து அறிந்து கொள்ள வேண்டுமென்றால், இளைஞர்கள் ரோட்டராக்டில் இணையவேண்டும். என்னுடைய இன்டராக்ட் மற்றும் ரோட்டராக்ட் நாட்களிலிருந்தே நான் இந்த அனுபவத்தை மிக அழகாகச் செதுக்கியுள்ளேன்; இன்றைக்கும், ஒரு ரொட்டேரியன் என்றமுறையில் நான் தொடர்ந்து பல விஷயங்களைக் கற்றுக்கொண்டுவருகிறேன்” என்று ஆர்வத்துடன் சொல்கிறார் சஞ்சய் அக்ரவால்.

1970களில் இவர் ஓர் இன்டராக்டராக இருந்தார், 1982ல் தொடங்கி 1988வரை ரோட்டராக்டராக இருந்தார், 1989ல் தன்னுடைய ரோட்டரி சங்கத்தில் இணைந்தார்.

வயது வந்தோர் எழுத்தறிவு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டை முன்னிறுத்துவதில் அக்ரவால் ஆர்வமாக உள்ளார். மின் கற்றல் வகுப்பறைகளை அமைப்பதிலும் நாங்கள் நிறைய பணிகளைச் செய்கிறோம் என்கிறார் இவர்.

ஒவ்வோர் உறுப்பினரும், குறைந்தபட்சம் ஒருவரையாவது ரோட்டரிக்கு அறிமுகப்படுத்தவேண்டும் என்று இவர் விரும்புகிறார். எங்களிடம் ஏற்கெனவே 3,478 உறுப்பினர்கள் உள்ளார்கள்; இதை இரட்டிப்பாக்க நம்மால் உறுதியாக இயலும் என்கிறார்.

TRFக்கு நிதி திரட்டுவதற்கு இவர் அமைத்திருக்கும் வியூகமும் இதே மாதிரியானதுதான்: ஒவ்வொரு ரோட்டரியனும் 100 பங்களிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டுள்ளேன்.’’ சமீபத்தில் வாரணாசியில் நடத்தப்பட்ட TRF கருத்தரங்கில் 130,000 திரட்டப்பட்டது என்று மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்கிறார் இவர்.

இவருடைய மனைவி பூனம், RC வாரணாசி வ்ரிந்தா உறுப்பினர், முன்னாள் துணை ஆளுநர். ரொட்டேரியன்களுடைய துணைவர்கள் ரோட்டரியில் இணையவேண்டும் என்று பூனம் ஊக்குவித்துவருகிறார்.■

மனிதத்தன்மை நிறைந்த திட்டங்களால் ரொட்டேரியன்கள் ஊக்கம் பெறுவார்கள்

தீரன் தத்தா, பின்னலாடை வணிகர்,
RC கிழக்கு போபால், RID 3040

இவர் இதுவரை 16 RI மாநாடுகளுக்குச் சென்றுள்ளார்; அவற்றில் ஒன்பது மாநாடுகளில் தன் மனைவி சுனிதாவுடன் இணைத் தொண்டராகச் சேவைபுரிந்திருக்கிறார். தன்னுடைய மேலங்கி 380 பதக்கங்களால் அழகுபடுத்தப்பட்டிருப்பதாகப் பெருமையுடன் சொல்கிறார் தீரன் தத்தா. ரோட்டரியில் சேர்வதற்கான ஊக்கம், எங்கள் வீட்டிலிருந்தே எனக்குக் கிடைத்தது என்கிறார். ரொட்டேரியனான இவருடைய தந்தை, இவரை இன்டராக்டிலும், பின்னர் ரோட்டராக்டிலும் சேரும்படி ஊக்கப்படுத்தினார், அதன்பிறகு, 1991ல் இவர் இந்தச் சங்கத்தில் சேர்ந்தார். இந்த அமைப்பின் பன்னாட்டுத்தன்மையையும், தேவையுள்ளவர்களுக்கு நல்லவற்றைச் செய்வதற்கு இது வழங்கும் வாய்ப்புகளையும் நான் மிகவும் விரும்புகிறேன்.''

இவர் GSE மற்றும் GFE தலைவராக இருந்துள்ளார்; இலங்கைக்கு ஓர் IYE குழுவை வழிநடத்திச்சென்றுள்ளார்.

ரோட்டரியுடைய பொதுத் தோற்றம் மேம்படும்போது, ரொட்டேரியன்கள் TRFக்குத் தாராளமாக நன்கொடையளிக்க ஊக்கம் பெறுவார்கள் என்று கருத்துத் தெரிவிக்கிறார் தத்தா. சமீபத்தில் போபாலிலும் லக்னௌவிலும் நடைபெற்ற LN4 செயற்கைக் கை, கால் முகாம்கள் நம்முடைய உறுப்பினர்களுடைய மனநிலையை மேம்படுத்தியுள்ளன. இந்த முகாம்களில் பதிவுசெய்துகொண்ட 358 பேரில் சுமார் 320 பேர் இதனால் பலன் பெற்றுள்ளார்கள். மிகச் சிறந்த இப்பணியை எண்ணி நாம் எல்லாரும் மகிழ்கிறோம். நல்ல உணர்வைத் தரும் இந்த மனநிலை, இன்னும் பெரிய சமூகத்துக்கு நன்மை ஏற்படுவதற்காக நன்கொடை அளிக்கிற பழக்கமாக மாறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.''

TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $80,000. ஒப்பீட்டளவில் MP ஓர் ஏழை மாநிலமாக இருந்தாலும், இந்த இலக்கை எட்ட இயலும் என்று நம்புகிறார். மாவட்டத்தின் உறுப்பினர் எண்ணிக்கையில் 20 சதவிகித வளர்ச்சிக்கு இவர் திட்டமிடுகிறார்; ஐந்து புதிய சங்கங்கள் மற்றும் 10 ரோடராக்ட் சங்கங்களைச் சேர்க்கவேண்டும் என்ற திட்டத்தை முன்வைக்கிறார். இதுவரை, மூன்று ரோட்டரி சங்கங்கள் பட்டயமாக்கப்பட்டுள்ளன. 40 புதிய பெண் உறுப்பினர்களைச் சேர்ப்பதும் இவருடைய செயல் திட்டத்தில் உள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளாக இந்த மாவட்டத்தில் பள்ளிக் குழந்தைகளுக்காக நடத்தப்பட்டு வரும் மிகப்பெரிய இசைப் போட்டியை எண்ணி இவர் ஆர்வமாக உள்ளார்; இந்த ஆண்டு, வெளிநாட்டிலிருந்தும் பங்கேற்பாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளதால், இந்தப் போட்டி இன்னும் சிறப்பாக அமைய விருக்கிறது.

இவருடைய மனைவி சுனிதாவும் இதே சங்கத்தில் உறுப்பினர் ஆவார்.■

வீணாகும் பொருட்களைச் சரியாகக் கையாள்வதுதான் இவருடைய கவனம்

ஷிரீஷ் கேசவன், நிர்வாகம்-பொதுத்துறை, RC க்விலான், RID 3211

கேரளத்தின் பல பகுதிகளைச் சேதப்படுத்திய 2018 வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுடைய மறுவாழ்வில் அக்கறை கொண்டுள்ளார் ஷிரீஷ் கேசவன். அப்போது தங்களுடைய வீடுகளை இழந்தவர்களுக்கு நாங்கள் இன்னும் வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறோம் என்கிறார் இவர்.

தன்னுடைய மாவட்டத்தில் எந்தப் பொருளும் வீணாகாமலிருப்பதை உறுதி செய்ய விரும்புகிறார்; இந்தப் பகுதியிலுள்ள 200 நகராட்சித் தொகுதிகளில் உருவாகும் வீணான பொருட்களை மாற்றிக் கையாளவேண்டும், அதற்காக RCCக்களைப் பெரும் எண்ணிக்கையில் பங்கு பெறச் செய்யவேண்டும் எனச் சங்கங்களை ஊக்குவிக்கிறார். இவர் கவனம் செலுத்தும் இன்னொரு விஷயம், WinS திட்டத்தின் கீழ் கழிப்பறைகளைக் கட்டுவது.

உறுப்பினர் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, கேசவன் 40 சதவிகித உயர்வுக்குத் திட்டமிடுகிறார்; ரோட்டராக்ட் மற்றும் இன்டராக்ட் சங்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் திட்டமிடுகிறார். இந்த மாவட்டத்தில் இரண்டே இரண்டு ரோட்டராக்ட் சங்கங்கள்தான் உள்ளன.

இவர் அறக்கட்டளைக்காக $10 மில்லியன் திரட்டும் இலக்குடன் செயல்பட்டுவருகிறார்.

1996 முதல் இவர் ரொட்டேரியனாக உள்ளார்; பன்னாட்டளவில் தனக்குப் பல நண்பர்களை வழங்கிய இந்த அமைப்புக்கு நன்றி தெரிவிக்கிறார்.■

புகைப்படங்கள்: K விஸ்வநாதன்;

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

On the racks

Nail in the pillow: Collection of Twisted Tales

Author : **Mohan Menon**
Publisher : **Notion Press**
Pages : **200; `299**

Shock and surprise are the riveting guns of this short story collection. While the sun is shining and the birds are singing, you are abducted and plunged into a journey through the shadowy, quirky side of human nature. Complacency goes out of the window as you are swept along helplessly.

Mohan Menon's slim volume of short stories is a page-turner and comes with a caution 'Do not Read After Dark'. All the 25 stories are relatable in terms of the scene and context in which they are set and have an unexpected twist in the end. Covered succinctly in 198 pages, these tales will leave you in a state of heightened surprise and uneasiness. Written in a simple style, the book is eminently readable.



The Lean and Happy Home

Author : **Eva Jarlsdotter**
Publisher : **Yellow Kite**
Pages : **128; `399**

In seven simple steps this book will help you remove waste: wasted money, energy and resources give you the gift of time. The book lists a set of principles embraced by the most creative and dynamic organisations around the world, and for the first time, Swedish social entrepreneur Eva Jarlsdotter applies them to family life.

Embracing the Japanese 'stream' technique, the author shows you how to systematically create and maintain order. From *kaizen* (continuous improvement) to *kanban* (visual planning), these principles will bring harmony and a sense of flow to your home. No more time wasted searching for your keys, important paperwork or your internet banking password; no more throwing away food past its shelf life or arguing about the mess; no more feeling on the backfoot all the time. This transformative book will also empower children to take responsibility for their belongings and follow their schedules, thus lessening the burden on parents.



Pangat, a Feast: Food and Lore from Marathi Kitchen

Author : **Saee Koranne-Khandekar**
Publisher : **Hachette India**
Pages : **360; `599**

Bringing together over 200 traditional recipes, this enriching book introduces food enthusiasts to special masalas, cooking techniques and elaborate meal spreads using a range of produce. Its delightful stories and anecdotes vividly detail the characteristic food traits of the several communities that inhabit the region.

From the deeply-spiced Kolhapuri mutton *sukka* to the tamarind-based *thecha*, from a never-fail formula for frying fish to the wholesome *chakolya* 'pasta' and variants of *karanji*, the recipes in this book will at once enhance your culinary skills and palate.

In this delectable compendium of recipes and stories, culinary researcher Saee Koranne-Khandekar debunks the myths surrounding the foods of Maharashtra and reveals the versatility and sheer variety of its food traditions.

Endorsed by noted food writer Kunal Vijayakar and celebrated chef Ranveer Brar, the book is a treasure trove on the traditional recipes of the region.

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

நல்ல உணர்வு, வலிமையான உணர்வு

பரத் - ஷலன் சஹூர்

நேற்று, உங்களுடைய செவிப்புலன் வயது என்ன? என்பதை க்ளிக் செய்து பார்த்தேன். உங்களுடைய செல் ஃபோனுக்கும் அது வந்திருக்கலாம். நீங்கள் அதை க்ளிக் செய்யவேண்டும். உடனே, ஒரு புலம்பல் சத்தம் கேட்கும். அதைக் கேட்டதும், நீங்கள் மீண்டும் அதை க்ளிக் செய்யவேண்டும். உடனே, அந்தச் சத்தம் நின்றுவிடும். மறுவிநாடி, உங்களுடைய செவிப் புலன் வயது திரையில் தோன்றும். என்னுடைய திரை இப்படிச் சொன்னது: 52. என் வயது 65 என்பதால், இதைப் படித்ததும் என் முகத்தில் ஓர் அகன்ற சிரிப்பு தோன்றியது. அவர்கள் என்னை எளிதில் ஏமாற்றியிருக்கலாம்; ஆனால், அந்த விடை எனக்குப் பிடித்திருந்தது.

பணத்தால் மகிழ்ச்சியை வாங்க இயலாது. ஆனால், செயலிகளால் உங்களை மகிழ்ச்சியாக உணரச்செய்ய இயலும். வளமை, மன முழுமை போன்றவற்றைப்பற்றி ஆங்காங்கே பெரிய அளவில் நடத்தப்படுகிற பயிற்சிவகுப்புகளும் அப்படிதான். மக்கள் மிகவும் அழுத்தத்தை அனுபவிக்கிறார்கள், மிகவும் தொலைந்து போயிருக்கிறார்கள், மிகவும் துன்பத்தில் இருக்கிறார்கள், ஆகவே, ஒரு நாள் தியானம், மனத்தை மாற்றும் உறுதிமொழிகள், தங்களுடைய பழைய வாழ்க்கைகளுக்குத் திரும்பச்செல்வது, தங்களுடைய முடக்கப்பட்ட சக்கரங்களைத் திறப்பது போன்றவற்றுக்காக நல்ல பணத்தைச் செலவழிக்கத் தயாராக இருக்கிறார்கள் பல நேரங்களில், அந்தச் செயல் முறைகளுக்கு அவர்கள் திரும்பி வருகிறார்கள், அதன்மூலம் தங்கள் மகிழ்ச்சியைப் பெருக்குகிறார்கள், அல்லது, மீண்டும் திரும்பி வந்துவிட்ட சோகத்தைக் குறைக்கிறார்கள்.

வழக்கமான உளவியல், மருந்துகளுடன் இத்தனை உத்திகள் முளைத்திருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. என்னுடைய வழிகாட்டியான ரெவரன்ட் நார்மன் வின்சென்ட் பீலெதான் நேர்விதச் சிந்தனையின் ஒரே ஆசிரியர் என்று நான் எப்போதும் நினைத்திருந்தேன்; இப்போது, 19 ஆண்டுகளுக்கு முன் உலகுக்கு நேர்வித உளவியலை அறிமுகப்படுத்திய Dr மார்ட்டின் செலிக்மன் என்ற உளவியலாளரைப்பற்றிக் கேள்விப் பட்டு நான் மகிழ்கிறேன். நல்ல மருத்துவர் மகிழ்ச்சியை நம்புகிறார்; மகிழ்ச்சிபற்றிய ஆய்வுகள் ஒரு தனித் துறையாக உருவாகியுள்ளன; அந்த ஆய்வுகளை உளவியலுடன் இணைத்து விடக்கூடாது. மகிழ்ச்சி என்பது நலன் தொடர்பானது, நிறைவு தொடர்பானது, ஒருவிதமான மலர்ச்சியுணர்வும்கூட. ஒவ்வொரு நாளும், வாழ்தல் எளிதாக இருக்க வேண்டும்.

உளவியல் என்பது மாத்திரைகள், அறிவாற்றலை மீளமைத்தல் போன்றவை தொடர்பானது; ஆனால், நேர்வித உளவியல் இன்னும் பரந்த ஒரு பார்வையைக் கொண்டிருக்கிறது. ஒருவர் தன்னுடைய கடந்தகாலத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும், எதிர் காலத்தை நினைத்து நம்பிக்கையோடு இருக்கவேண்டும், நிகழ்காலத்தில் நலனில் காலூன்றியிருக்க வேண்டும் என அது ஊக்குவிக்கிறது.

வலிமையாக இருப்பதைவிட, வலிமையாக உணர்வது தான் நம்மைச் செயல்படச்செய்கிறது. வலிமை என்பது, உங்களுடைய தன் முனைப்பை நுண்ணியதாக அல்லது சிறியதாக ஆக்கும் திறமை, நிலைமை சிறப்பாக இல்லாத போது புகார் சொல்லாமலிருத்தல், நிலைமை சிறப்பாக இருக்கும்போது ஆணவம் கொள்ளாமலிருத்தல், திறந்த மனப்பான்மை, பொறுமை, ஏற்றுக்கொள்ளுதல், உங்களுடைய பார்வைக்கோணத்தை நிலைநிறுத்தவேண்டியது அவசிய மில்லை என்று விட்டுக்கொடுத்தல், உங்களை இன்னும் அறிவாளியாக்க உங்கள் அனுபவங்களை அனுமதித்தல் சில நேரங்களில், உலகம் உங்களுடைய குறைகளையும் வலிமையின்மைகளையும் பிரதி பலிக்கிறது. உங்களை மகிழ்ச்சியாக ஊக்குவிக்கும் ஒரு குழு இருந்தால், இதனால் நீங்கள் சோர்ந்துபோக மாட்டீர்கள். எடுத்துக்காட்டாக, உங்களை ஊக்குவிக்கிற, உங்களுடைய வலிமைகள், உங்களுடைய நேர்விதமான, உறுதியான குணங்களை உரிய நேரங்களில் அடிக்கடி சுட்டிக் காட்டும் குடும்பத்தினர், நண்பர்கள் இருந்தால், இந்தக் குறைகள் உங்களைச் சோர்வாக்காது. ஒவ்வொரு நாளும் உங்களைச் சுற்றிப் பல விஷயங்கள் சரியாக நடக்கின்றன. அவற்றைப் பாராட்டும் பழக்கம் உங்களுக்கு



வந்தால், நீங்கள் உங்களுடைய அறிவின் அளவை (HQ) அதிகரித்துக் கொண்டே செல்கிறீர்கள் என்று பொருள்.

உங்களுடைய HQ அதிகரிக்க அதிகரிக்க, நீங்கள் உங்களுடைய மனத்திலிருந்து பொருளற்றவற்றைக் கழிக்கவேண்டும். இதைக் கற்றுத் தருகிற ஓர் அழகிய, சிறிய கதை இதோ: ஓர் ஆசிரியர், தன்னிடம் புதிதாகச் சேர்ந்த ஒரு மாணவரிடம் இரண்டு பெட்டிகளைத் தந்தார். உன்னுடைய அனைத்து எதிர்பார்ப்புகளையும் கருப்புப் பெட்டியில் போடு. உன்னுடைய மகிழ்ச்சிகள் அனைத்தையும் தங்கப் பெட்டியில் போடு என்றார். புதிய மாணவர் இந்தக் குறிப்புகளை விசுவாசமாகப் பின்பற்றினார். சுவையான விஷயம், அவருடைய தங்கப் பெட்டி கனமாகிக்கொண்டே சென்றது, கருப்புப் பெட்டி கனமில்லாமல் இருந்தது, இதை அவர் கவனித்தார். இது ஏன் என்று தெரிந்து கொள்வதற்காக, அவர் கருப்புப் பெட்டியைத் திறந்து பார்த்தார். அந்தப் பெட்டியின் கீழே ஓர் ஓட்டை இருந்தது, அதன்வழியாக அவருடைய எதிர்பார்ப்புகள் அனைத்தும் கீழே சென்றுவிட்டன. இதைப்பற்றித் தன்னுடைய ஆசிரியரிடம் கேட்டார் அவர். ஆசிரியர் சொன்னார், குழந்தாய், நீ உன்னுடைய வரங்களை எண்ணி மகிழ்வதற்குதான் தங்கப் பெட்டி; தேவையற்றவற்றை விட்டுக் கொடுப்பதற்குதான் கருப்புப் பெட்டி.

இந்தக் கதையில் ஒரு மிகச்சி றந்த பாடம் இருக்கிறது: நம்முடைய எதிர்பார்ப்புகள்தான் நம்மை உதவியற்ற நிலைக்கும் எரிச்சலுக்கும் கொண்டுசெல்கின்றன. யாராவது நெருப்பில் ஒரு விரலை நீட்டிவிட்டு, ‘என்னுடைய விரல் ஏன் எரிகிறது? எனக்கு ஏன் வலிக்கிறது?’ என்று கேட்பார்களா? நம்முடைய எண்ணங்களும் படைப்புணர்வும் எதிர்பார்ப்புகளின் வலையில் சிக்கிக்கொள்கின்றன. நாம் ஏதேனும் ஒன்றைச் செய்யும்போது நமக்குக் கிடைக்கும் மகிழ்ச்சி யை, மன நிறைவை, நம்முடைய எதிர்பார்ப்புகள் பறித்துவிடுகின்றன. அதனால்தான், அந்த ஆசிரியர் தன்னுடைய புதிய மாணவரிடம், உன்னுடைய சோகங்களைக் கருப்புப் பெட்டியில் போடு என்று சொல்ல வில்லை, எதிர்பார்ப்புகளைதான் போடச்சொன்னார். என்னுடைய தந்தை எனக்குச் சொல்லித் தந்த விஷயம், உன்னுடைய ஒரு கண் வேலையின்மீதும், இன்னொரு கண் அதனால் கிடைக்கப்போவதாக நீ நம்புகிற பரிசின்மீதும் இருந்தால், உன்னுடைய வேலை கெட்டுப் போகும். அதற்குப்பதிலாக, இரண்டு கண்களையும் உன்னுடைய வேலையின் மீது வை, அப்போது நீ மிகச்சிறந்த வேலையைச் சாதிப்பாய். இந்தப் பாதையிலிருந்து நான் ஒருபோதும் விலகவில்லை.

இக்கட்டுரை, ஒவ்வொரு நாளும் நம்மை மகிழ்ச்சிப் பகுதியில் தக்க வைக்கும் நோக்கத்துடன் எழுதப் பட்டுள்ளது. அந்த மகிழ்ச்சிக்கு மதிப் பெண் போடச்சொன்னால், சில நாட்கள் 10க்கு 7 மதிப்பெண் தருவோம், சில நாட்கள் 2 மதிப்பெண்தான் தருவோம் அது பரவாயில்லை. ஒவ்வொரு நாளும் 10க்கு 10 மதிப்பெண் வாங்கவேண்டும் என்று அவசியமில்லை. சில நேரங்களில், நீங்கள் மிக மகிழ்ச்சியாக இல்லாமலிருக்கலாம், ஆனால், அமைதியாக இருக்கலாம். அதுவும் நல்ல விஷயம் தான். நீங்கள் கற்றுக் கொள்ளும் போது, உங்களுடைய முதிர்ச்சி வளர்கிறது. உலகம் எப்படி இயங்குகிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளும்போது, உங்களுக்குள் ஒரு புரிந்துகொள்ளல் மின்னல் அடிக் கிறது, பின்னாலேயே ஒரு நிலையான வகை மகிழ்ச்சியும் அமைதியும் வருகின்றன, அவற்றை எதனாலும் எளிதில் அசைக்க இயலாது.

இதற்கான வழி, தொடர்ந்து வேலைசெய்யவேண்டும், அன்றாட வாழ்க்கையை எளிதாக்குகிற சிறிய விஷயங்களைச் செய்யவேண்டும். கருணையான முறையில் பேசுங்கள், இந்த எண்ணத்துடன், வாழ்க்கையை வாழ்வதற்கான சில அறிவார்ந்த மற்றும் மிகச்சிறந்த வழிகளை நான் வழங்குகிறேன்:

- சோகம், மனக்குறைகள், காழ்ப் புணர்ச்சிகளை முடித்துவையுங்கள்.
- மகிழ்ச்சி தராத, தேவையற்ற பழக்கங்களை நிறுத்துங்கள். மனத்தெளிவு ஒரு வரம்.
- ஏதேனும் ஒன்றைப்பற்றி மூன்று நாட்கள் உங்களுக்கு ஐயங்கள் இருந்தால், அது உங்களுக்கானது இல்லை என்று பொருள். நீங்கள் உங்களுக்காக அமைக்கப்பட்ட சரியான பாதையில் நடக்கும் போது, எதனாலும் உங்களைத் தடுத்து நிறுத்த இயலாது.
- இன்னொருவர்மீது குற்றம் சுமத்துவதை விட, நீங்களே சொந்தமாக மலரத் தீர்மானி யுங்கள். உங்களுக்கு ஆர்வமுள்ள விஷயத்தில் வல்லுனராகுங்கள். கற்றுக்கொள்ளுதல் என்பது ஒரு மிகச்சிறந்த, உங்களை உள்ளிழுத்துக்கொள்கிற வாழ்க்கை நிலையாகும்.
- வாழ்க்கையில் அனைத்தையும் சவாலாகப் பார்க்காதீர்கள்; அதற்குப்பதிலாக, படைப் புணர்வுடன் இருப்பதற்கான ஒரு நேரமாகப் பாருங்கள்.
- உங்கள் உடலுக்குப் பொருந்தும் உணவுகளை உட்கொள்ளுங்கள். உங்களுடைய உள்ளுறுப்புகளை வளமாகவும் இதமாகவும் வையுங்கள்.
- பொறுமையைக் கடைப் பிடிப்பது என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள்.
- பிறரைப்பற்றித் தீர்ப்புச் சொல்வது என்பது, இன்னொரு வருடைய இடத்தில் உங்களுடைய வண்டியை நிறுத்துவதைப்போன்றது. இந்த விஷயத்தில் அனைத்துத் தீர்ப்புகளும் தவறானவைதாம்.
- வாதிடாதீர்கள். வாதம் என்பது, ஒரு போர். மனம்தான் அதற்கான போர்க்களம். யாராவது உங்களைச் சுட்டால், திருப்பிச் சுடாதீர்கள். உங்களுடைய தற்பெருமை, ஆணவம், நான் என்கிற உணர்வையெல்லாம் கட்டுப்படுத்துங்கள்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி



நல்ல புத்தகங்களை எப்படி அறிவது?

சந்தியா ராவ்

இந்த நோக்கத்தில் பார்த்தால் ஒரு சிறிய அதிகாரம் செலுத்துதல் ஒரு மோசமான காரியமாக இருக்காது

ஒ நான் படிப்பதில்லை. அதாவது, இது நேரத்தை வீணடிக்கும் செயலாகும். ப்ரோ, யார் படிக்கும் வேலையைச் செய்கிறார்கள்!

இந்த வாக்கியத்தை நான் கடந்த சில ஆண்டுகளில் எவ்வளவு அதிகமாகவும் ஒரு விதமான அலட்சிய பாவத்துடன் சொல்லக் கேட்டிருக்கிறேன் என்றால் எழுதவேண்டும் என்ற என்னுடைய ஆர்வத்தையே அது குலைத்திருக்க வேண்டும் ஆனால் என்னுள் இருக்கும் நம்பிக்கை உணர்வு அவ்வாறு ஏற்படாமல் தடுத்திருக்கிறது. ஆனால் இளைஞர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் புத்தகங்கள் அல்லது கல்லூரி/பள்ளி புத்தக அடிப்படையிலான அசை ன்மெண்டுகள் பற்றிய விவாதங்களில் முன்னுரை எழுதும் போது அவர்கள் உபயோகிக்கும் சொற்கள் பாடப்புத்தகங்கள் மற்றும் அதிகபட்சமாக சில முன்னேற்ற தூண்டுதல் புத்தகங்களைத் தவிர வேறு எதையும் படிக்கவே கூடாது என்பதையே சுட்டிக் காட்டுகின்றன. அது நிச்சயமாக வேடிக்கையாக இல்லை.

புத்தகம் படிக்க விரும்பாத இளைஞர்களின் இந்த குணம் என்னை போன்று ஆழமாக நம்பிக்கை மிகுந்த நபருக்கு மன வருத்தத்தை அளிக்கிறது. இதில் நல்ல விஷயம் என்னவென்றால், புத்தங்கள் மன அழுத்தத்தை குறைக்கின்றன என்று ஆராய்ச்சிகள் குறிப்பிடுகிறது.

நீங்கள் ஒரு குறிப்பிட்ட புத்தக த்தைப் படிக்க விரும்புகிறீர்கள் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும். மிகவும் வெளிப்படையானது புத்தக மதிப்புரைகள். மதிப்பாய்வாளரின் தனிப்பட்ட விருப்பத்தேர்வுகள்



உட்பட அவர்களிடமிருந்து நீங்கள் நிறைய கற்றுக்கொள்ளலாம், ஏனெனில் நீங்கள் செய்யும் தேர்வுகள் அவரவர்களின் சொந்தக் கருத்துகள் ஆகும். நிச்சயமாக, தங்களை சுயமாக பரிந்துரைத்துக் கொள்ளும் ஏராளமான புத்தகங்களும் உள்ளன, ஏனென்றால் அவை பிரமாதமாக இருப்பதோடு எந்தவிதமான சொந்தக் கருத்தும் அதன் சிறப்புத் தன்மையை மறைக்க இயலாது. நிச்சயமாக புத்தக விமர் சனங்கள் நல்ல புத்தகங்களை கண்டு பிடிப்பதற்கான ஒரு சிறந்த வழியாகும்.

வெளியீட்டாளர்களால் வெளியிடப் பட்ட விளம்பர விபரங்கள் உள்ளன. இருப்பினும், எச்சரிக்கையாக இருங்கள். புத்தகத்தை விற்க இவை எல்லாம் செய்ய வேண்டும், எனவே ஏமாற வேண்டாம். அந்த விளம்பரங்களில் வரும் உள்ளடக்கத்தின் சுருக்கம் அல்லது சில நேரங்களில் புத்தகத்தில் உள்ள விஷயம் பற்றிய ஒரு குறுகிய சுருக்கம் ஆகியவை அந்த விளம்பரங்களின் நல்ல விஷயங்களாகும். நீங்களே படித்து புத்தகத்தை பற்றிய முடிவுக்கு வரலாம். பொருட்களை விஞ்சும் விளம்பரங்களின் நிகழ்வுகள் உள்ளன, அதாவது புத்தகங்களின் சந்தைப்படுத்தல் அட்டைகளுக்கு இடையிலான விஷயங்களை விட மிக உயர்ந்த விஷயமாகும். இருப்பினும், முக்கியமானது என்னவென்றால், இது புத்தகங்களை வாசிக்க வழிவகுக்கிறது.

சில நேரங்களில், துப்பு புத்தகத்திலிருந்தே வருகிறது. முதல் சில பக்கங்களைப் மேலோட்டமாக படியுங்கள். எழுத்து உங்கள் ஆர்வத்தை தூண்டுகிறதா? சில நேரங்களில் முதல் வரியால் அதைச் செய்ய முடியும். ஆனால் இதற்காக, நீங்கள் புத்தகத்தின் உள்ளே பார்க்க வேண்டும். மறுபடியும், ஒரு புத்தகத்தை அதன் அட்டை படம் மூலம் நாம் ஒருபோதும் தீர்ப்பளிக்கக்கூடாது என்று சொல்லப்படுவது எனக்குத் தெரியும், ஆனால் சில சமயங்களில், அட்டையாலும் புத்தகத்தை பற்றிய ஒரு துப்பு கொடுக்க முடியும்.

சில புத்தகக் கடைகளில், அலமாரிகள் ‘ஊழியர்கள் பரிந்துரைகள்’ என்று குறிப்பிடப்பட்டிருப்பதைக் நான் கண்டிருக்கிறேன், அதாவது கடையில் வேலை செய்யும் மக்கள் படித்த ரசித்த புத்தகங்கள். நூலகங்களும் இதைச் செய்ய முனைகின்றன, ஆனால் அது பெரும்பாலும் நியாயமான மற்றும் நேர்மையானதோடு பெரும்பாலும் கருப்பொருளைப் பொறுத்ததாகவே இருக்கும். உதாரணமாக, நவம்பர் 14 குழந்தைகள் தினமாக இருப்பதால் குழந்தைகள் புத்தகங்களை வாங்க மக்கள் கவனத்தை ஈர்க்க நவம்பர் மாதத்தை அர்ப்பணிக்கலாம்; அதே போல்

அக்டோபர் மாதத்தை மகாத்மா காந்தியைப் பற்றிய புத்தகங்கள் மற்றும் / அவர் எழுதிய புத்தகங்களுக்கு முக்கியத்துவம் வழங்கலாம்; டிசம்பர் என்பது கிறிஸ்துமஸ் உற்சாகம் அல்லது தற்போதைய சூழலில் அயோத்தி, பாபர் மசூதி மற்றும் ராமர் பற்றியதாக இருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், இறுதி முடிவு ஒன்றுதான்: படிக்க நல்ல புத்தகங்களைக் கண்டு பிடிக்க முயற்சிப்பது என்பதே அது.

இருப்பினும், வாய் வார்த்தை மூலம் கிடைக்கும் பாராட்டுகளே சிறந்தது. பெரும்பாலும் ஒரு நண்பர், அவர் படித்த ஒரு புத்தகத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்லி உங்களையும் அதைச் படிக்குமாறு அறிவுறுத்து கிறார். அல்லது, உங்கள் நண்பர் உங்களைப் போலவே உங்களிடம் உண்மையாக இருந்தால், அந்தப் புத்தகத்தை உங்கள் கைகளில் திணிக்கிறார். இது ஒரு முறை நடந்தது. அமிதாவ் கோஷின் தி கிளாஸ் பேலஸை ஒரு அன்பான பள்ளி நண்பரின் மீது கட்டாயப்படுத்தினேன், அவர் பொதுவாக புத்தகப் பிரியர் அல்ல. ஆரம்பத்தில் அவர் உற்சா கமாக இருந்தார், ஆனால் நாட்கள் வாரங்களாக வளர்ந்ததால், அழுத்தமும் அதிகரித்தது. இறுதியாக, வாரங்கள் மாதங்களாக மாறியபோது, நாங்கள் சந்தித்த ஒவ்வொரு முறையும் புத்தகம் அறையில் யானையாக மாறியது, இறுதியில் அவர் அதைத் திருப்பியளித்தபோது, ஒரு பக்கத்தைக் கூட திருப்பாமல் அவர் அவ்வாறு செய்தார்! “அதை இழக்க நேரிடும் என்று நான் மிகவும் பயந்தேன்!'' என்பது அவர் தான் புத்தகத்தை திரும்ப அளித்ததற்கு அவர் அளித்த சாக்காக இருந்தது.

தற்செயலாக, கோஷ் எனக்கு பிடித்த எழுத்தாளர்களில் ஒருவர், எனவே, நீங்கள் ஏற்கனவே அவரைப்

அமிதவ் கோஷ்



படிக்கவில்லை என்றால், நீங்கள் அவருடைய புத்தகங்களை கையில் எடுப்பீர்கள் என்று நம்புகிறேன் -எடுத்து தவறாமல் பக்கங்களைத் திருப்புங்கள்!

நான் படிக்க விரும்புவதால் படிக்கிறேன். அது தனிப்பட்ட விருப்பம். எந்த அடிப்படையில் நான் அந்த பழக்கத்தை மற்றவர்களுக்கு பரிந்துரைக்க வேண்டும்? இந்த விஷயத்தில் உதவிக்காக நான் இணையத்தைப் பார்த்தேன். வாசிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசும் பல தளங்கள் உள்ளன. நான் ஒரு தளத்தை எந்தக் குறிப்பான காரணமும் இல்லாமல் தேர்ந்து எடுத்தேன். இந்த தளம் வாசிப்பின் நன்மைகளாக பட்டியலிடப்பட்டுள்ளது: இது உங்கள் புத்தியைக் கூர்மைப்படுத்துகிறது; இது உங்கள் சொற்களஞ்சியத்தை அதிகரிக்கிறது; இது உங்கள் மன அழுத்தத்தை குறைக்கிறது; இது உங்கள் மனச்சோர்வைக் குறைக்கிறது; இது உங்கள் நினைவகத்தையும் கவனத்தையும் மேம்படுத்துகிறது; இது உங்கள் கற்பனையை மேம் படுத்துகிறது; இது உங்கள் தூக்கத்தை அதிகரிக்கிறது; அது உங்களை மகிழ்விக்கிறது மற்றும் உங்களுக்குள் அமைதியைக் கொண்டுவருகிறது; இது உங்கள் நாளை பிரகாசமாக்கு கிறது. அனைத்துமே படிக்கத் தூண்டுவதற்கான கட்டாய காரணங்களே.

மற்றொரு வலைத்தளத்தில் தோன்றிய விஷயங்கள் இவை : இது உங்களை நீங்களே கண்டறிய உதவுகிறது; இது பல வருட அனுபவங்களிலிருந்து மதிப்புமிக்க அனுபவங்களை உங்களுக்கு அளிக்கிறது; இது உங்கள் உணர்வு தொடர்பான ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது; இது உந்துதலின் சிறந்த ஆதாரம் ஆகிறது; இது உங்கள் அறிவை விரிவுபடுத்துகிறது மற்றும் உங்களை சிறந்த மனிதராக்குகிறது; உங்கள் படைப்பாற்றலை மேம்படுத்து கிறது.

இந்தக் கட்டுரையை முடிப்பதற்கு முன், இங்கே அமிதவ் கோஷின் “ஷேடோ லைன்”ஸிலிருந்து சில துளிகள் உங்களுக்காக தருகிறேன், இது என்னுடைய இதயத்திற்கு மிகவும் நெருக்கமான இன்னொரு விஷயம் புகைப்படங்கள் பற்றியது. “அந்தந்த காலக்கட்டத்தின் புகைப்படங்களின் தரம் பற்றி பளிச்சென வித்தியாசமாக ஏதாவது உள்ளது. இதற்கும் அந்த புகைப்படத்தின் வயது அல்லது நிறம், அல்லது காகித உணர்வோடு எந்த தொடர்பும் இல்லை. நவீன குடும்ப புகைப்படங்களில், கேமரா ஒரு நண்பரைப் போல புழங்குவதைப் போல நடித்து, அந்த தருணங்களில் அந்த நிகழ்வுகளை கிளிக் செய்யும் போது, அந்தக் குடும்ப நபர்கள் தாங்கள் இயல்பாக இருப்பது போல் தோன்றும் முயற்சியில் அந்த மாதிரி தங்களை மாற்றி அமைத்துக் கொள்கிறார்கள். ஆனால் அக்காலத்தில் நிலவிய படங்களில், கேமரா இன்னும் பொதுவான மற்றும் மூன்றாவது கண்ணாக கருதப்பட்டது, கேமாரக்கள் முன்னால் நின்ற மக்கள் பார்க்கவர்களை சிரிக்க வைக்கும் விதமாக தோன்றினார்கள், அல்லது தங்கள் முகங்களையும் தோள்களையும் இறுக்கமாக வைத்துக் கொண்டார்கள், எப்போதும் முறையாக இல்லாமல் ஒருவிதமான இறுக்கமான முகத்துடன் தோன்றினார்கள்.

நம்மில் பெரும்பாலோரிடம் அந்தக் காலத்தின் புகைப்படங்கள் இருக்கின்றன. நம்மில் பலர் தொடர்ந்து படங்களை எடுத்துக்கொள்கிறோம்: அவர் குறிப்பாக என்ன சொல்ல வருகிறார் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.இத்துடன். எனது வாதம் முடிந்தது.

கட்டுரையாளர் குழந்தைகள்
எழுத்தாளர் மற்றும் மூத்த
பத்திரிகையாளர்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

RC சேலம் மெட்ரோபோலிஸ் — RID 2982

பெரியபுதூர் கிராமத்தில் உள்ள ஒரு அரசுப் பள்ளியில் காது தொண்டை மூக்கு நோய் தொடர்பான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் 120க்கும் மேற்பட்டோர் பரிசோதிக்கப் பட்டனர். இதைத் தொடர்ந்து சேலத்தில் உள்ள ரோட்டரி ஹாலில் 80க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு செவிப்புலன் இயந்திரம் விநியோகம் செய்யப்பட்டது.

RC மதுரை வடக்கு — RID 3000

மூன்று நாள் ரோட்டராக்ட் RYLA நிகழ்வுத் தலைவர் D மலையரசன் தலைமையில் நடைபெற்றது. சுமார் 60 பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர். PDG R ஷண்முகசுந்தரம் நிகழ்வினை திறந்து வைக்க, DG ஜமீர் பாஷா முடிவுரையை வழங்கினார்.

RC நாக்பூர் விஷன்ஸ் — RID 3030

ஒரு மைக்ரோ கடன் திட்டத்தின் கீழ், டோங்கர்கான் கிராமத்தில் 15 பெண்களுக்கு தலா ரூபாய் 20,000 வழங்கப்பட்டது. பெண்கள் தங்கள் சொந்தத் தொழிலைத் தொடங்க உதவுவதற்காக இந்த திட்டத்தை நிரமய் பஹு-உதேஷியா சேவா சன்ஸ்தா மூலம் கிளப் நடத்தி வருகிறது.

RC குர்கான் காஸ்மோபாலிட்டன் — RID 3011

சங்கம் நாத்துபூர் கிராமத்தில் ஒரு ஆரம்பப் பள்ளியில் நூலகத்தை நிறுவியுள்ளது. சுமார் 135 குழந்தைகள் இந்த வசதியால் பயனடைவார்கள்.

சங்க சேவைகள்

RC இந்தூர் மேக்தூத் — RID 3040

நேபானியாவின் அரசுப் பள்ளியில் பல் பரிசோதனை முகாம் நடைபெற்றது, இதில் 350க்கும் மேற்பட்ட குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டனர்.

RC கர்னல் மிட் டவுன் — RID 3080

இளமைப் பருவ சிறுமிகளுக்காக ஜுண்ட்லாவின் பிரதாப் பப்ளிக் பள்ளியில் சுய சுகாதாரம் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த பள்ளியில் ஒரு புதிய இன்டராக்ட் கிளப் நிறுவப்பட்டது. MDD பால் பவன் அனாத் ஆசிரமத்தில் மாணவர்கள் தரையில் அமர்வதற்கான பாய்களை பரிசாக சங்கம் வழங்கியது.

RC அலகாபாத் ராயல்ஸ் — RID 3120

DG சஞ்சய் அகர்வால் ரோட்டரி ரவுன்டானா ஒன்றை திறந்து வைத்தார். ரோட்டரி சக்கரம் ஒன்றை நகர விமான நிலையத்தில் இச்சங்கம் அமைந்துள்ளது.

RC பன்வெல் இலைட் — RID 3131

உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனமான ராபின் ஹூட் ஆர்மியுடன் இணைந்து இந்த கிளப் உணவு நன்கொடை வழங்கும் முயற்சியை ஏற்பாடு செய்தது. பென் தாலுகாவில் உள்ள 30 பழங்குடி கிராமங்களுக்கு சுமார் 10,000 கிலோ மளிகை சாமான்கள், கொசு சுருள்கள் மற்றும் LED பல்புகள் விநியோகிக்கப்பட்டன. இந்த திட்டத்தால் 1,000க்கும் மேற்பட்ட பழங்குடி குடும்பங்கள் பயனடைந்தன.

RC சுனம் — RID 3090

பிரைம் மருத்துவமனையில், திட்டத்தின் தலைவர் வனீத் கார்க்கின் தலைமையில் எலும்பு கனத்தின் தன்மையை பரிசோதிக்கும் முகாம் நடைபெற்றது, அதில் ரோட்டேரியன் டாக்டர் ரோஹித் குப்தா மற்றும் அவரது 150 மருத்துவர்கள் கொண்ட குழு 120 நோயாளிகளை பரிசோதனை செய்தனர்.

RC மும்பை கிரீன்சிட்டி — RID 3141

பால்கர் மாவட்டத்தில் சம்பா கிராமத்தில் பழங்குடி குழந்தைகளுக்கான பள்ளி தத்து எடுத்துக் கொள்ளப்பட்டது. ரோட்டேரியன்கள் மாணவர்களை வளாகத்தில் மரங்களை நடவும், தண்ணீரை சேமிக்கவும், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டைத் தவிர்க்கவும் ஊக்குவித்தனர். துணி பைகளும் விநியோகிக்கப்பட்டன.

RC டோம்பிவ்லி இன்டஸ்டிரியல் ஏரியா — RID 3142

திலக் நகர் தபால் நிலையத்தில் 25 தபால்காரர்களுக்கு ஒரு நல்லெண்ண செய்கையாக குடைகள் விநியோகிக்கப்பட்டன. இந்த திட்டத்திற்கான செலவை மாவட்ட செயலாளர் பிரகாஷ் ஷா ஏற்றுக் கொண்டார் .

RC குண்டகல் — RID 3160

ரோட்டராக்டர்கள் மற்றும் இன்னர் வீல் உறுப்பினர்களுடன் கிளப் கைகோர்த்து, மரக்கன்றுகளை நடவு செய்வதற்காக ரோடேரியன் திம்மராஜுவின் தோட்டத்தில் விதை பந்து தயாரிப்பு முகாமை நடத்தியது.

RC இச்சல்கரஞ்சி — RID 3170

தூய்மையைப் பேண உதவும் குப்பை நீக்கும் தொழிலாளர்கள் அவர்கள் முயற்சிகளுக்காக சங்கம் பாராட்டியது. மேலும், சுற்றுச்சூழலுக்கு அபாயகரமான மின்னணு கழிவுகளை சேகரிக்க குடிமை அமைப்புகளுக்கு மின் கழிவுத் தொட்டிகள் வழங்கியது.

RC கோவைபுதூர் — RID 3201

சங்கம் பள்ளிக்கு பெரிய நீர் சேமிப்பு தொட்டி மற்றும் அலமாரியை நன்கொடையாக வழங்கியது. இதன் மூலம் பள்ளியில் நீர் பற்றாக்குறையை அவர்கள் அனுபவிக்க மாட்டார்கள் என்பதால் மாணவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

சங்க சேவைகள்

RC தலிச்சேரி — RID 3202

மரம் நடும் திட்டம் அக்கம் பக்கத்தில் உள்ள பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டது. பசுமையான சூழலில் ஈடுபடுவதற்கு 500 மரக்கன்றுகளை பொதுமக்களுக்கும் பள்ளி அதிகாரிகளுக்கும் கிளப் வழங்கியது.

RC மார்த்தாண்டம் — RID 3212

இந்தியாவில் ரோட்டரி நூற்றாண்டுக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, கிளப் அத்தியாவசிய பொருட்களான உணவு, மருந்துகள் மற்றும் போர்வைகளை மன வளம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் அன்பகம் முதியோர் இல்லத்திற்கு வழங்கியது. அங்கு ஒரு மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

RC மஹிந்திரா இன்டஸ்டிரியல் சிட்டி — RID 3231

ஒற்றை பயன்பாட்டு பிளாஸ்டிக்கிற்கு எதிரான விழிப்புணர்வு இயக்கம் சென்னை அருகிலுள்ள மகாபலிபுரத்தில் நடைபெற்றது. பிளாஸ்டிக் மாசுபாட்டின் தீய விளைவுகளை விளக்க ரோட்டரியினர் பொது மக்களுக்கு துண்டு பிரசுரங்களை விநியோகித்தனர்.

RC மெட்ராஸ் சென்னப்பட்னா — RID 3232

வன வாணி மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி மற்றும் இந்து சீனியர் செகண்டரி பள்ளியின் இன்டராக்ட் சங்கங்கள் இரண்டு சொட்டு போலியோவிற்கு 2 டாலர் திட்டத்திற்காக ரூபாய் 25,000 வரை நிதி திரட்டினர். இந்த தொகை கிளப் தலைவர் சூரியபாஸ்கரிடம் ஒப்படைக்கப்பட்டது.

RC கவுஹாத்தி வெஸ்ட் — RID 3240

வடக்கு லக்கிம்பூர் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் உள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 200 பாதுகாப்பு பெட்டிகள் வழங்கப்பட்டன. இப்பெட்டிகளின் விலை ரூ.12 லட்சம் ஆகும், ஒவ்வொரு பெட்டியிலும் நான்கு நபர்களுக்கான மறுவாழ்விற்குத் தேவையான 50 பொருட்களைக் உள்ளது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

Rotary News Subscription Remittances

You can pay the Rotary News / Rotary Samachar subscription online

Our Bank details:

Bank	:	HDFC Bank SB Account
Branch	:	Montieth Road Egmore, Chennai
A/c Name	:	Rotary News Trust
A/c No.	:	50100213133460
IFSC Code	:	HDFC0003820

E mail us following details:

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

Rotary at a glance

Rotarians	:	1,221,067
Clubs	:	36,082
Districts	:	525
Rotaractors	:	165,900
Clubs	:	10,015
Interactors	:	245,755
Clubs	:	10,685
RCC	:	10,770

As on Nov 15, 2019

Please note Interact clubs that have not reported Interact Adviser in the past two Rotary years, are placed in "Suspended" status effective Oct 1, 2019. They will have until Dec 31, 2019 to report an Interact club adviser online or the Interact club will be automatically "Terminated".

Membership Summary

As on Nov 1, 2019

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians	Rotaract Clubs	Interact Clubs	RCC
2981	113	4,878	246	43	0	220
2982	68	3,204	168	76	41	55
3000	134	5,789	570	181	118	210
3011	87	3,695	897	47	53	25
3012	95	3,850	983	51	45	57
3020	72	4,250	239	53	14	350
3030	92	4,974	661	94	80	261
3040	94	2,132	239	32	40	143
3053	66	2,854	493	15	35	96
3054	127	5,952	1,018	76	88	475
3060	99	4,383	610	53	39	141
3070	106	3,187	445	42	16	58
3080	85	3,538	345	82	49	111
3090	81	2,026	57	36	0	122
3100	79	1,982	119	12	0	146
3110	132	4,175	437	27	0	105
3120	81	3,428	462	38	14	53
3131	137	5,535	1,217	100	102	97
3132	96	3,751	400	32	48	157
3141	104	5,766	1,365	108	78	88
3142	99	3,442	699	77	44	64
3150	97	3,773	390	55	70	116
3160	77	2,676	187	27	0	83
3170	129	5,764	700	66	120	165
3181	86	3,815	387	59	141	115
3182	84	3,230	240	36	36	97
3190	126	5,100	721	129	76	58
3201	145	5,580	429	98	0	50
3202	130	5,182	301	72	0	47
3211	141	4,596	336	8	0	131
3212	100	4,139	331	96	55	145
3231	91	4,091	507	49	56	355
3232	127	5,292	906	123	103	86
3240	89	3,135	418	48	355	190
3250	103	3,975	699	59	26	181
3261	73	2,694	414	14	14	43
3262	95	3,455	429	42	27	77
3291	150	3,799	782	84	41	614
India Total	**3,890**	**153,087**	**19,847**	**2,340**	**2,024**	**5,587**
3220	73	2,089	294	79	73	73
3271	92	1,483	256	60	5	18
3272	146	1,903	326	51	7	43
3281	212	5,896	911	220	27	193
3282	167	5,294	682	134	24	44
3292	122	4,843	741	126	48	115
S Asia Total	**4,702**	**174,595**	**23,057**	**3,010**	**2,208**	**6,073**

Source: RI South Asia Office

தொல்லை தரும் நள்ளிரவு விமானங்கள்

TCA ஸ்ரீநிவாச ராகவன்

மிகச்சிறந்த ஆற்றல் கொண்ட நாடு என்றால் என்ன? வல்லுனர்கள் இதைப் பல விதமாக வரையறுத்துள்ளார்கள்: பணம், உடல்வலிமை, பண்பாடு, இன்னும் பல. ஆனால், என்னைப் பொறுத்தவரை மிகச்சிறந்த ஆற்றல் என்றால் ஒரே ஒரு விஷயம்தான்: இந்தியாவிலிருந்து கிளம்பும் உங்களுடைய பன்னாட்டு விமானம் எந்த நேரத்தில் மேலேறுகிறது? இந்த வரையறையின்படி, இந்தியா ஆற்றலைப் பெறுவதற்கே இன்னும் ரொம்ப நாளாகும், மிகச்சிறந்த ஆற்றலெல்லாம் இப்போதைக்குக் கனவுதான். நான் ஏதோ நகைச்சுவை சொல்வதாக நினைத்துவிடாதீர்கள். இதற்கு ஒரு காரணம் இருக்கிறது, இந்திய விமான நிலையங்களிலிருந்து கிளம்பும் பன்னாட்டு விமானங்களில் 94 சதவிகித விமானங்கள் இரவு 10மணியிலிருந்து அதிகாலை 3மணிக்குள் கிளம்புகின்றன. இதன் பொருள், நீங்கள் பெரும்பாலும் இருட்டில், மங்கலான ஒளியுள்ள விமானத்தினுள் பயணம் செய்வீர்கள், சுற்றியுள்ள எல்லாரும் இரவு உணவைச் செரித்து க்கொண்டிருப்பார்கள், காலை விழித்ததும் நீங்கள் அசிங்கமான கழிப்பறைகளைப் பயன்படுத்தவேண்டும்.

நீங்கள் விமானத்தில் ஏறியவுடன், அதிகாலை சுமார் 2மணியளவில் அவர்கள் உங்களுக்கு மதுவையும் உணவையும் வழங்குவார்கள். ஏனெனில், பன்னாட்டுக் குடிமையியல் விமான விதிமுறைகள் இதைத்தான் வலியுறுத்துகின்றன. மணி கிட்டத் தட்ட அதிகாலை 3. நெடுநேரம் சிரமப்பட்டுச் செக்-இன் செய்து, பாதுகாப்புப் பரிசோதனையையும் முடித்த களைப்பில் நீங்கள் தூங்கத் தொடங்குகிறீர்கள். அதே நேரம், அதே அளவு தீவிரமுள்ள விமானப் பணியாளர் ஒருவர் உங்களை எழுப்பிவிடுகிறார், பொய்யான புன்னகை, மிதமான தொனியில் கேட்கிறார்: ஏதாவது சாப்பிடுகிறீர்களா, அல்லது குடிக்கிறீர்களா, ஐயா? அதன்பிறகு, நீங்கள் தூங்குவதற்கு இன்னும் அரைமணிநேரம் ஆகிறது. மேலும் மதுவையும் ஒரு கொடுமையான ரோலையும் பரிமாறி மூன்று மணிநேரத்துக்குப்பிறகு, காலை 6மணிக்கு அவர்கள் ஒரு முழுக் காலையுணவைப் பரிமாறுகிறார்கள். 'இந்த உலகத்தில் நரகம் என்று ஒன்று இருந்தால், இதுதான் அது!'

எனக்குப் பகல்நேர விமானப் பயணங்கள் பிடிக்கும். ஏனெனில், விமானத்தினுள் இருட்டாக இருக்காது, கழிப்பறைகள் தூய்மையாக இருக்கும், நீங்கள் உங்களுடைய பானங்களையும் உணவையும் படங்களையும் ரசித்து அனுபவிக்கலாம், விமானம் கீழிறங்கத் தொடக்குமுன் குட்டித்தூக்கம் போடலாம். அவர்கள் தேநீர் மற்றும் காஃபி மற்றும் ஒரு நொறுக்குத்தீனியை வழங்குவார்கள். அனைத்தும் மிகவும் நாகரிகமாக நடைபெறும். நேரத்தில் விடுதிக்கு அல்லது வீட்டுக்குச் சென்று சூடான வெந்நீரில் குளிக்கலாம், ஏதாவது குடிக்கலாம், நல்ல இரவு உணவைச் சாப்பிட்டு விட்டு இரவு நன்றாகத் தூங்கலாம். மேற்கத்திய நாடுகளிலுள்ள பயணிகளில் கிட்டத்தட்ட எல்லாருமே பன்னாட்டு விமானத்தில் புறப்படும்போது இதையெல்லாம் அனுபவிக்கிறார்கள்.

அதேசமயம், மற்ற நாடுகளில் இது போன்ற இரவு விமானங்கள் இல்லை என்று எண்ணிவிடக்கூடாது. அமெரிக்காவில் இவற்றைச் சிவந்த கண் விமானங்கள் என்பார்கள்; ஏனெனில், நீங்கள் தரையிறங்கும்போது, உங்கள் கண்களில் எரிச்சல் உணர்வு இருக்கும்; தூக்கமின்மையால் அவை சிவந்திருக்கும்.

உண்மை என்னவென்றால், மற்ற நாடுகள் இந்த விஷயத்தில் கண்டிப்பாக உள்ளன. அவர்கள் தங்களுடைய குடிமக்களுக்கு வசதியில்லாத விமானங்களைக் குறைக்கிறார்கள். ஆனால், இந்த விஷயத்தில் நாம் வலுவற்றிருக்கிறோம். நம்முடைய விமானநிலையங்கள் இரவு 11மணிமுதல் காலை 5 மணி வரை மூடப்படவேண்டும் என்று நாம் வலியுறுத்துவதில்லை. எங்களுடைய விமான நிறுவனங்கள் எங்களுடைய குடிமக்களுக்குப் பொருந்தும் நேரங்களில் தான் விமானங்களை இயக்கும், உங்களுடைய குடிமக்களுக்குப் பொருந்தும் நேரத்தில் இல்லை என்று நாம் சொல்வதில்லை. அது நடக்கும்வரை, இந்தியா குறைந்த ஆற்றல் கொண்ட நாடாகவே இருக்கும். குறைந்தபட்சம் என்னுடைய பார்வை அதுதான்.

பல ஆண்டுகளுக்கு முன்னால், விமானப் போக்குவரத்து அமைச்சரிடம். இது ஏன் இப்படி இருக்கவேண்டும் என்று விசாரித்தேன். இந்தியர்கள் உலகின் மூன்றாம் நிலைக் குடிமக்களா என்ன? அவருடைய பதில் என்னைத் திகைக்கவைத்தது.' இதை இப்படிப் பாருங்கள்'. இதன்மூலம், விடுதியில் ஓர் இரவு தங்குகிற செலவை நீங்கள் சேமிக்கிறீர்கள், அத்துடன், நீங்கள் அங்கு சென்றபிறகு, வேலைக்குச் செல்வதற்குமுன்னால் கிட்டத்தட்ட ஒரு முழு நாள் கிடைக்கிறது. இதுதான் இந்தியாவின் எண்ணம் என்றால், உலகிலுள்ள மற்ற நாடுகளெல்லாம் ஏன் இப்படி நினைக்கவில்லை? அவர்களெல்லாம் முட்டாள்களா? 'ஆமாம்' என்றார் அவர்.' இந்தியர்கள் மிகவும் அறிவாளிகள்.'

இதைவிட மோசமான கெட்ட கனவொன்றை நீங்கள் கேள்விப்பட்டிருந்தால், தயவுசெய்து எனக்குச் சொல்லுங்கள்.■

Rotary RI Dist. 3202
Rotary International Dist 3202,
ROTARY TIRUPUR ELITE
Proudly Presents...
SUCCESSFUL 3rd YEAR
Rtn. MD. A.KARTHIKEYAN
District Governor, RI Dist 3202
மாபெரும் கார் கண்காட்சி
மற்றும் விற்பனை மேளா
Participation by World's Leading Car & Motorcycle Companies
6, 7 & 8 December 2019
TIRUPUR Rotary AUTO
EXPO 2019
Entrance Free
10.00 am to 7.00 pm
Your dream vechiles under one roof
Venue INDIA KNIT FAIR Convention Centre, (Near TEA Public School) TIRUPUR.
SKODA
Mercedes-Benz
KIA MOTORS
FORD
BMW
MINI COOPER
VOLKSWAGEN
AUDI
VOLVO
JEEP
TOYOTA
HYUNDAI
MG MOTORS
JAGUAR
NISSAN
DATSUN
MAHINDRA
RENAULT
TATA
BENELLI BIKE
HARLEY DAVIDSON
ROYAL ENFIELD
HONDA
Rtn. MD. P.R.KUMAR, Chairman
Tirupur Rotary Auto Expo - 2019
Advisor - Rotary Tirupur Elite
Cell : 98422 99744
Cars from Rs.2 Lakhs to 5 Crore
Motorcycles from Rs.50,000 to 50 Lakhs
Further Details Cell : 95436 73446, 92444 43388
Rtn. PHF. N.VASUDEVAN
President, Rotary Tirupur Elite

இன்டோர் மண்டல மாநாட்டில் சுவைக்க...



வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Regn. No. – TN/CCN/677/2019–2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: `35
Rotary News Tamil published on 1st of every month

Because **Caring** begins with a **Car**.

A Mercedes-Benz E-Class Saloon to be precise

Rtn. Ravishankar Dakoju with DG Rtn. Dr. Sameer Hariani (RID 3190) beside the car to be auctioned.

Dear Rotarians, last year, in front of a packed audience of Rotarians, I announced that I would be auctioning my 2017 Model Mercedes-Benz E-Class Saloon to help fund philanthropic projects. Today, it is time to fulfil that very promise and I need your help. I request you to be a part of this historic auction that will help us save our environment and also build good schools for rural students.

Buying a luxury car is always a life-changing decision, but this time it will also help change hundreds of lives forever.

"The auction is part of my ₹100-Crore pledge & the proceeds will go directly to TRF."

- Rtn. Ravishankar Dakoju

Please visit: **www.dakojufoundation.org** to be a part of this historic auction.

Mercedes-Benz E 220d | Mint condition | Driven less than 4000 Kms | Fully serviced

http://wismay.digital